விலை: 30.00
பக்கங்கள் :இருபத்து நான்கு
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஆனி 14 சனிக்கிழமை (29.06.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 192

கலயாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

## சஹ்ரானை நான் பார்த்ததே இல்லை

# பயங்கரவாதிகளுடன் எவ்வித தொடர்பும் இல்லை

## தெரிவுக்குழு முன் ரிஷாத் சாட்சி



(கொழும்பு)

பயங்கரவாதிகள் எவருடனும் எனக்கு எவ்வித தொடர்பும் இல்லை என தன்மீது முன் வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கு மறுப்புத் தெரிவித்து ரிஷாத் பதியுதீன் நேற்று பாராளுமன்ற தெரிவுக்குழுமுன் சாட்சியமளித்தார். (23ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் மனித புதைகுழிவழக்கு மீண்டும் ஒத்திவைப்பு

(மன்னார்)

மன்னார் சதொச வளாகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழி வழக்கு மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. மன்னார் நீதவான் மாணிக்க ▶24

## மரண தண்டனையால் போதையை ஒழிக்கமுடியாது

### ஜே.வி.பி தெரிவிப்பு

(கொழும்பு)

மரண தண்டனையை நிறைவேற்றுவதன் மூலம் போதைப் பொருள் வியாபாரத்தை ▶23

## மைத்திரி, மகிந்த சுயநலத்திற்காகவே 19ஆவது திருத்தத்தை வெறுக்கின்றனர்

### ஐ.தே.கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

சுய நல அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள அரசியலமைப்பின் 19வது திருத்தம் தடையாகக் காணப்படுகின்றது என்பதற்காகவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், எதிர்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷவும் இத்திருத்தத்தை வெறுக்கின்றார்கள். தனிப்பட்ட தேவைகளுக்காக ஜனநாயகத்தை உறுதிப்படுத்தியுள்ள 19வது திருத்தத்தை ஒருபோதும் இரத்து செய்ய இடமளிக்க முடியாது. அதற்கான அவசியமும் ஏற்படவில்லை என பாராளுமன்ற உறுப் ▶23

## காத்தான்குடி ஐ.எஸ் முகாமில் வாள்கள், ஆயுதங்கள் நேற்றும் கண்டெடுப்பு



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒல்லிக்குளம் பகுதியில் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகளின் முகாமில் இருந்து பெருமளவு வாள்கள் மற்றும் கத்திகள் கண்டெடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற தேடு ▶23

## எதிர்வரும் 7 நாட்களுக்குள் நாட்டில் மரணதண்டனை நிறைவேற்றப்படமாட்டாது

### சிறைச்சாலைகள் திணைக்களம்

(கொழும்பு)

எதிர்வரும் 07 நாட்களுக்குள் மரண தண்டனை எதுவும் நாட்டில் நிறைவேற்றப்பட மாட்டாது என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. சிறைச்சாலைகள் திணைக்களம் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு ▶23

## கல்முனைக்காக கதிர்காமத்திற்கு யாத்திரை

(கொழும்பு)

கல்முனை வடக்கு தமிழ்ப்பிரதேச செயலகத்தை தரமுயர்த்தக் கோரி கதிர்காமத்திற்கு யாத்திரை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கல்முனை வடக்குப்பிரதேச செயலகத்திற்கு முன்பாக கடந்த ▶23

## சகல முஸ்லிம் சமூகத்தையும் பயங்கரவாதிகளாக கருதுவதை ஏற்க இயலாது - ரவூப் ஹக்கீம்

(கொழும்பு)

தற்கொலை தாக்குதல் சம்பவங்களை தொடர்ந்து நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலை கவலைக்குரியதாகும். இந்த தாக்குதல்களுக்கு காரணமானவர்களை மையமாகக்கொண்டு முஸ்லிம் சமூகத்தை பயங்கரவாதிகளாக கருதுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

தற்போது எமது நாடு பாரிய சவாலை எதிர்கொண்டுள்ளது. இத்தகையதொரு நிலை ▶23

## 19ஆவது திருத்தத்தின் மூலமாகவே ஒக்டோபர் அரசியல் சதிப்புரட்சி முறியடிக்கப்பட்டது - எம்.ஏ.சுமந்திரன்

(கரணவாய்)

அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தின் மூலமாகத்தான் ஒக்டோபர் அரசியல் சதிப் புரட்சி முறியடிக்கப் பட்டது. அதனால்தான் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு 19ஆவது திருத்தத்தின் மீதும் கோபம். எங்கள் மீதும் கோபம் என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

கரவெட்டி புதுத்தோட்டம் விநாயகர் ஆலயத்தில், கிராம எழுச்சித் திட்டத்தில் அமைக்கப்பட்ட ஆலய முகப்பு திறப்பு விழா நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் நடை ▶23

## பயங்கரவாத தாக்குதலுடன் ரிஷாத்திற்கு தொடர்பில்லை

### தெரிவுக் குழுவுக்கு அறிவித்தார் பதில் பொலிஸ் மா அதிபர்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கும் ரிஷாத் பதியுதீனுக்கும் எந்த தொடர்பும் இல்லையென பதில் பொலிஸ்மா அதிபர்சந்தன விக்கிரம சிங்க பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு எழுத்து மூலமாக தகவல் வழங்கியுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## தனித்தனியாக செயற்பட்டால் நாட்டை கட்டியெழுப்ப முடியாது - ஜனாதிபதி

(கொழும்பு)

மக்கள் பிளவடைந்து தனித் தனியாக செயற்பட்டால், நாட்டை கட்டியெழுப்ப முடியாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொலனறுவையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் வைத்து அவர் இதனைக் கூறியுள்ளார். அனைத்து மக்களும் சகோ ▶24

## எந்த நேரத்திலும் பூஜித, ஹேமசிறி கைதாகலாம்?

(கொழும்பு)

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களை தடுக்க தவறியதாக பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோர் மீது குற்றவியல் ▶23

**இறைச்சிக் கோழி விற்பனைக்கு**

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் (பேரன்ஸ்) கோழி சுகாதார முறைப்படி சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

**(0779683028)**

நந்தினி பாம் இராசபாதை வீதி,கல்வியங்காடு

**நல்லூர் பாம் சென்ரர்**

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் ஊர்கோழி (பேரன்ஸ்) கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம். காலை 6.00 மணி முதல் மாலை 7 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். (C-6802)

19. முருகேசர் வீதி, நல்லூர்.


## ஏல விற்பனை

ஜி.எச்.ஏ.டீ.சில்வா அன் கோ 89A பெரிய கடை வீதி மன்னார் நிறுவனத்தில் 30.06.2017ற்கு முன்பாக வைக்கப்பட்ட அடைவு நகைகள் யாவற்றையும் 27.07.2019க்கு முன்பாக மீட்கவும் அல்லது மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தை செலுத்தி புதுப்பித்துக் கொள்ளவும்.

புதுப்பிக்க தவறின் 28.07.2019இல் ஏலத்தில் விற்கப்படும் என் பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

(9370) **ஜி.எச்.ஏ.டீ.சில்வா அன் கோ, மன்னார்.**

## திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கட்டப்பிராய் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய கிழக்கு வாசல் திறப்பு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

(ம-272)


வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 021 567 1532


## கண்ணீர்க் காணிக்கை



எமது பாடசாலையின் பிரதி அதிபர் திருமதி **மேகலா இராஜேந்திரன்** அவர்களின் அன்புத் தாயார்


**திருமதி புவனேஸ்வரி கோபாலரத்தினம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தி னருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்,**
யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை.

(9403)

## பணிநயந்து விடை கொடுத்தல்



**திரு. திருஞானம் ஜோண் குயின்ரஸ்**

**(மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், வட மாகாணம்)**

கிளிநொச்சி கல்வி வலயத்தில் 01.06.2017 முதல் 24.06.2019 வரை வலயக்கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றி **வட மாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராக** பதவியுயர்வு பெற்றுச் சென்றுள்ள திரு.**தி.ஜோண் குயின்ரஸ்** அவர்களது பணி நயந்து வாழ்த்துகின்றோம்.

**அதிபர்கள் சங்கம், கிளிநொச்சி மாவட்டம்**

## பணிநயந்து விடை கொடுத்தல்

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி வட மாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராகப் பதவியுயர்வு பெற்றுச் சென்ற

**திரு.தி. ஜோண் குயின்ரஸ்** அவர்களின்

பணிநயந்து விடை கொடுத்தல் நிகழ்வு

ஜூன் 2019 29

வட மாநிலத்து வலயங்கள் பலதின் அதிபதி
இடர் நிலத்து கல்வி மிளிர்வின் அகபதி
வியந்து விழிக்கும் விசாலமுறு பணிமயன்
உயர்ந்து நிற்கும் ஓயாப்பயணி
எண்ணியுயர் மாண்புடை தனித்துவங்கள் - கிளி
மண்ணிலும் பணி மகத்துவங்கள் பல பல
பாராட்டி வாழ்த்துகின்றோம்
பணிநயந்து விடை கொடுத்தோம்

**வாழ்த்துவோர்!**

1. கிளி/ கிளிநொச்சி இந்துக் கல்லூரி
2. கிளி/ கிளிநொச்சி மகா வித்தியாலயம்
3. கிளி/ வட்டக்கச்சி மத்திய கல்லூரி
4. கிளி/ உருத்திரபுரம் மகா வித்தியாலயம்
5. கிளி/பன்னங்கண்டி இ.த.க.வித்தியாலயம்
6. கிளி/ விவேகானந்த வித்தியாலயம்
7. கிளி/ வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம்
8. கிளி/ இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை
9. கிளி/ அக்கராயன் மகா வித்தியாலயம்
10. கிளி/கனகபுரம் மகா வித்தியாலயம்
11. கிளி/இராமகிருஸ்ண வித்தியாலயம்



**திரு. திருஞானம் ஜோண் குயின்ரஸ் SLEAS - I**

மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாணம்.

பாடசாலைகளின் சமூகத்தினர்

## "எந்தத் தனிநபர் மீதும் வெறுப்போ, கோபமோ இல்லை"

# எதிர்காலத் தலைமுறையைக் காப்பாற்ற மரணதண்டனை நிறைவேற்றம் அவசியம்

## ஐ.நா.பொதுச் செயலாளருக்கு மைத்திரி தெளிவுபடுத்தல்

(பொலநறுவை)

**சட்டவிரோத போதைப்பொருள் வர்த்தகத்திலிருந்து இலங்கையின் எதிர்காலத்தலைமுறையை காப்பாற்றுவதற்காக போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டவர் களுக்கு எதிராக மரணதண்ட னையை நிறைவேற்றவேண்டியது அவசியம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.**



மரணதண்டனையை நிறைவேற்றும் தனது திட்டம் குறித்து ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் நாயகத்திற்கு தெளிவுபடுத்தியுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பொலநறுவையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் நாயகம் அந்தோனியோ குட்ரேரஸ் தொலைபேசி உரையாடலை மேற்கொண்டதாக தெரிவித்த மைத்திரி இந்தத் தொலைபேசி உரையாடலின்போது மரணதண்டனையைநிறைவேற்றவேண்டும் என தான் தீர்மானித்தமைக்கான காரணங்களை தெளிவுபடுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

இலங்கையின் எதிர்காலத்தை காப்பாற்றுவதற்காகவும் சட்டவிரோத போதைப்பொருள் வர்த்தகத்திலிருந்து இலங்கையின் எதிர்கால தலைமுறையை காப்பாற்றுவதற்காகவும் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக மரணதண்டனையை நிறைவேற்றவேண்டியது அவசியம் எனவும் மைத்திரி தெரிவித்தார்.

எந்த தனிநபர் மீதான வெறுப்பு காரணமாகவும் கோபம் காரணமாகவும் நான் மரணதண்டனையை நிறைவேற்றுவதற்கான உத்தரவில் கைச்சாத்திடவில்லை. நாட்டையும்எதிர்கால தலைமுறையையும் காப்பாற்றுவதற்காகவே இந்த உத்தரவில் கைச்சாத்திட்டேன் என ஜனாதிபதி மைத்திரி மேலும் தெரிவித்தார். (இ-7)

---

## பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

### அமைச்சர் கிரியெல்ல தெரிவிப்பு

(கொழும்பு)

தென்னிந்தியாவிற்கும் யாழ்ப்பாணத்திற்குமான சுற்றுலா தொடர்புகளே அதிகமாக உள்ளன.

எனவே தென்னிந்தியாவுடனான வர்த்தக தொடர்புகளை பலப்படுத்தும் வகையிலும் அதே போல் வடக்கில் மக்களுக்கு தேவையான அபிவிருத்திகளை பெற்றுக்கொடுக்கும் வகையிலுமே பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் நடவடிக்கையெடுத்துள்ளதாக சபை முதல்வரான அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற சிவில் விமான சேவைகள் ஒழுங்கு விதிகள் சட்டம் மீதான விவாதத்தின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



பலாலி விமான நிலையத்தில் பயணிகள் விமானத்தை தரையிறக்குவதற்கான ஓடு பாதையை அமைக்க வேண்டியுள்ளது. தற்போது 70 பேர் பயணிக்கும் விமானத்தை மாத்திரமே தரையிறக்க முடியுமாக இருக்கின்றது.

இதனால் அதன் ஓடுபாதையை விரிவுபடுத்த நடவடிக்கையெடுக்க எதிர்பார்க்கின்றோம். இதன் மூலம் தென்னிந்தியாவுடனான எமது தொடர்புகள் மேலும் பலமடையும் எனத் தெரிவித்தார். (இ-7)

---

## சமுர்த்தி உத்தியோகத்தர் கொடூரமாக வெட்டிக்கொலை

### குடும்பம் மீது கைக்குண்டு வீச்சு கடற்படைச் சிப்பாய் மீது சந்தேகம்

(களுத்துறை)

களுத்துறையில் சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவர் கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்டமையினால் பரபரப்பு நிலை ஏற்பட்டது.

மத்துகம, தெல்கஹவத்தை பகுதியிலுள்ள வீடு ஒன்றுக்கு அருகில் குறித்த உத்தியோகத்தர் நேற்று அதிகாலை வெட்டிக்கொலை செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். இவ்வாறு படுகொலை செய்யப் பட்டவர் 44 வயதான கஹ ண்ணாகொட முதலிகே மனோஜ்குமார ஜயதிலக்க என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார்.

கடற்படைச் சிப்பாய் ஒருவரால் இவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டனர்.

அவர் உயிரிழந்த நபரின் உறவினர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். கொலை செய்யப்பட்டவரின் மனைவி உடுவெல மகா வித்தியாலயத்தில் அதிபர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கொலை செய்யப்பட்ட சமுர்த்தி அதிகாரி, அவரின் மனைவி மற்றும் பிள்ளைகளுடன் உறங்கிக் கொண்டிருந்த போது குறித்த சந்தேக நபர் கைக்குண்டு ஒன்றையும் வீட்டில் வீசியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

---

### படுகொலை செய்தேனும் ஆட்சியைப் பிடிக்க நினைக்கும்

## முகாபே போன்றதொரு சர்வாதிகாரி மகிந்த!





(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ சிம்பாவேயின் முன்னாள் ஜனாதிபதி ரொபர்ட் முகாபே போன்றதொரு சர்வாதிகாரி என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன குற்றம் சாட்டினார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றிய போதே ராஜித மேற்கண்டவாறு குற்றம் சாட்டினார்.

யுத்தம் நிறைவடைந்த போது அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நெல்சன் மண்டேலா போன்றதொரு தலைவராக உருவாகுமாறும் நோபல் சமாதான விருது பெற்றெடுக்க முடியும் எனவும் தாம் ஆலோசனை வழங்கியிருந்ததாகவும் ராஜித தெரிவித்தார்.

ஆனால் மகிந்த ராஜபக்ஷ சர்வாதிகாரி ரொபர்ட் முகாபே போன்றே செயற்பட்டு வந்தார்.

அந்த முகாபேக்கு எதிராக மக்கள் சக்தியை ஒன்று திரட்டியே புதிய அரசாங்கம் உருவாக்கப்பட்டது.

மகிந்த ராஜபக்ஷ இன்னமும் இனவாதக் கொள்கைகள் கோட்பாடுகளின் அடிப்படையிலேயே செயற்பட்டு வருகின்றார்.

மகிந்த ராஜபக்ஷ எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க போன்ற, மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள முடியாத, மோசமான கொள்கைகள் நிறைந்த ஓர் தலைவராவார்.

படுகொலை செய்தேனும் ஆட்சியைக் கைப்பற்ற முயற்சிக்கின்றார். அவ்வாறு செய்வதனால் எவ்விதப் பயனும் கிடையாது.

சிங்களத்தை அரச கரும மொழியாக பண்டாரநாயக்க அறிவித்தார். எனினும், அவரது மகள் சந்திரிகா 1994ஆம் ஆண்டில் சிங்கள தமிழ் மொழிகளுக்கு சம சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுத்தார்.

மொழிப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாத காரணத்தால் தமிழ் மக்கள் அதிகாரத்தைக் கோரியிருந்தனர்.

மாகாண சபை முறைமை அறிமுகம் செய்யப்பட்ட போது இந்த நாட்டில் பல்வேறு குழப்பங்கள் விளைவிக்கப்பட்டன.

இனவாத, மதவாத அடிப்படையிலான சக்திகளுக்கு எதிராக பொறுத்தது போதும் இனியும் பொறுக்க வேண்டியதில்லை.

குண்டுத் தாக்குதல்கள், துப்பாக்கிச் சூடுகளுக்கு மத்தியில் நாம் முன்னோக்கி நகர்வோம் என அமைச்சர் ராஜித சேனாரட்ன மேலும் தெரிவித்தார். (இ-7)

# கேள்வி அறிவித்தல்

**குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டம் (PSDG) 2019**
**பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்**

1. தலைவர், பிராந்திய பெறுகைக்குழு,பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் யாழ்ப்பாணம், உள்ளூராட்சி மன்றங்கள் சார்பாகதகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு வீதி வேலைகளுக்காக கோருகின்றார்.
2. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் 08.05.2019 ஆந் திகதிய 04/2016 (ii) ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் படி வட மாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்வி தாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஆயினும் தகுதியான கேள்விகள் கிடைக்காத பட்சத்தில் கீழ் குறித்த அட்டவணையில் உள்ள CIDA தரத்திற்கு மேற்பட்ட கேள்விதாரரின் கேள்விகள் கருத்தில் கொள்ளப்படலாம்.
3. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடிவீதி புனரமைப்புக்கு பொருத்தமான தரத்தில்நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
4. தேவையானதகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5இல் காட்டப்பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம். சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம் (தொலைபேசி : 0212222654, தொலைநகல் 021 2223410மின்னஞ்சல் : raclgjaffna@gmail.com இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் காலை 09.00 மணி முதல் பி.ப 14.00 மணி வரை 11.07.2019 வரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம். சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம் எனும் இடத்திலிருந்து 29.06.2019 திகதியிலிருந்து 15.07.2019 ம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் பி.ப 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000/- (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.
7. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலவலகம். சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 15.07.2019ம் திகதி பி.ப 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
8. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 77 (எழுபத்தேழு - 30.09.2019) நாட்கள் வரையும் செல்லுபடியாகும்.
9. கேள்விகள் தொடர்பாக இறுதித்தீர்மானம் பெறுகைக்குழுவினால் எடுக்கப்படும்.
10. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீடு தொகை ( மில்லியன்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41(1)/ PL2/PSDG/ VPS/02/2019 | நயினாதீவு நாவலடி வீதி புனரமைப்பு | 5.21 | 03 மாதங்கள் | C7 and C6 (வீதி ) | 52.500.00 | 28.10.2019 |

11) கேள்விகள் திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் 05.07.2019 அன்று மாலை 14.30 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கலந்துகொள்ள முடியும்.

**தலைவர்,** பிராந்திய பெறுகைக்குழு,
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம். யாழ்ப்பாணம்.
29.06.2019

# தெ.ஆ., வெற்றி

இலங்கைக்கு எதிரான உலகக் கிண்ண லீக் போட்டியில் டுபிளசி, அம்லா அரைசதம் கடந்து கைகொடுக்க தென்னாபிரிக்க அணி 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் எளிதாக வெற்றி பெற்றது.

இங்கிலாந்தில், 12வது ஐ.சி.சி., உலக கிண்ண கிரிக்கெட் தொடர் நடக்கிறது, செஸ்டர் லீ ஸ்ட்ரீட் நகரில் நடந்த லீக் போட்டியில் இலங்கை, தென்னாபிரிக்கா அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணித் தலைவர் டுபிளசி, களத்தடுப்பை தேர்வு செய்தார்.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, 49.3 ஓவரில், 203 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

**ஆறுதல் வெற்றி**

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய தென்னாபிரிக்க அணி, 37.2 ஓவரில், ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்த 206 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

டு பிளசி (96), அம்லா (80) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் இலங்கை சார்பில் மலிங்க ஒரு விக்கெட் வீழ்த்தினார்.


# வேலையாள் தேவை

சாவகச்சேரி நகர்பகுதியில்
அமைந்துள்ள பிரபல உணவகம்
ஒன்றுக்கு கொத்துவேலை, பிறைட்
றைஸ், றொட்டி வேலை ஆகிய
மூன்றும் தெரிந்த பணியாளர்
மட்டும் தேவை. தகுதியுடையவர்கள்
கீழ் உள்ள தொலைபேசி
இலக்கத்துடன் தொடர்பு கொண்டு
நேரில் வரவும்.

**T.P: 077 940 0963**


# INVITATION FOR BIDS
# TEACHING HOSPITAL, JAFFNA

The chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction works in the schedule below.

| | work/Service Details | Non-refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate BOQof the work (Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|---|
| 1 | Stainless Steel and Aluminium Works for Accident Emergency Unit | 500.00 | 75,000.00 | 91 | 3.7 | C8 |
| 2 | Renovation of Radiology Department Room and Renovation Works at Ward No 01 | 500.00 | 35,000.00 | 91 | 1.5 | C9 |
| 3 | Toilet Renovation at Ward No 03 | 500.00 | 25,000.00 | 91 | 1.2 | C9 |
| 4 | Tilling & Painting of SHO Quarters Room & Tilling of Kitchen Room, Aluminium works for Consultant Tea Lounge, Ward No. 22& Audiology Room and Fixing Curtin & Air Conditions at Museum and Fixing Curtin at Administrative Office, Speech Therapy Unit, Chest Unit and Neurology Clinic | 500.00 | 18,000.00 | 91 | 0.8 | C9 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building construction of grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD)
4. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.
5. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 01.07.2019 up to 15.07.2019 during office hours. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.
6. Sealed bids shall be delivered to the address below at or before 10.00 hrs on 17.07.2019, late bids will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna. soon after closing in the presence of bidders or their representatives who Choose to attend.

**Dirctor (Chairman),** Regional Procurement Committee,
Teaching Hospital, Jaffna. 29/06/2019

# மரண அறிவித்தல்



## திருமதி புவனேஸ்வரி கந்தசாமி

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி கந்தசாமி அவர்கள் நேற்று (28.06.2019) வெள்ளிக் கிழமை அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் கந்தசாமியின் (சந்திரன்) பாசமிகு மனைவியும் காலஞ் சென்றவர்களான சபாபதி - பார்வதி தம்பதிகளின் அன்பு மகளும் ஹம்ஷாயினி, ஹம்சன் (ஆசிரியர் - யா/நவாலி மகா வித்தியாலயம்), தர்சினி, சுதர்சன் (தொழினுட்ப உத்தியோகஸ்தர் - புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெகதீசன், பாலச்சந்திரன் (பொது முகாமையாளர் - தென்மராட்சி மேற்கு பலநோக்கு கூட்டுறவு சங்கம்), யமுனா, நிலானி ஆகியோரின் பாசமிகு மாமியும் பெர்கான் ஒபேட், பெர்சினா ஒபாலின், ஜெனோபி றெரினா, அனா தியோரா, செவாட் அரண்டின் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (29.06.2019) சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத் துக்காக கொட்டடி மெதடிஸ்த சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (9140)

நவாலி வீதி,
2ம் ஒழுங்கை, ஆனைக்கோட்டை.

தகவல்:-
குடும்பத்தினர்

# மரணதண்டனையால் சர்வதேச அங்கீகாரத்தை இலங்கை இழக்க நேரிடும்

## ஜேர்மன் எச்சரிக்கை



(பேர்லின்)

**மரணதண்டனையை மீண்டும் அமுல் படுத்துவதன் மூலம் இலங்கை சர்வதேசத்தின் மத்தியில் கொண்டிருக்கக் கூடிய அங்கீகாரத்தை இழக்கும் அபாயம் காணப்படுவதாக ஜேர்மனி எச்சரித்தது.**

போதைப்பொருள் கடத்தல் குற்றவாளிகள் நால்வருக்கு விரைவில் மரணதண்டனை நடைமுறைப்படுத்தப்படும் என்றும், அதற்குரிய ஆவணத்தில் கையெழுத்திட்டு விட்டதாகவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்தமையையடுத்து, இதுகுறித்து சர்வதேச நாடுகள் பலவும் கடும் அதிருப்தியையும் கண்டனத்தையும் வெளியிட்டுள்ளன.

ஜேர்மனியின் ஆளும் சமஷ்டிக் கட்சியின் மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான செயற்றிட்டங்களுக்கான வெளிவிவகார அலுவலகத்தின் ஆணையாளர் பார்பெல் கொஃப்லர், நான்கு கைதிகளுக்கு விரைவில் மரண தண்டனை நிறைவேற்றப்படவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பகிரங்கமாக அறிவித்தமை தொடர்பில் வெகுவாக அவதானம் செலுத்தியிருப்பதாகத் தெரிவித்தார்.

மரணதண்டனையை அமுல்படுத்துவதைத் தவிர்ப்பதன் ஊடாக கடந்த 40 வருடங்களுக்கும் அதிகமான காலம் மரண தண்டனை நிறைவேற்றத்தை நிறுத்திவைத்திருக்கும் நடைமுறையைத் தொடர்ந்து பேணுமாறும், கடந்த ஆண்டு டிசெம்பர் மாதத்தில் இலங்கை அதுவாகவே மரணதண்டனைக்கு எதிராக வெளிப்படுத்திய நிலைப்பாட்டைத் தொடர்ந்தும் முன்னெடுக்குமாறும் இலங்கை அரசாங்கத்திடம் கொஃப்லர் கேட்டுக் கொண்டிருப்பதுடன், நல்லிணக்கத்தையும் சமாதானத்தையும் மையப்படுத்தி முன்னோக்கிச் செல்லும் பாதையில் மரண தண்டனை நிறைவேற்றம் என்பது மறுபரிசீலனை செய்யப்பட்ட வேண்டியதொன்றாகும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

## கைதடியில் நாளை கருத்தமர்வு

(சாவகச்சேரி)

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் மற்றும் கைதடி மேற்கு சரஸ்வதி இளைஞர் கழகம் ஆகியன இணைந்து நடத்தும் நல்லிணக்க பொறிமுறையில் நிலைமாறுகால நீதி மற்றும் தகவல் பெறுவதற்கான உரிமைச் சட்டம் தொடர்பான கருத்தமர்வு மற்றும் கலை நிகழ்வு நாளை 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கைதடி சரஸ்வதி வைர விழா மண்டபத்தில் இளைஞர் கழகத் தலைவி ஜெ.விஜூஜா தலைமையில் இடம் பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன், சிறப்பு விருந்தினர்களாக கைதடி மேற்கு கிராம உத்தியோகத்தர் நா.தர்சினி, சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் இ.ஜானகி, சாவகச்சேரி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் செ.ஜெயபாலன், கைதடி சனசமூக நிலையங்களின் ஒன்றியத் தலைவர் இ.கந்தசாமி, கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக்கழக தலைவர் க.சிறிதரன், கைதடி ப.நோ.கூ.சங்கத் தலைவர் பா.செல்லத்துரை, சரஸ்வதி சனசமூக நிலையத் தலைவர் வே.மோகன்தாஸ் மற்றும் கைதடி தென் மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி ஜெ.நயார்னி ஆகியோர் கலந்து கொள்வர். (5-30)

## பிணைமுறி விவகாரம்; அர்ஜுன மகேந்திரனுக்கு எதிராகக் குற்றப்பத்திரம்

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி பிணைமுறிகள் மோசடி தொடர்பில் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் மற்றும் பேப்பெர்ச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அலோஷியஸ் உள்ளிட்ட 10 பிரதிவாதிகளுக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சட்டமா அதிபரால் நேற்று மூவரடங்கிய விசேட மேல் நீதி



மன்றத்தில் இந்தக் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. (இ-7)

## விதிகளை மீறிய வர்த்தகர்களுக்கு ரூ.30 ஆயிரம் அபராதம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் சட்டங்களை மீறிய வர்த்தகர்களுக்கு மல்லாக நீதவான் நீதிமன்றம் நேற்று 30 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்த. மல்லாகம் நீதவான் நீதிமன்றத்துக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களில் பாவனையாளர் அதிகார சபையினரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போது பாவனையாளர் சட்டங்களை மீறிய 7 வர்த்தகர்களுக்கெதிராக மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கிலேயே இவ் அபராதம் விதிக்கப்பட்டது. (5-10)

## தென்மராட்சி காற்றாலை விடயம் தற்பொழுது ஆளுநரின் கையில்

(சாவகச்சேரி)

தென்மராட்சி மறவன்புலோ பகுதியில் பிரதேச சபை மற்றும் பிரதேச செயலகத்தின் அனுமதி இன்றி அமைக்கப்பட்டு வரும் காற்றாலை மின் உற்பத்தி நிலையம் தொடர்பாக சாவகச்சேரி பிரதேசசபையின் மாதாந்த அமர்வின் போது தவிசாளர் மற்றும் உறுப்பினருக்கு இடையே கடும் வாக்குவாதம் இடம்பெற்றது.

இயற்கை வளங்களை அழித்தமை மற்றும் பிரதேசசபையின் அனுமதி இன்றி பிரதேசசபை எல்லைக்குள் கட்டடம் அமைப்பது ஆகிய செயற்பாடுகளுக்காக காற்றாலை மின் உற்பத்தி நிலைய ஒப்பந்தகாரர் மீது பிரதேசசபையால் வழக்கு தொடர்வதாக சபையில் தீர்மானிக்கப்பட்ட போதிலும் இன்றுவரை வழக்குத் தொடராமைக்கான காரணம் என்னவென ஈ.பி.டி.பி உறுப்பினர் நிமலரோகன் கேள்வி எழுப்பிய போதே வாக்குவாதம் இடம்பெற்றது.

ஈ.பி.டி.பி உறுப்பினரின் கேள்விக்கு தவிசாளர் தற்போது இவ் விடயம் சபையின் அதிகாரத்தை மீறி ஆளுநரின் கைகளுக்கு சென்று விட்டது. என்னுடைய அதிகாரத்தை மீறி எந்த நடவடிக்கையையும் நான் எடுக்க மாட்டேன். ஆகவே எம்மால் வழக்கு தொடர முடியாது எனத் தெரிவித்திருந்தார்.

காற்றாலை மின் உற்பத்தி நிலையத்தாரின் செயற்பாட்டிற்கு சாவகச்சேரி பிரதேசசபைத் தவிசாளரும் உடந்தையா? என கடந்த சில வாரங்களுக்கு முன்னர் இடம்பெற்ற காற்றாலைக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் பிரதேச சபை உறுப்பினர்கள் கேள்வி எழுப்பி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-30)

## இராசி பலன்

29.06.2019
ஆனி 14 , சனிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
துவாதசி பின்னிரவு 4.50 மணிவரை
பரணி முற்பகல் 8.40 மணிவரை
சுபநேரம் 2.56-4.26 மணிவரை
இராகுகாலம் 8.56-10.26 மணிவரை
வைஷ்ணவ ஏகாதசி விரதம்
கார்த்திகை விரதம், சித்தாபிர்தம்
வளவன்

கிரகநிலை: சந் | சூரி, சுக், ராகு, புத | செவ் | சனி, கேது | குரு
சந்திராஷ்டமம்: விசாகம்

**மீனம்:** உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, காரிய அனுகூலமுண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**மேடம்:** பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், கற்பனை மிகுதியான நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும்.

**இடபம்:** எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

**மிதுனம்:** மனதில் இனம்புரியாத கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**கும்பம்:** நண்பர்கள் மூலம் சுப செய்திகள் வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்க முற்படுவீர்கள்.

**கடகம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.

**மகரம்:** வியாபார விருத்தியுண்டு, பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**சிம்மம்:** எதிர்பாராத வகையில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**தனுசு:** கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு, விருந்திகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்:** பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள், உறவினர்களின் சந்திப்பால் மகிழ்ச்சி கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**துலாம்:** காலை நேரம் கலகலப்பும் மாலை நேரம் சுசெலப்புமாக அமையும், எடுத்த காரியங்களில் நிதானத்துடன் நடந்து கொள்ள வேண்டிய நாள்.

**கன்னி:** புதிய திருப்பங்கள் ஏற்படலாம், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், காலையில் தொடங்கிய காரியங்கள் மாலைநேரம் நிறைவேறலாம்.

# கலாசாரத் திணைக்களத்தால் மூத்த கலைஞர்கள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

மூத்த கலைஞர்களை கௌரவிக்கும் "அவதம்" நிகழ்ச்சித் திட்டத்தில் இவ் வருடம் (2019) யாழ்.மாவட்டத்தில் 150 கலைஞர்கள் கௌரவிக்கப்படவுள்ளதாக யாழ்.மாவட்டச் செயலகக் கலாசார உத்தியோகத்தர் தெரிவித்தார்.

இலங்கை முழுவதும் தேசிய ரீதியில் செயற்படுத்தப்படும் இத் திட்டத்தில் மூத்த கலைஞர்களுக்கு கௌரவமளிக்கப்படுவதுடன் அவர்களுக்கு சான்றிதழும் பரிசுப் பொருட்களும் வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்ச்சித் திட்டத்திற்காக யாழ்.மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலிருந்தும் 10 கலைஞர்கள் கௌரவிக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (5-10)

# பிணக்கிற்குரிய அரச காணிகளை பதிவு செய்யுமாறு ஆளுநர் அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்திலுள்ள அரச காணிகள் பகிர்ந்தளிப்பில் ஏதேனும் குறைபாடுகள், முறைகேடுகள் இடம்பெற்றால் அக்காணிகள் தொடர்பான விபரத்தை காணி அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யுமாறு வட மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வடக்கு மாகாண மாவட்டங்களில் மீள்குடியமர்த்தப்பட்ட அரச காணிகள் தொடர்பான பிணக்குகளைத் தீர்த்து வைக்கும் விசேட வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அரச காணி தொடர்பில் பல்வேறு தரப்பினரிடமிருந்து பல்வேறு வகையான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அதாவது போரின் போது ஆவணங்கள் தொலைந்தமை, முப்படையினர் காணிகளை சுவீகரித்தமை, இடம்பெயர்ந்த இடங்களில் உள்ள காணிகளில் மீள்குடியேறாமை, சட்டத்துக்குப் புறம்பான வகையில் காணி கைமாற்றப்பட்டமை போன்ற பல குற்றச்சாட்டுகள் பொதுமக்களிடமிருந்து கிடைக்கப் பெற்றுள்ளன.

ஆகவே குறித்த பிரச்சினைகள் காணப்படுகின்ற காணி உரிமையாளர்கள் தங்கள் காணி உள்ள பிரதேச செயலகத்தில் பதிவை மேற்கொள்ளுமாறு ஆளுநர் கேட்டுக் கொண்டார். (5-10)

# புகையிலை சார் உற்பத்திப் பொருட்களுக்குத் தடை



(சாவகச்சேரி)

தேசிய போதைப்பொருள் ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகர சபையினரின் கோரிக்கைக்கு இணங்க நேற்று வெள்ளிக்கிழமை சாவகச்சேரி வர்த்தகர்கள் புகைத்தல் மற்றும் புகையிலை சார் உற்பத்திப் பொருட்களின் விற்பனையை தடை செய்தனர்.

இது தொடர்பாக அறிவித்தல் பதாகைகளையும் வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களின் முன்பாக காட்சிப்படுத்தினர். (இ-30)

# முத்திரைத் தீர்வை நிதியில் ஐந்து வீதிகள் புனரமைப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையினர் சபையின் முத்திரைத் தீர்வை நிதியிலிருந்து ஐந்து வீதிகளைப் புனரமைக்க நடவடிக்கை எடுத்திருப்பதாக பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் தெரிவித்துள்ளார். 8.3 மில்லியன் ரூபாய் முத்திரைத் தீர்வை நிதியில் சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மெய்கண்டான் வீதி, தேனாம் பொக்கணை வீதி, முத்தலாவத்தை வீதி, வேவில் மயான வீதி மற்றும் கரம்பைக்குறிச்சி - இயற்றாலை ஊர் எல்லை வீதி ஆகிய வீதிகள் புனரமைக் கப்படவுள்ளன. சாவகச்சேரி பிரதேசசபைத் தவிசாளர் இவ்வருடம் பிரதேசசபை எல்லைக்குள் குறைந்தது இருநூறு வீதிகளையாவது புனரமைக்க வேண்டும் என்ற நோக்கோடு செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. கம்பரெலியத் திட்டத்தின் ஊடாக அதிகளவான வீதிகள் பிரதேச சபை எல்லைக்குள் அமைக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (5-30)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கந்தர்மடம் அரசடி அருள்மிகு செவ்வநாகபூஷணி அம்பாள் தேவஸ்தான மஹோற்சவம் எதிர்வரும் 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15 தினங்கள் நடைபெறும்.

இம் மஹோற்சவத்தில் 15 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7.15 மணியளவில் வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து இரதோற்சவமும் மறுநாள் செவ்வாய்க்கிழமை 10 மணியளவில் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (5)

# தொண்டர் ஆசிரியர் நியமனத்தில் முறைகேடு? விசாரணைக்குத் தயாராகும் ஆளுநர் செயலகம்

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்களுக்கு நேற்று முன்தினம் வழங்கப்பட்ட நியமனத்தில் முறைகேடு இடம்பெற்றதாக வடமாகாண ஆளுநர் செயலகத்துக்கு முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளதாக ஆளுநர் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மிக நீண்டகாலமாக தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றி வந்த 1119 ஆசிரியர்களுக்கு திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் பிரதமர் ரணில் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நியமனம் வழங்கப்பட்டது.

இதில் வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 378 தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது.

இந்நிலையில் வழங்கப்பட்ட நியமனத்தில் தொண்டராசிரியர் சேவைக்காலம் தொடர்பிலும் ஓய்வுபெற்ற அதிபர்களின் பதவி முத்திரை பொறிக்கப்பட்டமை தொடர்பான முறைகேடுகள் இடம்பெற்றதாகத் தெரிவித்து வட மாகாண ஆளுநர் செயலகத்துக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அது தொடர்பில் ஆளுநர் செயலகம் விசாரணை நடத்தத் தயாராகி வருவதாக தெரிய வருகிறது. (இ-10)

# கட்டுப்பாட்டு விலையை மீறி விற்பனை; ஒரு இலட்சத்து 40 ஆயிரம் தண்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருநெல்வேலிப் பகுதியில் கட்டுப்பாட்டு விலையை மீறி அரிசி விற்பனை செய்த வர்த்தகர்களுக்கெதிராக நேற்று முன்தினம் வியாழக்கிழமை யாழ்.நீதவான் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்தார்.

பாவனையாளர் அலுவலர்கள் அதிகார சபையின் உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றி வளைப்பின் போது அதிகார சபையின் சட்டதிட்டங்களை மீறிய 7 வர்த்தகர்கள் குறித்த இரு பகுதிகளில் கண்டு பிடிக்கப்பட்டனர்.

இவர்களுக்கெதிராக நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டபோது குறித்த அபராதம் நீதவானால் விதிக்கப்பட்டது. (5-10)



யாழ்.நல்லை கலாமந்திர் நடனப்பள்ளி நடத்திய சதங்கை நாதம் நடன ஆற்றுகை நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி முதல்வர் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவக இசைத் துறை தலைவர் கலாநிதி த.பிரதீபன், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் நாட்டியக்கலைமணி யசோதரா விவேகானந்தன், வேம்படி மகளிர் கல்லூரி முன்னாள் ஆசிரியர் வசந்தி குஞ்சிதபாதம், கௌரவ விருந்தினராக யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அதிபர் லூடேவிக்கா மகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்:-ஐ.சிவசாந்தன்)

# கதிர்காமப் பாத யாத்திரை அரச அங்கீகாரத்துடன்

# தேசிய புனித யாத்திரையாகப் பிரகடனப்படுத்தப்படும்

## அமைச்சர் மனோ திட்டவட்டம்



(அம்பாறை)

**பாரம்பரியமாக வடக்கு, கிழக்கு, மலையகப் பகுதிகளிலிருந்து வருடாந்தம் கதிர்காமத்திற்கு மேற்கொள்ளப்பட்டுவரும் புனித பாதயாத்திரை அரச அங்கீகாரத்துடன் தேசிய புனித யாத்திரையாகப் பிரகடனப்படுத்தப்படும் என்று தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக முன்னேற்ற இந்து சமய அலுவல்கள் அமைச்சரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவருமான மனோகணேசன் தெரிவித்தார். நாட்டில் தமிழர்கள் தங்களின் இருப்பை நிலைநிறுத்துவதோடு சகோதர இன, மத மக்களை அரவணைக்க வேண்டும். அப்போதுதான் சமூக நல்லிணக்கத்தைப் பாதுகாத்துக் கொண்டு தமிழ் மக்களின் இருப்பை உறுதிப்படுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.**

அம்பாறை உகந்தை மலை ஸ்ரீமுருகன் ஆலயத்திற்கான பிரதான வீதி நுழைவாயில் கோபுரத்தை நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழர்கள் தங்களின் இருப்பை நிலை நிறுத்திக் கொள்வதற்காக பல போராட்டங்களை நடத்தி வருகின்றனர். நாம் நமது இருப்பைப் பாதுகாத்துக் கொள்வதற்கு போராடுகின்ற அதேநேரம் இந்த நாட்டில் உள்ள சகோதர இன, மத மக்களையும் அனுசரித்துச் செல்ல வேண்டும்.

இன்று நாட்டில் நிதானமாகவும் முதிர்ச்சியுடனும் தமிழர்களின் இருப்பை நிலை நிறுத்தி வருகின்றோம். ஒரு புறத்தில் தமிழர்களின் இருப்பை நிலை நிறுத்துவதோடு சகோதர இனத்தவர்களின் அன்பையும் ஆதரவையும் பெற்றுக் கொள்ள வேண்டும்.. இது சமாந்தரமாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

ஒன்று முந்தி மற்றொன்று பிந்தியும் இடம்பெறுமானால் சகோதர இன, மத மக் களின் எதிர்ப்பை எதிர்கொள்வதோடு நாம் காணாமல் போய்விடுவோம்.

எனவே தமிழர்களின் இருப்பையும் சகோதர இன மக்களின் அரவணைப்பையும் சமாந்தரமாக முன்னெடுக்க வேண்டும்.

இந்நிகழ்வில் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார், அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் மற்றும் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் டி.எம். எல்.பண்டாரநாயக்கா ஆகியோரும் உரையாற்றினர்.

இதனைத் தொடர்ந்து கிழக்கிலங்கை வரலாற்றுச் சிறப்புமிகு உகந்தை ஸ்ரீமுருகன் ஆலயத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரனின் அழைப்பின் பேரில் விஜயம் செய்த அமைச்சர் மனோ கணேசன், ஆலயத்திற்கான பிரதான வீதி நுழைவாயிலை திறந்து வைத்ததுடன் கதிர்காம பாதயாத்திரிகர்களுக்கான குமண காட்டுவழிப் பாதையையும் சம்பிரதாயபூர்வமாக அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிகாரிகள் மற்றும் மதகுருமார்கள் ஆகியோர் திறந்து வைத்தனர். (இ-7)

# பறங்கியாறு சிறாட்டிக்குளம் பகுதியில் தற்காலிக அணை அமைக்க நிதி ஒதுக்கீடு

## பூர்த்தி செய்ய ஆளுநர் உடனடி நடவடிக்கை



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட நீர்ப்பங்கீடு தொடர்பான விசேட கூட்டம் ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தலைமையில் மாங்குளத்தில் அமைந்துள்ள வடமாகாண நீர்ப்பாசன திணைக்களத்தின் தலைமையகத்தில் கடந்த 24 ஆம் திகதி இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வடமாகாணத்தின் நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழுள்ள குளங்களிலிருந்து பொதுமக்களுக்கு தேவையான குடிநீரினை பெற்றுக்கொள்வதற்கு நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் குறித்து முல்லைத்தீவு மாவட்ட கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும், நீர்ப்பாசன மற்றும் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பொறியியலாளர்களுக்கும் ஆளுநருக்குமிடையில் இதன்போது கலந்துரையாடப்பட்டு சாதகமான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இக் கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்த ஆளுநர் தீர்மானங்களெதுவும் மேற்கொள்ளாது வெறுமனே கலந்துரையாடல்களுடன் முடிவுபெறும் கூட்டங்களில் கலந்துகொள்வதிலும் பார்க்க இவ்வாறு மக்களுக்கு பயனுள்ள தீர்மானங்களை மேற்கொள்ளக்கூடிய கூட்டங்களில் கலந்து கொள்ள விரும்புகிறேன் எனத் தெரிவித்தார்.

இதேவேளை பறங்கியாற்றிலிருந்து வீணாக வெளியேறும் நீரினை தடுத்து வவுனிக்குளத்திற்கு திருப்புவதன் ஊடாக மாந்தை கிழக்கு மக்களின் குடிநீர்த் தேவையினை உடனடியாக பூர்த்திசெய்ய முடியுமென்றும் அவ்வாறு வீணாக வெளியேறும் நீரினை பறங்கியாற்றின் சிறாட்டிக்குளம் பகுதியில் தற்காலிக அணையொன்றினை உருவாக்குவதன் மூலம் சேமித்து மக்களின் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்வதற்கு உடனடியாக நான்கு இலட்சம் ரூபாய் தேவைப்படுவதாக மாந்தை கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் ஆளுநரின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தார்.

உடனடியாக இது தொடர்பில் பொறியியலாளர்களுடன் கலந்துரையாடிய ஆளுநர், பொறியியலாளர் குழுவொன்றை குறித்த பகுதிக்கு அனுப்பியதுடன் அவர்களின் முன்மொழிவுடன் தற்காலிக அணையினை கட்டுவதற்கு உடனடியாக தேவையான நான்கு இலட்சம் ரூபாவினை மாந்தை கிழக்கு பிரதேச சபை தவிசாளர் மகாலிங்கம் தயானந்தனிடம் வழங்கினார். (9)

# மரண தண்டனை விவகாரம் சர்வதேசத்தின் மத்தியில் இலங்கையைத் தனித்துவிடும்

## மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

போதைப்பொருளுடன் தொடர்புடைய குற்றங்களுக்கு மரணதண்டனையை நடைமுறைப்படுத்துவதானது ஒருமித்து இயங்கும் சர்வதேசத்தின் மத்தியில் இலங்கை தனித்து விடப்படும் சூழ்நிலையை உருவாக்கும். எனவே மரண தண்டனையை அமுல்படுத்தும் திட்டத்தை ஜனாதிபதி உடனடியாக நிறுத்த வேண்டும் என மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் வலியுறுத்தியது.

அத்தோடு மரண தண்டனையை நீக்குவதற்கான சட்ட மறுசீரமைப்புக்களை பாராளுமன்றம் விரைந்து மேற்கொள்ள வேண்டும் என்றும் அந் நிலையம் வலியுறுத்தியது. இது தொடர்பில் குறித்த நிலையம் விடுத்துள்ள அறிக்கையில்,

மரணதண்டனையை நடைமுறைப்படுத்தப் போவதாக ஜனாதிபதி மைத்திரி அறிவித்தமை தொடர்பில் நாங்கள் அவதானம் செலுத்தியிருக்கிறோம்.

நாட்டில் மீண்டும் மரண தண்டனையை அமுல்படுத்துவது என்பது பல தசாப்த காலமாக சர்வதேச கொள்கைளுக்கமைய இலங்கை பேணிவரும் நடைமுறைகளுக்குஎதிரானதாகவே அமையும். 1976 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை மரண தண்டனையை நிறுத்தி வைக்கும் நிலைப்பாட்டைக் கடைப்பிடித்து வருகிறது.

இந்நிலையில் மரண தண்டனை வழங்கப்படவுள்ளவர்களின் விபரங்கள், அவர்கள் எந்தக் குற்றத்திற்காகத் தண்டனை அனுபவித்து வருகின்றார்கள், அவர்களுக்கு மரணதண்டனை நிறைவேற்றப்படவுள்ள திகதி உள்ளிட்ட தகவல்கள் பகிரங்கப்படுத்தப்படாமல் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளமையும் வெகுவாக அவதானத்திற்குட்படுத்தப்பட வேண்டியதொன்றாகும்.

உலகளாவிய ரீதியில் மரண தண்டனையை இல்லாதொழிப்பதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவரும்தருணத்தில்மரண தண்டனை நிறைவேற்றம் அதற்கு எதிரானதாகவே அமையும்.

எனவே மரணதண்டனையை அமுல்படுத்தும் திட்டத்தை ஜனாதிபதி உடனடியாக நிறுத்த வேண்டும். அத்தோடு மரணதண்டனையை நீக்குவதற்கான சட்ட மறுசீரமைப்புக்களை விரைந்து மேற்கொள்ளுமாறு பாராளுமன்றத்திடம் வலியுறுத்துகின்றோம்.

மேலும் மரணதண்டனைக்கு எதிராக நிலைப்பாட்டை நாட்டுமக்கள் அனைவரும் எடுப்பதுடன், விரைவான மறுசீரமைப்பை வலியுறுத்துமாறும் கேட்டுக் கொள்கிறோம் என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(இ-7)

## தமிழின் தொன்மையையும் தொடர்ச்சியையும் உலகறியச் செய்யும்

# பத்தாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு

## ஐயாயிரத்திற்கும் அதிகமான தமிழ் ஆய்வாளர்களும் தமிழ் ஆர்வலர்களும் சிக்காக்கோவில் சங்கமமாகின்றனர்

10 ஆம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு அமெரிக்க நாட்டில் உள்ள சிக்காகோ மாநிலத்தில் 2019 ஆம் ஆண்டு, ஜூலை மாதம் 4 ஆம் திகதி முதல் 7 ஆம் திகதி வரை நடைபெறுகின்றது. இந்த மாநாடு உலகத் தமிழ் ஆய்வு மன்றத்தின் துணையோடும் வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப், பேரவை (FeTNA) மற்றும் சிக்காகோ தமிழ்ச் சங்கம் (CTS) ஆகிய அமைப்புக்களின் ஒத்துழைப்போடும் இடம்பெறுகின்றது.

### மாநாட்டின் பின்னணி

உலகின் பல்வேறு நாடுகளில் பணியாற்றிவரும் தமிழ் அறிஞர்களை ஒருங்கிணைத்து தமிழ் ஆராய்ச்சியை ஒருமுகப்படுத்தவும் வளப்படுத்தவும் தமிழறிஞர்கள் கூடி நடத்தும் மாநாடாக உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு விளங்குகிறது. தமிழ்த் தூது தனிநாயகம் அடிகளாரின் பெருமுயற்சியால் முதலாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு மலேசிய நாட்டின் கோலாலம்பூர் நகரில் 1966 ஆம் ஆண்டு இடம்பெற்றது. இரண்டாவது மாநாடு 1968 ஆம் ஆண்டு சென்னையிலும் மூன்றாவது மாநாடு 1970 ஆம் ஆண்டு பாரீசிலும் நான்காவது மாநாடு 1974 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலும் ஐந்தாவது மாநாடு 1981 ஆம் ஆண்டு மதுரையிலும் ஆறாவது மாநாடு 1987 ஆம் ஆண்டு கோலாலம்பூரிலும் ஏழாவது மாநாடு 1989 ஆம் ஆண்டு மொரீசியசிலும் எட்டாவது மாநாடு 1995 ஆம் ஆண்டு தஞ்சாவூரிலும் ஒன்பதாவது மாநாடு 2015 ஆம் ஆண்டு கோலாலம்பூரிலும் நடத்தப்பட்டன.

இம்மாநாடுகளை அரசியல் தலையீடு இன்றி தமிழ் ஆராய்ச்சிக்கு முதல் இடம் கொடுத்து நடத்துதல் சிறந்தது என உலகத் தமிழ் ஆய்வு மன்றத்தின் அலுவலர்களும் தமிழ் அறிஞர்கள் பலரும் பல காலம் எண்ணி வந்தனர். இக்கருத்தை முன் னெடுத்துச் சென்று இனிவரும் ஆராய்ச்சி மாநாடுளை தமிழ் ஆராய்ச்சிக்கு முதல் இடம் கொடுத்து நடத்த வேண்டும் என்று துணிந்து ஊக்கம் அளித்தவர் முன்னாள் உலகத் தமிழ் ஆய்வு மன்றத்தின் துணைத் தலைவரும் சிறந்த விஞ்ஞானியும், பெரும் தமிழ் அறிஞரும் கவிஞருமான மறைந்த முனைவர் வி.சி.குழந்தைசாமி ஆவார். அவரே அமெரிக்கா வாழ் தமிழ் மக்கள் ஒன்று சேர்ந்து அடுத்த ஆராய்ச்சி மாநாட்டை இந்தப் புது வகையில் நடத்த வேண்டும் என்று ஊக்கம் அளித்தார். இக் கருத்தை உலகத் தமிழ் ஆய்வு மன்ற அலுவலர்களிடமும் தெரிவித்தார். அவர் உந்துதலாலும் அளித்த ஊக்கத்தினாலும் வட அமெரிக்க தமிழ்ச் சங்கப் பேரவையும் சிக்காகோ தமிழ்ச் சங்கமும் அடுத்த மாநாட்டை புது முறையில் நடத்த முன் வந்தன. 2015 ஆம் ஆண்டு கோலாலம்பூரில் நடந்த ஒன்பதாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் பங்குகொண்ட தமிழ் ஆர்வலர் மருத்துவர் சோம இளங்கோவனின் உதவியோடு மாநாட்டில் ஆராய்ச்சிக் கட்டுரை வழங்கியும் தலைமை தாங்கியும் பங்கு கொண்ட தமிழ்ப் புலவர் முனைவர் பிரான்சிசு ச.முத்து அடுத்த மாநாட்டை வட அமெரிக்காவில் நடத்த வேண்டும் என்றும் அதற்கு உலகத் தமிழ் ஆய்வு மன்றம் ஒப்புதலும் ஊக்கமும் அளித்தல் வேண்டும் என்றும் அழைப்பு விடுத்தனர். இந்த அழைப்பை உலகத் தமிழ் ஆய்வு மன்றமும் அதன் தலைவர் முனைவர் மாரிமுத்துவும் துணைத் தலைவர் முனைவர் பொன்னவைக்கோவும் ஏற்றுக் கொண்டனர்.

தற்போது 2019 ஆம் ஆண்டு சிக்காகோவில் நடைபெறவுள்ள பத்தாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியாகிவிட்டன. பெரும் தமிழ் ஆர்வலரும் முன்னாள் அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் தலைவருமான மருத்துவர் சோமா இளங்கோவன் மாநாட்டின் ஒருங்கிணைப்புக் குழுவின் (Organizing Committee) தலைவராக பணிபுரிந்து வருகின்றார். இந்த ஒருங்கிணைப்புக் குழுவின் உறுப்பினர்களாக அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் தலைவர் சுந்தர் குப்புசாமியும் சிக்காகோ தமிழ்ச் சங்கத்தின் தலைவர் மணி குணசேகரனும் பொறுப்பேற்றுள்ளனர். புலவர் முனைவர் பிரான்சிசு ச.முத்து ஆய்வுக் குழுவின் (Academic Committee) தலைவராகவும் தற்காலத்தின் மிகச் சிறந்த தமிழ் ஆய்வாளராக விளங்கிவரும் பன்மொழிப் புலவர் முனைவர் பி.மருதநாயகம் ஆய்வுக் குழுவின் இணைத் தலைவராகவும் பொறுப்பேற்றுள்ளனர். உலகத் தமிழ்ப் பேரறிஞர் பலர் அறிவுரைக் குழுவிலும் (Advisory Panel) மாநாட்டின் ஆய்வுக் குழுவிலும் (Academic Committee) பங்கேற்றுள்ளனர். ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் உள்ள ஐம்பெரும் தமிழ் அறிஞர்கள் ஆய்வுக் குழுவின் துணைத் தலைவர்களாக பணிபுரிகின்றனர்.

### மாநாட்டின் பொது அமர்வு

ஜூலை மாதம் 6 மற்றும் 7 ஆம் திகதிகளில் மாநாட்டின் ஆய்வரங்குகள் இடம்பெறும். 6 ஆம் திகதி காலை 8.00 தொடக்கம் 9.45 மணிவரை பொது அமர்வு (Plenary Session) இடம்பெறும். இப்பொது அமர்வின் போது 10 ஆம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் ஆய்வுக் குழுத் தலைவரும் அனைத்துலகத் தமிழ் ஆய்வு மன்றத்தின் பொதுச்செயலாளருமாகிய புலவர், முனைவர் பிரான்சிசு ச.முத்துவும் இம்மாநாட்டின் ஆய்வுக்குழு இணைத் தலைவரும் அனைத்துலகத் தமிழ் ஆய்வு மன்றத்தின் ஒருங்கிணைப்பாளருமான பேராசிரியர் முனைவர் ப.மருதநாயகமும் மாநாட்டின் பொது அமர்வுக்கான அழைப்பை விடுப்பார்கள். அத்துடன் நிகழ்ச்சித் தொகுப்பாளராகிய அரசர் அருளாளரையும் அறிமுகம் செய்து வைப்பார்கள். பின்னர் நிகழ்ச்சித் தொகுப்பாளர் அமர்வைப் பொறுப்பேற்பார்.

தொடர்ந்து இறை வணக்கம், தமிழ் தாய் வாழ்த்து, பதாகை திரைநீக்கம், மங்கள விளக்கேற்றல் ஆகியவை இடம்பெறும். வரவேற்புரையை மாநாட்டு அனுசரணையாளர் வழங்குவார். மாநாட்டின் அறிமுகத்தை அனைத்துலகத் தமிழ் ஆய்வு மன்றத்தின் தலைவர் முனைவர் மாரிமுத்து வழங்குவார். மாநாட்டுக்கான அழைப்பை அனைத்துலகத் தமிழ் ஆய்வு மன்றத்தின் உதவித் தலைவர் முனைவர் எம். பொன்னவைக்கோ வழங்குவார். தொடர்ந்து சிறப்புரையாளர்கள் மற்றும் அனைத்துலகத் தமிழ் ஆய்வு மன்றத்தின் தலைவர், உப தலைவர் ஆகியோருக்கான மதிப்பளிப்பை வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் தலைவர் சுந்தர் குப்புசாமி மற்றும் வீரா வேணுகோபால், சோம இளங்கோவன் ஆகியோர் வழங்குவர். மாநாட்டின் 'மையப்பொருளையும் அறிஞர்களையும் புலவர் முனைவர் பிரான்சிசு ச.முத்து அறிமுகம் செய்துவைப்பார். இலக்கிய ஆய்வாளர்கள் பற்றிய அறிமுகத்தை ஆய்வுக் குழுவின் இணைத் தலைவர் பேராசிரியர் முனைவர் ப.மருதநாயகம் வழங்குவார். மாநாட்டின் மையப் பொருள் பற்றிய சிறப்புரையை அமெரிக்காவைச் சேர்ந்த மானிடவியல் அறிஞர் முனைவர் ஸ்பென்சர் வெல்ஸ் வழங்குவார்.

தொடர்ந்து 12 தலைப்புக்களில் 12 அறிஞர் பெருமக்கள் கருத்துரை வழங்குவார்கள். இதில் "தமிழ் செவ்விலக்கியங்கள்" தொடர்பாக இலங்கையைச் சேர்ந்த மூத்த தமிழ்ப் பேராசிரியர் முனைவர் அ.சண்முகதாஸ் "அறிஞர் பெருமக்களின் பங்களிப்புக்கள்" தொடர்பாக தமிழ் நாட்டைச் சேர்ந்த அமுதன் அடிகளும் கருத்துரை வழங்குவார்கள். பொது அமர்வைத் தொடர்ந்து ஆய்வரங்குகள் இடம்பெறும்.

அருட்திரு.தமிழ்நேசன் அடிகளார்.

## மரண தண்டனையை அமுல்படுத்த முன் சட்டங்களை வலுப்படுத்த வேண்டும்

### அமைச்சர் சம்பிக்க வலியுறுத்து

(கொழும்பு)

மரண தண்டனை குறித்து பௌத்தர்கள் என்ற அடிப்படையில் சிந்திக்கின்றபோது ஒருவரின் உயிரைப் பறித்தால் மீண்டும் அவருக்கு உயிர் கொடுக்க முடியாது எனத் தெரிவித்த அமைச்சர் சம்பிக்க ரணவக, மரண தண்டனைக்கு ஆதரவா? இல்லையா? என்று ஒரு வார்த்தையில் பதிலளிப்பது மிகவும் கடினமானதாகும் என்றும் தெரிவித்தார்.



புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கெக்கிராவ பொதுச்சந்தைத் தொகுதியை பொதுமக்களின் பாவனைக்காக திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எமது நாட்டின் நீதித்துறையில் காணப்படும் சில குறைபாடுகள் காரணமாக குற்றச்செயல்களைப் புரியும் குற்றவாளிகள் தண்டனைகளுக்கு அஞ்சுவதில்லை. எனவே மரண தண்டனையை அமுல்படுத்துவதற்கு முன்னர் நாட்டில் முறையான சட்ட ஏற்பாடுகளை உருவாக்கி அவற்றை வலுப்படுத்த வேண்டும் என்றும் அவர் மேலும் சுட்டிக் காட்டினார். (இ-7)

## மரண தண்டனை விதிப்பு மைத்திரியின் தவறான முடிவு


### நாமல் எதிர்ப்பு

(கொழும்பு)

மரண தண்டனை முடிவு பிழையானது என உணர்ந்து கொள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு இன்னும் 4 ஆண்டுகள் தேவைப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜனாதிபதியின் கருத்து தொடர்பாக டுவிட்டரில் பதிவிட்ட நாமல் ராஜபக்ஷ, "19 ஆவது திருத்தத்தை ஜனாதிபதியே ஆதரித்தார். ஆனால் அது தவறு என புரிந்துகொள்வதற்கு 4 ஆண்டுகள் தேவைப்படுகின்றன.

தற்போது மரண தண்டனையை மீண்டும் விதிக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றார். இதுவும் பிழையான முடிவு என உணர்ந்துகொள்ள அவருக்கு மேலும் 4 ஆண்டுகள்



தேவைப்படலாம்" என பதிவிட்டார்.

19 ஆவது திருத்தம் நாட்டிற்கு ஒரு சாபக்கேடாகும் என தெரிவித்த ஜனாதிபதி, இது தன்னார்வத்தொண்டு நிறுவனங்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது எனவும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## "தரகு அரசியல் நடத்தும் தமிழ்த் தரப்பு"

# நாட்டை ஆட்சி செய்பவர்கள் யார்?

## நாடாளுமன்றில் டக்ளஸ் சந்தேகம்



(கொழும்பு)

**இந்த நாட்டைப் பொறுத்தவரையில் நாட்டு மக்களிடையே இன்னுமொரு பாரிய சந்தேகம் ஏற்பட்டிருக்கின்றது. இந்த நாட்டை ஆட்சி செய்புவர்கள் யார்? என்ற சந்தேகமே அது என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.**

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொது மக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழான பிரேரணை தொடர்பிலான விவாதத்தில் கலந்து கொண்டபின் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த சந்தேகம் கடந்த உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலுக்கு முன்பிருந்தே எமது மக்களுக்கு இருந்து வருகின்றது. அப்படி ஒன்று இல்லாத காரணத்தினால்தான் அத்தகையதொரு தாக்குதல் மிக இலகுவாகவே மேற்கொள்ளப்பட்டது எனக் கூறப்படும் நிலையில் இந்த எமது மக்களின் சந்தேகம் அந்தத் தாக்குதலுக்குப் பின்னர் மேலும் வலுத்துவிட்டது என்றே தெரிய வருகின்றது.

ஒரு அடிப்படைவாதம் தாக்குதல் நடத்திவிட்டுப் போக ஏனைய அனைத்து அடிப்படைவாதங்களும் தலை நிமிர்ந்துவிட்ட ஒரு நிலைமையைக் காணக் கூடியதாக இருக்கின்றது. இத்தகைய அடிப்படைவாதிகள் ஆட்சியை தங்களது கைகளில் எடுத்துக் கொண்டு பொது மக்களுக்கு அரசாங்கம் வழங்க வேண்டிய உறுதி மொழிகளை இவர்கள் வழங்கி வருகின்ற நிலைமையும் காணப்படுகின்ற நிலையில் இவற்றை பார்வையாளர்கள் வரிசையில் நின்று ஆட்சியாளர்கள் பார்த்துக் கொண்டிருக்கின்ற நிலைமையானது நாட்டின் பரிதாப நிலைமையினையே எடுத்துக் காட்டுகின்றது.

இத்தகைய செயற்பாடுகள் முற்றிலும் சுயலாப அரசியலை அடிப்படையாகக் கொண்ட அடிப்படைவாதிகளின் ஏனைய மதங்களுக்கிடையேயும் இனங்களுக்கிடையேயும் விரிசல்களை வளர்ப்பதற்கான செயற்பாடுகளாகவே செயற்படுத்தப்பட்டு வருவதையும் காணக் கூடியதாகவே இருக்கின்றது.

இத்தகைய செயற்பாடுகள் இந்த நாட்டின் அமைதிக்கு எந்தளவில் பாதிப்புக்களை ஏற்படுத்தப் போகின்றன? என்பது பற்றி சிந்தித்து செயற்பட வேண்டிய நீங்கள் வாக்குகளுக்காக வளைந்து நெளிந்து கொண்டிருக்கின்றீர்கள் என்றால் இந்த நாட்டின் சட்டம் ஒழுங்கு அமைதி என்பவை எல்லாம் எதற்காக? என்றே மக்கள் கேட்கிறார்கள்.

இன்று இந்த நாட்டிலே எமது மக்களுக்கு ஏராளமான பிரச்சினைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதில் ஏற்கனவே இருந்த பிரச்சினைகள் வேறு பூதாகரமாகி விட்டுள்ளன.

மக்கள் உணவை கையில் எடுக்கும் போது இருக்கின்ற விலை வாயில் போடுவதற்குள் அதிகரித்து விடுகின்றது. இப்படி மக்கள் அன்றாடம் உண்பதற்கே வழி தேடிக் கொண்டிருக்கின்ற போது சீன சிகரெட்டுகள் பற்றி வாதவிவாதங்களை நடத்திக் கொண்டிருக்கின்றீர்கள். உணவின்றி 11 மாதக் குழந்தை தென் பகுதியிலே இறந்து விடுகின்ற பரிதாபங்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

பிள்ளைகளைப் பராமரிக்க முடியாமல் தாய் தனது இரண்டு சிறு பிள்ளைகளுடன் ரயில் முன் பாய்ந்து தற்கொலைசெய்து கொள்கின்ற பரிதாபங்கள் நடந்தேறிக் கொண்டிருக்கின்றன.

போதை வஸ்து ஒழிப்பு பற்றி பேசப்பட்டு வரும் நிலையில் போதை வஸ்துகளுக்கு அடிமையாகாத சுமார் 1500 பாடசாலை மாணவர்கள் பாடசாலை மட்டங்களில் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டு வருவதாகஅதிர்ச்சித் தகவல்கள் வெளிவருகின்றன.

இத்தகைய மக்களது அன்றாடப் பிரச்சினைகள் எல்லாவற்றையும் மூடி மறைத்துக் கொண்டு இது எந்த நாடு என்பது பற்றி நீங்கள் பட்டிமன்றம் நடத்துவதிலேயே காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கிறீர்கள்.

எதை விற்றேனும் தாம் மட்டும் வயிற்றை நிரப்பினால் போதும் என்ற கொள்கை வீட்டுக்கும் உதவாது நாட்டுக்கும் உதவாது!

ஒரு வகையில் இன்று இந்த நாட்டு மக்களிடத்தே தெளிவான அரசியல் சிந்தனைக்கு நீங்கள் வழியேற்படுத்திக் கொடுத்திருக்கிறீர்கள். அண்மையில் புகையிரதத் திணைக்களத்தினரின் பணிப்பகிஷ்கரிப்பு நாடகளில் இந்த நாட்டு மக்கள் தெரிவித்திருந்த கருத்துக்கள் அதற்கு சான்று பகர்கின்றன. நாங்கள் இட்ட புள்ளடி இன்று எங்களுக்கு எதிராகவே செயற்படுகின்றது' என மக்கள் கூறுகின்றனர்.

இதே அரசியல் தெளிவை இன்று எமது மக்களும் பெற்றிருக்கிறார்கள் என்பதற்கு அரசாங்கத்துடன் தரகு அரசியல் நடத்துகின்ற தமிழ்த் தரப்பு அரசியல்வாதிகள் எமது மக்களால் துரத்தப்படுகின்ற சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

எனவே பொது மக்கள் பாதுகாப்பு என்பதுடன் பொது மக்களது வாழ்க்கை தொடர்பிலும் சற்றேனும் சிந்திக்கவேண்டும். வாக்குகளை நம்புகின்ற நீங்கள் அதை வழங்குகின்ற மக்களையும் நம்ப வேண்டும். வாக்குகளுக்காக அடிப்படைவாதக் குழுக்களையும் இனவாதக் குழுக்களையும் நம்பி மீண்டும் இந்த நாட்டில் முரண்பாட்டு மோதல் நிலைமைகளை உருவாக்க முயற்சிக்க வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

---

## "சுதந்திரத்தை தியாகம் செய்ய முடியாது"

# சோபா உடன்படிக்கையால் எந்தவொரு பயனுமில்லை

## கலாநிதி பாலித எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கை- அமெரிக்காவுக்கு இடையில் பாதுகாப்பு உடன்பாடுகள் காணப்படாத நிலையில் இந்தியா, சீனா மற்றும் ஈரான் உள்ளிட்ட நாடுகளுடன் மோதல் போக்கை ஏற்படுத்தக்கூடிய உடன்பாடுகளுடன் இலங்கை எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென முன்னாள் வெளிவிவகாரச் செயலாளர் கலாநிதி பாலித கொஹன்ன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துதெரிவிக்கும்போதே பாலித கொஹன்ன மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சோபா உடன்படிக்கையால் இலங்கைக்கு எந்தவொரு பயனும் இல்லை. ஆகையால் அதில் கையெழுத்திட வேண்டிய அவசியமில்லை.

குறித்த உடன்படிக்கையில் 100க்கு மேற்பட்ட நாடுகள் கையெழுத்திட்டுள்ளமையால் தமது நாடும் இதில் இணைந்துகொள்வது பிரச்சினையில்லை என்றே அரசியல் தலைமைகள் சிந்திக்கின்றன.

ஆனால் இந்த உடன்பாட்டின் ஊடாக அமெரிக்க இராணுத்தினர் இலங்கைக்கு ஆயுதங்களுடன் வந்து எதையும் செய்ய முடியும். அவர்களை உள்ளூர் சட்டங்களின் வாயிலாக ஒருபோதும் கட்டுப்படுத்த முடியாது என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

மேலும் நாட்டின் இறைமை, சுதந்திரம் மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை பாதிக்கக் கூடியவை என்பதனால் இத்தகைய உடன்பாடுகள் குறித்து விவாதிப்பதில் நாடாளுமன்றத்துக்கு ஒரு பங்கு இருக்க வேண்டியது அவசியமாகும்.



அந்தவகையில் இத்தகைய உடன்பாடுகளில் இணைவதற்கு முன்னர் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அங்கீகாரம் கிடைக்க வேண்டும்.

அத்துடன் ஏனைய நாடுகளுடன் நல்லுறவை பேண வேண்டும் என்பதற்காக நமது நாட்டின் சுதந்திரத்தை தியாகம் செய்ய வேண்டிய அவசியமில்லை' என பாலித கொஹன்ன மேலும் தெரிவித்தார். (இ-7)

---

# அனைத்து இனங்களுக்கும் சந்தை திறக்கப்பட வேண்டும்

## நீதிமன்றம் அதிரடி உத்தரவு

(தங்கொட்டுவ)

தங்கொட்டுவ பொதுச் சந்தை அனைத்து இனங்களுக்கும் திறக்கப்பட வேண்டும் என மாரவில நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

தங்கொட்டுவ பொதுச் சந்தையில் முஸ்லிம் வர்த்தகர்களுக்கு இந்தச் சந்தையில் இடமில்லை என வென்னப்புவ பிரதேச சபை முன்னர் தடைவிதித்தது.

வென்னப்புவ பிரதேச சபைத் தவிசாளர் விடுத்துள்ள உத்தரவு தொடர்பில் பொலிஸார் மாரவில நீதவான் நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தனர்.

இதனையடுத்து பிரதேச சபைத் தவிசாளர் உள்ளிட்ட ஆறு பேர்களை நேற்று நீதிமன்றில் ஆஜராகுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இது தொடர்பான மனுவை ஆராய்ந்த நீதிமன்றம், அனைத்து இன வர்த்தகர்களும் தங்கொட்டுவ சந்தையில் வர்த்தகம் செய்ய அனுமதிக்குமாறு வென்னப்புவ பிரதேச சபை தவிசாளருக்கு உத்தரவிட்டது. (இ-7)

---

# குளவிக் கொட்டுக்கு இலக்கான பத்து பேர் வைத்தியசாலையில்

(தலவாக்கலை)

தலவாக்கலை- ஸ்டேலின் பகுதியிலுள்ள தேயிலைத் தோட்டத்தில் பணிபுரிந்து கொண்டிருந்த 10 பேர் குளவிக் கொட்டுக்கு இலக்காகி, வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இதில் 4 பேர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருவதாகவும் 6 பேர் வீடு திரும்பியதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 10 பெண் தொழிலாளர்களே பாதிக்கப்பட்டதாக தெரியவருகிறது. (இ-7)

# தமிழ் மக்களுக்கு நிரந்தர தீர்வு வேண்டும்

## தமிழ் தேசியத்துக்கு எதிரானவர்கள் அரசியலிலிருந்து விலக வேண்டும்!

## என வவுனியாவில் மஹாயாக வேள்வியும் ஆன்மீகப்பிரார்த்தனையும்



தமிழ் மக்களுக்கு நிரந்தர தீர்வு கிடைக்க வேண்டியும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி வேண்டியும் வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளினால் வவுனியா புகையிரத நிலைய வீதியிலுள்ள முதிரைத் தோட்டம் தேடி வந்த பிள்ளையார் ஆலயத்தில் மஹாயாக வேள்வியும் ஆன்மீக பிரார்த்தனையும் சிவஸ்ஸ்ரீ முத்து ஜெயந்திநாதக்குருக்கள் தலைமையில் இடம்பெற்றது.

தமிழர் தாயகத்தில் கையளிக்கப்பட்டு கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடிக் கண்டறியும் குடும்பங்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் கலந்து கொண்டு கூட்டு வழிபாடுகளும் மஹாயாக வேள்வியும், ஆன்மீகப்பிரார்த்தனையிலும் ஈடுபட்டனர்.

இந்நிகழ்வில் அருளுரையினை கொழும்பு, ஆன்மீக அருள் ஜோதி சர்வதேச இந்து குரு பீடாதிபதி ஸ்கந்தசாபசிவ சரவணபவ ஐயப்பதாசக் குருக்கள் ஆற்றியதுடன் அந்தணர்களும் சிவாச்சாரியார்களும் கலந்து கொண்டனர். பின்னர் ஆலயத்திலிருந்து ஊர்வலமாக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தமது போராட்ட இடத்திற்கு சென்றடைந்தனர்.

குறித்த யாகம் தொடர்பில் ஏற்பாட்டாளர்கள் கருத்து தெரிவிக்கையில்,

இந்த யாகத்தில் நாம் இரண்டு விடயங்களை முன் வைத்தோம். முதலில் எமது நற்பயன், இரண்டாவது, எமது நற்பயனை எதிர்க்கும் தீய சக்திகளை நமது அரசியலிலிருந்து நீக்குவது.

எங்கள் நற்பயன் முதலில் ஒரு அரசியல் தீர்வை எடுப்பதாகும், அதாவது தமிழர்களுக்கு நிரந்தரமான , சுதந்திரமான, பாதுகாப்பான மற்றும் பாதுகாக்கப்பட்ட தாயகம் ஒன்றை பெறுவதாகும்.

காணாமல்போன எங்கள் உறவுகள் எங்கு இருந்தாலும், அவர்கள் பாதுகாப்பாகவும் ஆரோக்கியமாகவும் தைரியமாகவும் இருக்க நாங்கள் இந்த யாகம் மூலம் பிரார்த்திக்கிறோம்.

இந்த யாகத்தில் தமிழ் தேசியத்திற்கு எதிராக வேலை செய்யும் தீய சக்திகளை தமிழ் அரசியலிலிருந்து அகற்றுவதற்கும் பிரார்த்தனை செய்துள்ளோம் எனத் தெரிவித்தனர். (9-250)

# போதைக்கு எதிரான விழிப்புணர்வு ஊர்வலம் வவுனியாவில்



வட மாகாண சமூக சேவைகள் திணைக்களம் மற்றும் வவுனியா மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் போதையற்ற தேசம் என்ற நிகழ்வு நேற்று குருமன்காடுச் சந்தியில் இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் எஸ். ஸ்ரீனிவாசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வவுனியா அரசாங்க அதிபர் ஐ.எம். கனீபா சிறப்பு அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றியிருந்ததுடன் போதைக்கு எதிரான வாசகங்கள் எழுதப்பட்ட பலூன்களையும் பறக்கவிட்டிருந்தார்.

அத்துடன் போதைக்கு எதிரான வாசகங்கள் எழுதப்பட்ட ஸ்ரிக்கர்கள் வாகனங்களில் ஒட்டப்பட்டதுடன் போதைக்கு எதிரான வாசகங்கள் எழுப்பட்ட பதாகைகளை தாங்கிவாறு கவனயீர்ப்பு ஊர்வலமும் இடம்பெற்றிருந்தது.

குருமன்காடுச்சந்தியில் இருந்து ஆரம்பமான ஊர்வலம் வவுனியா சமூக சேவைகள் திணைக்களம் வரை சென்றடைந்து முடிவடைந்தது.

இதன்போது வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலய மாணவர்கள், செட்டிகுளம் பிரதேச செயலாளர், பாடசாலை அதிபர்கள், முதியோர் சங்க பிரதிநிதிகள், தமிழ் விருட்சம்,சமூக ஆர்வலர்,அமைப்பினர்,வெளிச்சம் அறக்கட்டளை நிர்வாகிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (9-250)

வன்னி வலம்

# முல்லைத்தீவு கோடாலிக்கல் குளம் 8.3 மில்லியன் ரூபாவில் புனரமைப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் வெள்ளம் காரணமாக உடைப்பெடுத்த கோடாலிக்கல் குளம் 8.3 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளதாக மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த டிசெம்பர் மாதம் ஏற்பட்ட மழை வெள்ளம் காரணமாக உடைபெடுத்த கோடாரிக்கல் குளத்தினைப் புனரமைத்துத் தருமாறு அதன் கீழான விவசாயிகள் கோரிக்கை விடுத்திருந்ததுடன், ஆரம்பத்தில் அதற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டபோது இக்குளம் புனரமைக்கப்படாது போனால் அடுத்த காலபோகச் செய்கையினை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்படும் என்று விவசாயிகள் தெரிவித்திருந்தனர்.

கடந்த திங்கட்கிழமை முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலும் விவசாயிகளால் இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.

கோடாலிக்கல் குளமானது 8.3 மில்லியன் ரூபா நிதி தேவையென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன், இவ்வருடத்தில் இக்குளம் புனரமைப்படவுள்ளதாகவும் கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9-315)

# வவுனியாவில் வறுமைக்கோட்டிற்குட்பட்ட 181 குடும்பங்களுக்கு சமுர்த்தி வழங்கிவைப்பு



20 வருடங்களாக சமுர்த்தி நிவாரணங்கள் பெற்றுக் கொள்ளாமலிருந்த181 குடும்பங்களுக்கு சமுர்த்தி உரித்துப்படிவங்கள் வழங்கும் நிகழ்வு வவுனியா நொச்சிமோட்டை பொதுநோக்கு மண்டபத்தில் நேற்றுக் கிராம அலுவலகர் குபேரன் தலைமையில் நடைபெற்றது.

"புதிதாக சிந்திப்போம் தன்னம்பிக்கையுடன் முன்னேறுவோம்" எனும் திட்டத்தில் கடந்த 20 வருடங்களாக சமுர்த்தி நிவாரணங்கள் பெற்றுக்கொள்ளாமலிருந்த மணிக்க இலுப்பக் குளம், நொச்சிமோட்டை, சாந்தசோலை, பேயாடிகூழாங்குளம் பகுதிகளில் தெரிவு செய்யப்பட்ட 181 குடும்பங்களுக்கு சமுர்த்தி உத்தியோகத்தரும் நகரசபை உறுப்பினருமான எம்.ஆர்.எல். லரீப்பினால் சமுர்த்தி நிவாரணம் உரித்துப்படிவங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் நொச்சிமோட்டை சுகாதாரப்பரிசோதகர், பொது அமைப்புக்கள், மாதர் அபிவிருத்திச்சங்கம், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (9)



கிளிநொச்சி இராணுவ தலைமையகம் உருவாக்கப்பட்டு 10 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு விசேட வழிபாடு நேற்று கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள பள்ளிவாசலில் இடம்பெற்றது. குறித்த வழிபாட்டில் கிளிநொச்சி படைகளின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் விஜித ரவிப்பிரிய உள்ளிட்ட படை உயரதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். 10 ஆம் ஆண்டு நிறைவின் நினைவாக பூங்கன்றுகளும் நாட்டப்பட்டதுடன், விசேட வழிபாடும் இடம்பெற்றது.(படங்கள்:- பரந்தன் செய்தியாளர்)

# சங்காபிஷேக நிகழ்வு

(பூநகரி)

பூநகரி வாடியடி சோபாலபிட்டி ஸ்ரீசித்தி விநாயகர் ஆலய சங்காபிஷேக நிகழ்வு 10 ஆண்டுகளுக்குப் பின் கடந்த 20 ஆம் திகதி இடம்பெற்றது. அன்றைய தினம் மாலை புதிய வருடத்திற்கான ஆலய பரிபாலன சபை நிர்வாகமும் தெரிவு செய்யப்பட்டது.

தலைவராக பொன்.தில்லைநாதன் (ஓய்வு நிலை அதிபர்), உப தலைவராக க.தர்மசீலன், செயலாளராக திருமதி.ஜெ.இரஞ்சிதமலர், உபசெயலாளராக கோ. அரியநாயகம், பொருளாளராக சி.கணேசரத்தினம், நிர்வாகசபை உறுப்பினர்களாக 5 பேர் தெரிவு செய்யப்பட்டனர். (9-84)

முல்லைத்தீவு கடற்பரப்பில்

## சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 47 பேருக்கு எதிராக வழக்குத்தாக்கல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட கடற்பரப்பில் அனுமதியற்ற தொழில்களில் ஈடுபட்டதாக கைது செய்யப்பட்ட 47 பேருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளதாக கடற்றொழில் நீரியல்வளத் துறை திணைக்கத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சட்டவிரோதத் தொழில்கள், நிபந்தனை மீறிய கடற்றொழில்கள் என்பவற்றால் இந்தப்பிரதேசத்தில் வாழ்கின்ற சுமார் 4500 இற்கும் மேற்பட்ட மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக மீனவர்கள் உட்பட பல தரப்பினர்கள் சுட்டிக்காட்டி வருகின்றனர்.

இதேவேளை முல்லைத்தீவு நாயாறு பகுதியில் 400 இற்கும் மேற்பட்ட படகுகள் நிபந்தனைகளை மீறி தொழில்களில் ஈடுபடுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான தொழில் நடவடிக்கையால் தமது வாழ்வாதாரமான கடற்றொழில் முழுமையாகவே பாதிப்படைவதாக சுட்டிக்காட்டியுள்ள மீனவர்கள் பெரும் முதலீடுகளைச் செய்து நாள் முழுவதும் கடலுக்குச் சென்று வெறும் கையுடன் திரும்புகின்ற ஒரு நிலைமையே அதிகம் ஏற்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக, முள்ளிவாய்க்கால், புதுமாத்தளன், நாயாறு, கொக்கிளாய் போன்ற பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேற்படி சட்டவிரோத தொழில்கள் மே மாதம் தொடக்கம் ஒக்டோபர் மாதம் வரையான காலப்பகுதிகளில் அதிகளவாக மேற்கொள்ளப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

தற்போது வெளிமாவட்டங்களைச் சேர்ந்த 206 படகுகளுக்கான தொழில் அனுமதிகள் அமைச்சு மட்டத்தில் வழங்கப்பட்டிருப்பதாகவும் அவ்வாறான அனுமதிகளுடன் வருகின்ற படகுகள் தொழிலில் ஈடுபட அனுதிப்பதாகவும் அனுமதியின்றி வருகின்ற படகுகளை வெளியேற்றும் நடவடிக்கைகளை திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இவ்வருடம் மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோத அல்லது அனுமதியற்ற தொழில்களில் ஈடுபட்ட 47 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக மேற்படி திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9-315)

## முல்லை. கொண்டைமடு காட்டில் பெறுமதிமிக்க மரக்குற்றிகள் மீட்பு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு கொண்டைமடு காட்டுப்பகுதியில் இருந்து பெறுமதியான மரக்குற்றிகள் விமானப்படையினரால் நேற்று முன்தினம் பிற்பகல் மீட்கப்பட்டுள்ளது. அடையாளம் தெரியாதோரால் சட்டவிரோதமாக வெட்டப்பட்ட குறித்த மரக்குற்றிகளே மேற்படி மீட்க்கப்பட்டுள்ளன.

குறித்த சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு விமானப் படையைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தகவல் தெரிவிக்கையில்,

குறித்த வனப்பகுதியில் தொடர்ச்சியாக இவ்வாறான மரம் வெட்டும் நடவடிக்கைகள் இடம்பெறுவதாகவும் தற்போது இந்த நடவடிக்கையை தடுத்து நிறுத்துவதற்கு முற்பட்ட வேளையில் குறித்த மரங் களை வெட்டிய நபர் கள் வெட்டிய மரங் களையும் சில உபகரணங்களையும் விட்டு விட்டு தப்பியோடியுள்ளனர். நாம் கைப்பற்றிய மரங்களை வனவள திணைக்களத்திடம் ஒப்படைத்துள்ளோம்.

நாட்டில் தற்போது காணப்படும் அதிக வெப்பம் மற்றும் மழை வீழ்ச்சி இன்மையால் வரட்சியான காலநிலை காணப்படும் நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இவ்வாறு கட்டுப்பாடின்றி காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றமையானது எதிர்காலத்திற்கே ஆபத்து என பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (9-281)




## விவசாய பணிப்பாளர் தாக்கப்பட்டதை கண்டித்து வவுனியாவில் கவனயீர்ப்பு



வவுனியா மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) யாழ்ப்பாணத்தில் மற்றுமொரு அதிகாரியால் தாக்கப்பட்டதை கண்டித்து வவுனியா பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் அலுவலக உத்தியோகத்தர்கள் நேற்று கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா உள்வட்ட வீதியில் அமைந்துள்ள அலுவலகத்தில் மாகாண விவசாயப் பணிப்பாளர் தாக்கப்பட்டமையை கண்டிக்கின்றோம், மாகாண விவசாய பணிப்பாளரே நீதி வழங்குங்கள் என்ற கோசங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த உத்தியோகத்தர்கள், யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கணக்காய்வு கூட்டத்தில் கலந்துகொண்டதன் பின்னர் இடம்பெற்ற அசம்பாவிதம் ஒன்றில் எமது விவசாயப் பணிப்பாளர் காயமடைந்து யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் அனுமதிக் கப் பட் டுள் ளார். எனவே இதற்கு நீதி பெற்றுத்தர வேண்டும் என தெரிவித்தனர்.

இந் நிலையில் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அங்கிருந்த வவுனியா மாவட்ட செயலகத்திற்கு சென்று அரசாங்க அதிபரிடம் குறித்த சம்பவத்திற்கு நீதி கோரி நடவடிக்கை எடுக்க வேண்டும் என மகஜரொன்றினையும் கையளித்திருந்தனர். (9)

## வெளிநாட்டு அகதிகளுக்கு வழங்கப்பட்ட இராணுவ பாதுகாப்பு அகற்றம்

(வவுனியா)

வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள வெளிநாட்டு அகதிகளுக்கு அளிக்கப்பட்டிருந்த இராணுவப் பாதுகாப்பு நேற்று முன்தினத்திலிருந்து விலக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் தங்கியிருந்த வெளிநாட்டு அகதிகள் அண்மையில் இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதலின் பின்னர் பாதுகாப்புக்காக நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் வவுனியா கூட்டுறவுக் கல்லூரியில் கடந்த 10 ஆண்டுகளாக முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வளிக்கும் புனர்வாழ்வு நிலையத்தின் கட்டடமொன்றில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் தங்கவைக்கப்பட்ட கட்டடத்தினை சூழவும் குறித்த பகுதியிலும் இராணுவம் அதிகளவில் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினத்தில் இருந்து குறித்த பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டிருந்த இராணுவத்தினர் விலக்கப்பட்டதுடன் முழுமையாக பொலிஸாரின் பாதுகாப்பினுள் அவர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் குறித்த அகதிகளுக்கான வசதிகளை ஐக்கிய நாடுகளுக்கான அகதிகள் உயர்ஸ்தானிகராலயம் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (9)

புதிதாக அமைக்கப்பட்ட

## மாங்குளம் பேருந்து தரிப்பிட நிலையம் ஆறு மாதங்கள் கடந்தும் திறக்கப்படவில்லை



முல்லைத்தீவு - மாங்குளம், பொதுச்சந்தை வளாகத்தில் அமைக்கப்பட்ட பேருந்து தரிப்பிட நிலையம் ஆறு மாதங்கள் கடந்த நிலையிலும் இன்றுவரை திறக்கப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வடமாகாணசபையின் நிதி ஒதுக்கீட்டில் குறித்த பேருந்து தரிப்பு நிலையத்தின் கட்டுமானப் பணிகள் கடந்தாண்டு ஆரம்பிக்கப்பட்டு நிறைவுற்றிருக்கும் நிலையில் ஆறு மாதங்களாகியும் இன்றுவரை மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்படவில்லை.

இந்த பேருந்து தரிப்பிட நிலையம் திறக்கப்படாததால் மக்கள் இன்றும் பேருந்துகளுக்காக வீதியோரங்களில் காத்திருக்க வேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளது.

அதேவேளை மாங்குளம் பொதுச் சந்தை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள குறித்த பேருந்து தரிப்பிட நிலையம் திறக்கப்பட்டால் சந்தை வியாபாரமும் பல்மடங்கு பெருகும்.

மேலும் மாங்குளத்தில் மிக நீண்டகாலம் நிலவி வந்த பேருந்து தரிப்பிட நிலைய பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் அமைக்கப்பட்ட இந்தக் கட்டடம், ஆறு மாதங்களாகியும் திறக்கப்படாமை மிகுந்த வேதனையளிப்பதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே உரிய அதிகாரிகள் இந்த பேருந்து தரிப்பிட நிலையத்தினைத் திறந்து மக்கள் பாவனைக்கு விடுமாறும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9)

## தொண்டர் சேவைகள் கலைக்கூடம் வவுனியாவில் திறந்து வைப்பு

(குருமன்காடு)

அன்புக்கும் நட்புக்குமான வலையமைப்பின் "தொண்டர் சேவைகள் கலைக்கூடம்" நேற்று முன்தினம் வவுனியாவில் திறந்து வைக்கப்பட்டது.

அமைப்பின் வடக்கு மாகாண இணைப்பாளர் ஜெ.கிருசாந் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவின் அதிகாரி வி.எ.சம்பத் கலந்து கொண்டு தொண்டர் சேவைகள் கலைக்கூடத்தை திறந்து வைத்தார்.

அன்புக்கும் நட்புக்குமான வலையமைப்பால் கிராமிய இளைஞர்களை மையப்படுத்தி பிரஜைகள் கண்காணிப்பு வேலைத்திட்டங்கள் நாடுபூராகவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் வவுனியா உட்பட ஆறு மாவட்டங்களில் தொண்டர் சேவைகள் கலைக்கூடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இதனூடாக மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், அநுராதபுரம், காலி, இரத்தினபுரி மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட இளைஞர்களுக்கு தேர்தல் தொடர்பான சட்டங்கள், தகவல் அறியும் சட்டம் பாவிக்கும் முறைமை, மனித உரிமைகள் மற்றும் சமாதானத்தை கட்டியெழுப்புதல் போன்ற விடயங்கள் தொடர்பான பயிற்சிகளை பெற்றுக் கொடுப்பதுடன் நவீன தொழில்நுட்பத்தினூடாக பயிற்சிகளைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்புக்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

எதிர்காலத்தில் இளைஞர்-யுவதிகள் தங்கள் கிராமங்களில் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கு தாமாகவே முன்னின்று தீர்வுகளை காண்பதற்கும் சமூகமட்டப் பிரச்சினைகளைக் களைந்தெடுக்கவும் ஆற்றல் மிக்க ஒரு சமுதாயத்தை "தொண்டர் சேவைகள் கலைக்கூடம்" ஊடாக உருவாக்குவதே நோக்கம் என அமைப்பின் இணைப்பாளர் தெரிவித்தார்.


இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட விசேட காணி மத்தியஸ்தர் சபையின் தலைவர் இ.நவரட்ணம், வவுனியா பொலிஸ் உதவி ஆய்வாளர் பி.பி.குறுசிங்க, வவுனியா குற்றப்பிரிவு பொலிஸ் உதவி ஆய்வாளர் கலாவினோதன், இணக்கசபை பயிற்சி உத்தியோகத்தர் எஸ்.விமலராஜா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (9-250)



# பாரதம்

# பயங்கரவாதம் மனித குலத்திற்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக உள்ளது

## பிரிக்ஸ் நாடுகளின் மத்தியில் பிரதமர் மோடி தெரிவிப்பு



(டில்லி)

பயங்கரவாதம் மனித குலத்திற்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக உள்ளது என பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பிரிக்ஸ் நாடுகளின் தலைவர்கள் மத்தியில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்து தெரிவித்த அவர், "பயங்கரவாதத்தால் அப்பாவி மனித உயிர்கள் பலியாவதோடு, பொருளாதார வளர்ச்சி, மத நல்லிணக்கம் ஆகியன கடுமையாகப் பாதிக்கப்படுகின்றன.

பயங்கரவாதத்தைத் தடுக்க பிரிக்ஸ் நாடுகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். பயங்கரவாதத்திற்கு எதிராக உலகநாடுகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தருணம் இது" எனத் தெரிவித்துள்ளார்.

ஜப்பானின் ஒசாக்கா நகரில் நடைபெறும் ஜி-20 நாடுகளின் உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் மோடி, அந்நாட்டிற்குப் பயணித்துள்ளார்.

குறித்த விஜயத்தின்போது, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே ஆகியோரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

இந்நிலையில், ஒசாக்கா நகரில் பிரிக்ஸ் அமைப்புத்தலைவர்களின் உத்தியோகபூர்வமற்ற சந்திப்பு நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# தமிழகத்தில் மேலும் 104 இடங்களில் ஐதரோகாபன் கிணறுகள் அமைக்க திட்டம்

## தினகரன் அதிர்ச்சி



(சென்னை)

தமிழகத்தில் மேலும் 104 இடங்களில் புதிதாக ஐதரோகாபன் கிணறுகளை அமைக்க ஓ.என்.ஜி.சி. நிறுவனம் மத்திய அரசிடம் அனுமதி கேட்டிருப்பது குறித்து அ.ம.மு.க.துணை பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரன் அதிர்ச்சித் தகவல் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, "தமிழகத்தில்மேலும் 104 இடங்களில் புதிதாக ஐதரோகாபன் கிணறுகளை அமைக்க ஓ.என்.ஜி.சி.நிறுவனம் மத்திய அரசிடம் அனுமதி கேட்டிருப்பதாக வெளியாகி இருக்கும் செய்தி மிகுந்த அதிர்ச்சி அளிக்கிறது.

ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வரும் ஐதரோகாபன் திட்டங்களையே விவசாயிகளும் பொதுமக்களும் கடுமையாக எதிர்த்துவரும் நிலையில் இப்போது நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், அரியலூர், கடலூர், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் புதிதாக 104 கிணறுகளை அமைப்பதை ஏற்க முடியாது.

தொடர்ந்து இதுபற்றி வாய் திறக்காமல் மௌனம் சாதிக்கும் மக்கள் விரோத பழனிசாமி அரசு, உடனடியாக தமது நிலைப்பாட்டை தெரிவிக்க வேண்டும். ஐதரோகாபன் உள்ளிட்ட மக்களைப் பாதிக்கும் திட்டங்களை தமிழகத்தில் அனுமதிக்க மாட்டோம் என்று புதுச்சேரி அரசைப் போல அறிவிக்க வேண்டும்" என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)

# பப்புவா நியூகினியில் எரிமலை சீற்றம் மக்கள் பாதுகாப்பாக வெளியேற்றம்



பப்புவா நியூகினியில் எரிமலை வெடித்ததைத் தொடர்ந்து சுமார் ஐந்தாயிரம் மக்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டுள்ளனர்.

உலகின் மிகவும் ஆபத்தான எரிமலைகளில் ஒன்றான மவுண்ட் உலாவுன், எரிமலைக் குழம்பைக்கக்கத் தொடங்கியுள்ளது.

காற்றில் 13 கிலோமீற்றர் உயரத்திற்குக் கரும்புகையும் சாம்பலும் சூழ்ந்திருப்பதால் கிம்பே பகுதியில் பகல்பொழுது இரவுபோல் காட்சியளிப்பதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதன்காரணமாகவே சுமார் ஐந்தாயிரம் மக்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு வெளியேற்றப்பட்டுள்ள மக்கள் தற்காலிக தங்குமிடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)

# எதியோப்பியாவில் ஆட்சி

# 40 பேர் உயிரிழப்பு;



(அடிஸ் அபாபா)

**எதியோப்பியாவில் ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சியினைத் தொடர்ந்து இடம்பெற்ற வன்முறைகள் காரணமாக 40 பேர் உயிரிழந்துள்ளனர்.**

எதியோப்பியாவில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியினைத் தொடர்ந்து பெனிஷான்குல்-குமுஸ் மாகாணத்தில் தொடர்ச்சியாக வன்முறைச்சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

இந்த வன்முறைச் சம்பவங்களின் போதே 40 பேர் உயிரிழந்துள்ளதுடன், அதிகளவானவர்கள் படுகாயமடைந்துள்ளதாக பெனிஷான்குல்-குமுஸ் மாகாண ஆளுநர் ஆஷாத்லி ஹஸன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டுள்ள அவர்,

'அம்ஹாரா மாகாண ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக அங்கு கடந்த சனிக்கிழமை நடைபெற்ற தாக்குதலின் தொடர்ச்சியாக, பெனிஷான்குல்-குமுஸ் மாகாணத்திலும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அம்ஹாரா மாகாண தாக்குதலுக்குத் தலைமை வகித்த அசாமிநிவ் சிகேவின்

# ட்ரம்ப்-கிம் மூன்றா

## தென்கொரிய ஜனாதி



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிற்கும், வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னிற்கும் இடையிலான மூன்றாம் கட்ட சந்திப்பினை நடத்துவது குறித்த இரகசிய பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தென்கொரிய ஜனாதிபதி மூன் ஜே-இன் இதுகுறித்த தகவல்களை வெளியிட்டுள்ளார். இதுகுறித்து நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டுள்ள அவர்,

'பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் உள்ள விருப்பம், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பிற்கும்,

# உலக வர்த்தக மைய கோ
# இதுவரையில் வெளிவர






2001 ஆம் ஆண்டு செப்டெம்பர் 11 ஆம் திகதி உலக வரலாற்றில் நீங்கா
தாக்கப்பட்ட சம்பவம் நிகழ்ந்த நாளாகும். 3000 உயிர்களைக் காவுகொண்
நிலையில் தாக்குதல் தொடர்பாக இதுவரை வெளியிடப்படாத படங்கள் சி




# ட்சிக்கவிழ்ப்பு முயற்சி!

## பு; பலர் படுகாயம்



ஆதரவாளர்களே இந்தத் தாக்குதலையும் மேற்கொண்டுள்ளதாக நம்பப்படுகிறது.

மெடாகல் பகுதியிலுள்ள ஒரு கிராமத்தில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் 40 பேர் உயிரிழந்தனர். தாக்குதல் நடத்திய அந்தக் கும்பல் அம்ஹாரா மாகாணத்துக்குத்தப்பிச் சென்றுவிட்டது என மேலும்தெரிவித்தார்.(7)

# சன நெரிசலில் சிக்கி

# 16 பேர் பரிதாபமாக பலி!

## 75 பேர் படுகாயம்

(ஆண்டனநரிவோ)

மடகஸ்கார் நாட்டில் சுதந்திர தினக் கொண்டாட்டத்தின் போது ஏற்பட்ட சன நெரிசலில் சிக்கி 16 பேர் பலியாகினர்.


ஆபிரிக்க கண்டத்தின் தென் கிழக்கே இந்தியப் பெருங்கடலில் அமைந்துள்ள ஒரு தீவு நாடு மடகஸ்கார். இங்கு நேற்று முன் தினம் 59 ஆவது ஆண்டு சுதந்திர தினம் கொண்டாடப்பட்டது.

இதையொட்டி தலைநகர் ஆண்டனநரிவோவிலுள்ள மைதானத்தில் இராணுவ வீரர்களின் அணிவகுப்பு மற்றும் கச்சேரி உள்ளிட்ட கண்கவர் நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இதைக் கண்டு ரசிக்க ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டனர். மைதானத்தில் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. அவர்கள் ஆரவாரத்துடன் கலைநிகழ்ச்சிகளைப் பார்த்து ரசித்தனர்.

நிகழ்ச்சிகள் அனைத்தும் முடிந்த பிறகு மைதானத்தின் பல நுழைவாயில்கள் வழியாக மக்கள் கூட்டம் கூட்டமாக மைதானத்தை விட்டு வெளியேறினர். இதனால் மைதானத்துக்கு வெளியே கடும் சன நெரிசல் ஏற்பட்டது.

மைதானத்துக்குள் மேலும்



நூற்றுக்கணக்கான மக்கள் இருந்த நிலையில் அவர்களும் ஒரே நேரத்தில் வெளியேறினால் சன நெரிசலை கட்டுப்படுத்த முடியாது என்பதால், பொலிஸார் மைதானத்தின் நுழைவாயில்களை அடைத்து மக்களை வெளியே செல்லவிடாமல் தடுத்தனர்.

பின்னர் ஒரிரு நுழைவாயில்களை மட்டும் திறந்து மக்களை ஒவ்வொரு குழுவாகப் பிரித்து வெளியே அனுப்பினர். இதனால் பொறுமையை இழந்த மக்கள் ஒருவரை ஒருவர் முண்டியடித்துக்கொண்டு வெளியேற முயன்றனர்.

நுழைவாயில்களை நோக்கி மக்கள் கூட்டம் கூட்டமாக படையெடுத்ததால் கட்டுக்கு அடங்காத கூட்ட நெரிசல் ஏற்பட்டது.

இதில் பலர் நிலைகுலைந்து கீழே விழுந்தனர். அவர்கள் மீது கூட்டத்தினர் ஏறி மிதித்துச் சென்றனர்.

இதனால் மைதானமே போர்க்களமாகக் காட்சி அளித்தது. கூட்ட நெரிசலில் சிக்கி 16 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 75 பேர் படுகாயம் அடைந்தனர்.(7)

# றாம் கட்ட சந்திப்பு

## னாதிபதி தகவல்

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னிற்கும் ஒருபோதும் குறையாது.

அவர்களிடையேயான கடிதப் போக்குவரத்து இன்னும் தொடர்ந்து வருவதே அதற்குச் சான்றாகும்.

என்னைப் பொறுத்தவரை, இரு தலைவர்களிடையே நடைபெற்ற கடைசி சந்திப்பு தோல்வியடைந்ததாகக் கூற முடியாது.

இரு தலைவர்களும் தங்களது நிலைப்பாடுகளை முன்வைக்கவும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதும்தான் பேச்சுவார்த்தையின் நோக்கமாகும். ஹனோய் பேச்சுவார்த்தையில் அந்த நோக்கம் முழுமையாக நிறைவேறிவிட்டது.

கொரியாவை அணு ஆயுதமற்ற பிரதேசமாக்கும் விவகாரத்தில் வெற்றி,தோல்வியை ஒன்றிரண்டு சந்திப்புகள் முடிவு செய்துவிடாது. எனவே, பேச்சுவார்த்தையைத் தொடர்ந்துமேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை அமெரிக்கா, வடகொரியா ஆகிய இரு நாடுகளுமே உணர்ந்துள்ளன.

இதன் காரணமாக, ட்ரம்ப் - கிம் இடையிலான 3 ஆவது சந்திப்பை நடத்துவது குறித்து இரு நாட்டு அதிகாரிகளும் இரகசியமாக ஆலோசித்து வருகின்றனர்' என குறிப்பிட்டுள்ளனர்.(7)

# துருக்கியில் பேருந்து விபத்து;

# 10 பேர் பலி, 30 பேர் காயம்!

(அங்காரா)

துருக்கியில் இடம்பெற்ற விபத்தில் 10 பேர் உயிரிழந்துள்ளதுடன், 30 பேர்காயமடைந்துள்ளனர்.

சட்டவிரோதமாக குடியேற முயன்றவர்களை அழைத்து வந்த சிறிய ரக பேருந்து ஒன்றினை நேற்று முன்தினம் பொலிஸார் தடுத்து நிறுத்த முயன்றுள்ளனர்.

எனினும் நிறுத்தப்படாமல் சென்ற சிறிய ரக பேருந்து விபத்துக்குள்ளானதாக துருக்கி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




விபத்தில் காயமடைந்த அனைவரும் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (7)

# கோபுரங்கள் தாக்குதல்

## வராத புகைப்படங்கள்





ில் நீங்காக் கறையை ஏற்படுத்திய உலக வர்த்தக மைய கோபுரங்கள் வுகொண்ட இச்சம்பவம் நடைபெற்று 20 வருடத்தை அண்மித்துள்ள ங்கள் சில வெளியிடப்பட்டுள்ளன. (7)

# பஸ் குடைசாய்ந்து விபத்து

# 11 மாணவர்கள் உயிரிழப்பு

(காஷ்மீர்)

ஜம்மு-காஷ்மீரின் சோபியான் மாவட்டத்தில் உள்ள பள்ளத்தாக்கில் பேருந்து ஒன்று குடைசாய்ந்ததில் 11 மாணவர்கள் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

ஜம்மு-காஷ்மீர் மாநிலம் பூஞ்ச் மாவட்டத்தில் தனியார் கல்வி நிறுவனத்தைச் சேர்ந்த மாணவர்கள் சிலர் பேருந்து ஒன்றில் நேற்று சென்று கொண்டிருந்தனர்.

சோபியான் மாவட்டம் அருகில் சென்ற போது பேருந்து கட்டுப்பாட்டை இழந்து அருகிலுள்ள பள்ளத்தாக்கில் குடைசாய்ந்துள்ளது.

குறித்த பேருந்தில் பயணித்த 9 மாணவிகள் உட்பட 1 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன் மேலும் 7 பேர் படுகாயமடைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தகவலறிந்து மீட்புக்குழுவினர் அங்கு விரைந்து சென்றனர்.

அவர்கள் காயமடைந்தவர்களை மீட்டு அருகிலுள்ள வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர்.

அத்துடன் தொடர்ந்து மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (7)

# மத ரீதியில் முன்னெடுக்கும் பயங்கரவாதத் தாக்குதல் தனிநபராலும் இடம்பெறலாம்

## அமைச்சர் ருவான் எச்சரிக்கை

(கொழும்பு)

**சஹ்றான் மற்றும் ரில்வானின் பின்னர் தீவிரவாத அமைப்பிற்கு தலைமைத்துவத்தை எடுக்கவிருந்த நௌவ்பர் என்ற நபரை கைதுசெய்துவிட்டோம். இனிமேல் இவர்கள் அணியாகச் செயற்பட எந்த வாய்ப்பும் இல்லை. ஆனால் மதரீதியில் முன்னெடுக்கும் இந்தப் பயங்கரவாதத் தாக்குதல் தனிநபராலும் இடம்பெறலாம் எனப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன எச்சரித்தார்.**



அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒருமாத காலம் நீடிக்கும் நாடாளுமன்ற விவாதத்தில் நேற்று முன்தினம் பதிலுரை ஆற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலின் பின்னர் 9 பெண்கள் உள்ளிட்ட 105 பேரை பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ் தடுத்து விசாரணை நடத்தி வருகின்றனர். விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்பதை கூற முடியும். அதேபோல் இந்த தாக்குதல் குறித்து எமக்கு சர்வதேச விசாரணைக் குழுக்கள் உதவி செய்தன. அவர்களுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும்.

அதேபோல்சஹ்றான்அணியை நாம் முழுமையாக பிடித்துள்ளோம். சஹ்றானின் பின்னர் அவரது தம்பி ரில்வான் தலைமைத்துவம் எடுக்க இருந்தார். ஆனால் அவர் இறந்துவிட்டார். அவரின் பின்னர் நௌவ்பர் என்ற நபர் தம்புள்ளையில் கைது செய்யப்பட்டார்.

இவர்தான் அடுத்த தலைமையை கையில் எடுக்க இருந்தவர். அதேபோல் குண்டு தயாரிக்க இருந்த நபர்கள் இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டுவிட்டனர். இப்போது ஏன் அவசரகால சடடம் என்ற கேள்வி எழும். ஆனால் விசாரணைகளை நடத்த வேண்டும். இன்றும் சஹ்ரானின் சகாக்கள் கைதாகி வருகின்றனர். ஒரு சிறு உதவி செய்த நபர்களையும் நாம் கைது செய்கின்றோம்.


ஆகவே இந்தத் தேடுதல்கள் நடத்த மேலும் ஒரு மாதகால அவகாசம் வேண்டும். அதற்காகவே சட்டத்தை நீட்டித்துள்ளோம். இன்னும் ஒரு மாத காலத்தில் அவசரகால சட்டத்தை நீக்க நாம் நடவடிக்கை எடுக்க முடியும். எவ்வாறு இருப்பினும் கோவில்கள், பாடசாலைகள் மற்றும் உயர்ஸ்தானிகராலயம் ஆகியவற்றிற்கு பாதுகாப்பு இன்னமும் உறுதிப்படுத்தப்பட வேண்டிய தேவை உள்ளது. எனவே ஒரு மாதகாலமேனும் நீடிக்க வேண்டும் என நினைகின்றோம்.

இராணுவ தளபதி கூறியது சரி. இந்த தாக்குதல் எப்போதும் எங்கேயும் நடக்கலாம். இது மதம் சார்ந்த பயங்கரவாதம். ஒரு தனி நபர் எந்த வகையிலும் எதை ஆயுதமாக பயன்படுத்தியும் தாக்குதலை நடத்த முடியும். ஆகவே இனி எப்போதும் இந்தத் தாக்குதல் மாதிரி ஒன்று நடக்காது எனக்கூற முடியாது. ஆனால் சஹ்றான் போன்று ஒரு குழுவால் இதனை இன்னொரு முறை செய்ய முடியாது என்று உறுதியாகக் கூற முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

---

# உறவுகளுடன் கைகோர்த்து குரல் கொடுப்பதை இனவாதமாகக் கருதுவது கவலைக்குரியது

## அங்கஜன் எம்.பி.தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

நேரான வழியில் ஜனநாயக முறையில் போராட்டக் களத்தை உருவாக்கியிருக்கும் இரத்த உறவுகளுடன் கைகோர்த்து குரல் கொடுப்பதை இனவாதமாகக் கருதுவது கவலைக்குரியது என நாடாளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா சுதந்திர தமிழர் ஒன்றியத்தின் தலைவருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

கிழக்கு வாழ் மக்களுக்கான வடக்கு மக்கள் சார்பாக வலுவிழந்து காணப்பட்டதனால், கிழக்கு மக்களும் எமது உறவுகளே. அவர்களுக்கு நம்பிக்கையளிக்கும் வகையிலும் நிரந்தரத் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதை வலியுறுத்தியும் போராட்டக் களத்தில் இணைந்திருந்தேன்.

வடக்கும் கிழக்கும் எமது பூர்வீகமே. வடக்கு மட்டும் தாயகம் எனக் கருதி கிழக்கு வாழ் மக்களின் கோரிக்கைகள் மலினப்படுத்தப்பட்டு புறக்கணிக்கப்பட்டுள்ளன.

நல்லாட்சியை கொண்டு வந்தவர்கள் மக்களின் நன்றிக் கடனை புறம்தள்ளியுள்ளனர்.

யுத்தம் மௌனித்த சூழ்நிலைகளில் கூட ஒருமித்த முடிவின் மூலம் இராஜினாமா செய்திருந்தால் வழி மாற்றம் ஒன்றை ஏற்படுத்தி இருக்க முடியும் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

மக்களின் பிரதிநிதிகள் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யாது பதவிகளை அலங்கரித்துப் பலனில்லை.

வடக்கு- கிழக்கு மற்றும் மலையகம் என ஒட்டுமொத்தமாக அனைவரினதும் ஆதரவுத் தளத்துடன் போராட்டக் களத்தை உருவாக்கி பலமான உறவுப்பாலத்தை ஏற்படுத்தியிருப்பவர்களோடு நாமும் ஒருமித்த முடிவின்பால் நின்று அழுத்தமான நிலையின் மூலம் மக்களின் தேவைகளை நிறைவேற்றுவோம் என கிழக்கின் போராட்டக் களத்தில் இணைந்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் மேலும் தெரிவித்தார். (இ-7)

---

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## அற்புதங்களின் ஆதாரம்

ஓர் ஊருக்கு அருகில் ஓர் ஆறு ஓடிக் கொண்டிருக்கின்றது. அந்த ஆற்றுக்கு அடுத்த கரையிலே ஒரு காடு. அந்தக் காட்டிற்குள்ளே ஓர் ஆசிரமம். அந்த ஆசிரமத்திலே ஒரு குரு இருந்தார்.

அந்தக் கிராமத்திலே பால் விற்பனை செய்து கொண்டிருந்தார் ஒரு அம்மா. ஆசிரமத்திலே இருந்த அந்த குருவுக்கும் தினமும் பால் கொண்டு போய் கொடுப்பது இவர் தான். வேளாவேளைக்கு சரியாக கொண்டு போய் கொடுத்து விட்டு வந்து கொண்டிருந்தார்.

ஒரு சமயம் அந்த ஆற்றிலே வெள்ளம் அளவுக்கு அதிகமாக ஓடிக் கொண்டிருந்தது. அதனாலே படகு போக்குவரத்து கொஞ்சம் முன்னே பின்னே தாமதப்பட்டது.

இந்த அம்மாவாலே சரியான நேரத்திலே ஆசிரமத்திற்கு போய்ச் சேர முடியவில்லை.

அந்த குருவுக்கு கோபம் வந்து விட்டது.

வேளாவேளைக்கு ஒழுங்காக வருவதில்லையே ஏன் இப்படி? என்று கோபித்துக் கொண்டார்.

நான் என்ன செய்வது? தினமும் பொழுது விடிவதற்கு முன்னாடியே வீட்டை விட்டு கிளம்பி விடுகின்றேன். இருந்தாலும் அந்த ஆற்றங்கரையில் வந்து காத்துக் கொண்டு கிடக்க வேண்டியிருக்கின்றது! ஓடக்காரன் வந்து சேருவதற்கு ரொம்ப நாள் ஆகிவிட்டது.என்றார் அந்த அம்மா.

அந்த குரு இதைக் கேட்டதும் சிரித்தார்.

என்னம்மா நீ இப்படி சொல்கின்றாய்? பகவானுடைய நாமத்தை உச்சரித்துக் கொண்டே பலபேர் பிறவி என்கிற பெரிய கடலையே தாண்டிவிடுகிறார்கள். நீ என்னமோ இந்தச் சின்ன ஆற்றைக் கடப்பதற்கு ஓடக்காரனை நம்பிக் கொண்டிருக்கின்றாயே? என்றார்.

கள்ளங்கபடமில்லாத அந்த அம்மா இந்தப் பெரியவர் சொன்னதை அப்படியே நம்பினார். ஆற்றைக் கடப்பதற்கு சுலபமான வழி அதற்குத் தெரிந்து போய் விட்டது.

அடுத்த நாளில் இருந்து அந்த குருவுக்கு காலா காலத்திலே பால் கிடைத்துக் கொண்டு வந்தது.

ஒரு நாள் அந்த அம்மாவைப் பார்த்து கேட்டார்.

ஏம்மா? இப்பெல்லாம் நீ நேரத்திற்கு கரெக்டாக பால் கொண்டு வந்துகொடுத்து விடுகின்றாயே அது எப்படி? என்றார்.

நீங்க தானே சுவாமி அதற்கு வழி சொல்லிக் கொடுத்தீங்க என்றார் அந்த அம்மா.

என்ன வழி சொல்லிக் கொடுத்தேன்? என்றார் அவர்.

இப்ப எல்லாம் நான் அந்த ஓடக்காரனுக்காக காத்துக் கொண்டிருக்கின்றதில்லை. பகவான் நாமத்தை சொல்லிக் கொண்டே ஆற்றைக் கடந்து வந்து விடுவேன் என்றார்.

சுவாமி வழி சொல்லிக் கொடுத்தாரே தவிர அது எப்படி ஆண்டவன் பெயரைச் சொன்னால் ஆற்று மேலே நடக்க முடியும்? என்கின்ற சந்தேகம் அவருக்கு.

என்னைக் கொஞ்சம் அழைத்துக் கொண்டு போய் நேரில் அதைக் காட்டு என்றார். சரி என்று சொல்ல இரண்டு பேரும் அந்த ஆற்றங்கரையில் போய் சேர்ந்தார்கள். ஆண்டவன் பெயரைச் சொல்லிக் கொண்டே அந்த அம்மா கிடுகிடு என்று சர்வசாதாரணமாக தண்ணீர் மேலே நடந்து போக ஆரம்பித்தார்.

கொஞ்ச தூரம் போனதன் பின் திரும்பி சுவாமியைப் பார்த்து இவர் காலை வைத்தால் அது தண்ணீருக்குள் போகின்றது. மிகவும் சிரமப்பட்டுக் கொண்டு இருந்தார்.

என்ன இது? நானும் பகவான் நாமத்தைத் தான் சொல்லுகின்றேன். என்னால் தண்ணீர் மேலே நடக்க முடியவில்லை என்றார்.

அதற்கு அந்த அம்மா...

சுவாமி என்ன இது? பகவான் நாமத்தை வாயாலே சொல்லுகின்றீங்க! ஆனால் அதே நேரம் துணி எங்கே நனைந்திடுமோ என்ற பயத்திலே அதை கையாலே தூக்கி பிடித்துக் கொண்டிருக்கின்றீர்களே! அப்படி என்றால் உங்களுக்கு பகவானிடம் பரிபூரண நம்பிக்கை இல்லையே என்றார்.

அதன்பின் தான் அந்த வெகுளிப் பெண்மணி சொன்ன வார்த்தையின் தத்துவம் அந்த சுவாமிக்கு விளங்க ஆரம்பித்தது.

தீவிரமான நம்பிக்கை- பரிபூரண சரணாகதி இது தான் அற்புதச் செயல்களுக்கு ஆதாரம் என்பதை புரிந்து கொள்வதற்காக இந்தக் கதையை ராமகிருஷ்ணர் சொல்லியிருக்கின்றார்.

இந்தக் கதையைக் கேட்ட இந்தக் காலத்து குடும்பஸ்தர் ஒருத்தர்... எங்கள் குடும்பத்திலே சண்டை சச்சரவே இது வரைக்கும் வந்ததில்லை சேர். அதற்குக் காரணமும் நான் கடைப்பிடிக்கின்ற இதே தத்துவம் தான்! என்றார்.

அது என்ன தத்துவம் என்றார்.

பரிபூரண சரணாகதி! என்றார் அவர்.

# சஹ்ரான் போதனை 51 முஸ்லிம்கள் கைது



## நளின் பண்டார தகவல்

(கொழும்பு)

சஹ்ரானின் போதனைகளில் கலந்துகொண்ட 51 முஸ்லிம்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் வெறுமனே போதனைகளில் மட்டுமே கலந்துகொண்டவர்களாக இருந்தாலும் கூட இவர்களை விடுதலை செய்ய முடியாது. அவ்வாறு விடுவதென்றாலும் இவர்களைப் புனர்வாழ்வுக்கு உட்படுத்தியே விடுதலை செய்ய முடியும் என பிரதி அமைச்சர் நளின் பண்டார பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒருமாத காலத்துக்கு நீடிக்கும் விவாதத்தில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதலைத் தொடர்ந்தே மீண்டும் அவசர காலச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டியேற்பட்டது. இது தொடர்பாக முப்படையினரும் பொலிஸாரும் முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு அவசரகாலச் சட்டம் முக்கியமானது. அவசரகால சட்டத்தில் பொலிஸார் மட்டுமல்ல முப்படைகளும் தமது பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க முடிந்துள்ளது. இது ஆரோக்கியமான விடயமாகும். ஏனெனில் நாட்டின் அவசர நிலைமையில் பொலிஸாரால் மட்டுமே நிலைமைகளைக் கட்டுப்படுத்த முடியாது.

ஆகவே அவசர காலச் சட்டத்தின் கீழ் இராணுவம் மற்றும் ஏனைய பாதுகாப்புப் படைகளுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டு அவர்களுக்கும் தேசிய பாதுகாப்பு விடயத்தில் பாரிய பொறுப்பைக் கொடுத்திருப்பது நல்ல விடயம் என்றே கருதுகின்றோம்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து இதுவரையில் 2389 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் 236 பேர் விளக்க மறியலில் வைக்கப்பட்டதுடன் 189 பேர் தடுப்புக் காவலிலும் வைக்கப்பட்டனர். 3 பேர் அவசர காலச் சட்டத்தின் கீழும் 186 பேர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழும் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் 263 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அத்தோடு 94 பேர் தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனை பெற்றுக்கொள்ளப்படவுள்ளதுடன் 7 பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

அத்துடன் கைதாகியவர்களில் 79 பேர் பிரதான சந்தேக நபர்களாவர். குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பில் 29 பேரும் பயங்கரவாத விசாரணைப்பிரிவின் பொறுப்பில் 29 பேரும் கொழும்பு குற்றவியல் விசாரணைப் பிரிவின் பொறுப்பில் 29 பேரும் இருக்கின்றனர் எனத் தெரிவித்தார். (இ-7)

# என்னால் தெரிவுக்குழு முன் சாட்சியமளிக்க முடியாது

## தயாசிறி மறுப்பு



(கொழும்பு)

பாராளுமன்றத் தெரிவுக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்க எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. எனினும் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் குறித்து நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ள நிலையில் அது குறித்து விசாரிப்பது என்றால் தெரிவுக் குழு முன்னிலையில் நான் வர முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர சபையில் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த சபை முதல்வர் லக்ஷ்மன் கிரியெல்ல, நீதிமன்றத்திற்கோ அல்லது வேறு யாருக்கேனுமோ பாராளுமன்றத்திற்கு தடை போட முடியாது என்றார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அவசர காலச் சட்டத்தை நீடிக்கும் விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே தயாசிறி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாராளுமன்றத் தெரிவுக்குழு தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பிக்களும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு எம்.பிக்களும் கையெழுத்திட்டிருந்தனர்.

இதன் பின்னர் அதற்குள் தெரிவுக்குழு யோசனைக்கு திருத்தமொன்று உள்ளடக்கப்பட்டது. கையெழுத்திட்ட எம்.பிக்களுக்கும் தெரியாமலே அது நடந்தது. தற்போது தெரிவுக்குழு தொடர்பாக பாரிய நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. நீதிமன்றத்தால் வழங்கக்கூடிய தீர்ப்பு தொடர்பான விடயங்களுடன் தொடர்புடைய விடயங்களை இங்கு கலந்துரையாட முடியாது.

தற்போது உயர் நீதிமன்றத்தில் 5 வழக்குகள் இது தொடர்பாக இடம்பெற்று வருகின்றன. சட்டமா அதிபரால் ஜனாதிபதிக்கு இது தொடர்பாக கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டது.

ஜூன் 4ஆம் திகதி அந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது. அந்தக் கடிதத்தில் நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பாக குறிப்பிடப்பட்டது. இதனை இந்தக் குழுவில் விசாரணைக்குட்படுத்த முடியாது. இதனால் உடனடியாக இந்த குழுவை கைவிட வேண்டும்.

எனக்கும் இந்தக் குழுவுக்கு வருமாறு கூறப்பட்டது. நான் இந்தக் குழுவுக்கு செல்வதா? இல்லையா? என்று சிந்திக்க வேண்டும். நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்படும் விடயமொன்று தொடர்பாக நான் எவ்வாறு தெரிவுக்குழுவில் கலந்துரையாடுவது. எம்.பி.யாக இருந்து கொண்டு எனக்கு எவ்வாறு இதற்குப் பதில் கூற முடியும். தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நடத்தப்படவிருந்த குண்டுத்தாக்குதல் தொடர்பாக நான் வெளியிட்ட கருத்து தொடர்பாகவே அழைப்பு விடுக்கப்பட்டது.

எவ்வாறாயினும் தெரிவுக்குழுவை சட்டமா அதிபரின் அறிவித்தலுக்கமையவும் நிலையியல் கட்டளைக்கமையவும் நடத்திச் செல்ல முடியாது. இதனால் அதனை இரத்துச் செய்யுமாறு கேட்கின்றேன் என்றார்.

இதற்குப் பதிலளித்த சபை முதல்வரான அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, நீதிமன்றத்திற்கோ அல்லது வேறு யாருக்கேனுமோ பாராளுமன்றத்திற்கு தடை போட முடியாது. அநுர பண்டாரநாயக்க சபாநாயகராக இருந்த காலத்தில் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. நீதிமன்றத்திற்கோ வேறு யாருக்குமோ பாராளுமன்றத்திற்கு தடைபோட முடியாது. சட்டமா அதிபருக்கோ உயர் நீதிமன்றத்திற்கோ அவ்வாறு செய்ய முடியாது.

இதனைப் பாராளுமன்றமே தீர்மானிக்க வேண்டும் என்றார். மீண்டும் கருத்துத் தெரிவித்த தயாசிறி ஜெயசேகர, பாராளுமன்ற விடயத்தில் நீதிமன்றத்தால் தடைபோட முடியாது என்ற விடயத்திற்கு நாங்களும் இணங்குகின்றோம்.

ஆனால் நாங்களே அமைத்த பாராளுமன்ற நிலையியல் கட்டளையிலேயே நீதிமன்றத்தால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பாக பாராளுமன்றத்தில் நடவடிக்கையெடுக்க முடியாது என்று கூறப்பட்டுள்ளதே எனப் பதில் கேள்வியெழுப்பினார். (இ-7)

# வைத்தியர் ஷாபி விவகாரம் சி.ஐ.டி.மீது நம்பிக்கையிழப்பு

## அத்துரலிய ரத்னதேரர் அதிருப்தி

(குருநாகல்)

சி.ஐ.டியின் சமூக கொள்கை தொடர்பிலான விசாரணைப் பிரிவின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பி.எஸ்.திசேரா வைத்தியர் ஷாபி தொடர்பில் நீதிமன்றத்தில் முன்வைத்த விளக்கங்களால் ஒட்டுமொத்த சி.ஐ.டி மீதான நம்பிக்கை இல்லாமல் போயுள்ளது எனப் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.

குருநாகல் நீதிமன்றத்தில் வைத்தியர் ஷாபி தொடர்பான வழக்கு விசாரணைகள் நிறைவடைந்ததன் பின்னர் நீதிமன்ற வளாகத்தில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் இனங்களுக்கிடையில் பிரச்சினைகளை ஏற்படுத்துவதற்காகவே இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்ற என விஷேட வைத்தியர் தன்னிடம் குறிப்பிட்டதாக திசேரா மன்றில் தெரிவித்தார். அந்த விசேட வைத்தியர் யார் என்பதை தெளிவுபடுத்த வேண்டும்.

முரண்பாடான கருத்துக்களால் சி.ஐ.டியின் மீதான நம்பிக்கை இல்லாதொழிக்கப்பட்டது. சி.ஐ.டியின் உயர் அதிகாரிகள் முதலில் இவர் மீது விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும். அரசியல் தலையீடுகளாலேயே சுயாதீன விசாரணைகள் இடம்பெறவில்லை. இவ்விவகாரத்தை சர்வதேச மட்டத்திற்குக் கொண்டு செல்வோம்.



அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் பிரதான வைத்திய பிரிவு இவ்விடயம் தொடர்பில் ஆராய்வதற்கு இணக்கம் தெரிவித்தது. அடுத்த வாரம் இந்தியாவிலுள்ள சிறப்பு வைத்திய நிபுணர்களை இலங்கைக்கு வரவழைத்து சுயாதீன பரிசீலனைகள் இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# போதைப்பொருள் விற்பனையாளர்களை தூக்கிலிட்டு தப்பிக்க பார்க்கிறார் மைத்திரி

## பிமல் ரத்நாயக்க விமர்சனம்



(கொழும்பு)

குடும்ப ஆட்சி மற்றும் ஊழல் இல்லாத ஆட்சியை ஏற்படுத்த எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போதைப்பொருள் பாவனையால் கீழ் மட்டத்தில் உள்ள மக்களே அதிகளவில் அழிவை சந்தித்துள்ளனர்.

போதைப்பொருள் விற்பனையாளர்களை தூக்கிலிட்டு அதனை முடிவுக்கு கொண்டு வந்த எந்த நாடும் கிடையாது.

போதைப்பொருள் என்பது முதலாளித்துவத்தின் ஒரு பகுதி. பணம் இருப்பவர்கள், பணத்தை செலவிட்டு புனர்வாழ்வு பெற்று மரணத்தில் இருந்து தப்பிக்க முடியும்.

எமது நாட்டில் போதைப் பொருளுக்கு அடிமையான இளைஞர்களுக்கு புனர்வாழ்வு வழங்க சாதாரண மட்டத்திலான இடங்கள் கூட இல்லை.

ஜனாதிபதி மைத்திரி போதைப் பொருள் விற்பனையாளர்களை தூக்கிலிட்டு தப்பிக்கப் பார்க்கின்றார் எனவும் பிமல் ரத்நாயக்க மேலும் தெரிவித்தார். (இ-7)

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்–176

# தூய்மைக்கு முதலிடம் கொடுத்தால் அனைத்தும் அதுவாகவே...



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 190

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

பிரித்தானியாவின் ஒரு பகுதியான ஸ்கொட்லாந்துக்கு பிரித்தானியாவினதும் எடின்பரோ நேப்பியர் பல்கலைக்கழகத்தினதும் தரமான கல்விமுறையின் அணுகுமுறை பற்றி தெரிந்து கொள்வதற்காக பிரித்தானிய கவுன்சிலின் திட்டத்தினூடாக பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் சார்பில் அதன் தலைவரும் தரமான கல்விக்கான ஆணைக்குழுவின் தலைவியும் மற்றும் இலங்கையிலுள்ள ஆறு பல்கலைக்கழகங்களின் உள்ளக தரமான கல்விக்கான அலகின் பணிப்பாளர்களுமாக 10 பேர் கொண்ட குழு சென்று வந்ததிலிருந்து அங்கே அறிந்தவை பற்றி விபரிப்பதாக இம்முறை இக்கட்டுரை அமைகின்றது. பல சுவாரஸ்யமான விடயங்களுடன் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

அதிகம் குடித் தொகையில்லாத பிரித்தானியாவின் பிரதேசமிது. இருப்பினும் இங்குள்ள மக்களின் அன்பும் அரவணைப்பும் பிரமிப்பூட்டுவதாக அமைகின்றது. பிரதேசம் சுத்தமாக இருக்கின்றது. மக்கள் நகரை சுத்தமாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவது தெரிகின்றது. பெரியவர்,சிறியவர் என்ற பேதத்தை உணரவே முடியவில்லை. அவரவர் தன் பணி, சமூகப்பணி என்பனவற்றை செய்வதில் ஆர்வம் காட்டுவது வெளிப்படையாகவே தெரிந்தது. ஒருவரோடு ஒருவர் முட்டிக் கொள்வதில்லை என்பது நடைமுறையிலும் அவரவர் பேச்சிலும் தெரிகின்றது.

வாகனங்கள் கூட நெரிசலான பாதைகளிலும் இன்னும் நெருக்கமாகப் பயணித்தாலும் ஒன்றுடன் ஒன்று முட்டிக்கொள்வதேயில்லை. அதெப்படி இதெல்லாம் சாத்தியமாகின்றது என்பது அதிசயமாகத்தான் இருக்கின்றது. வீதிப் போக்குவரத்து நெறிமுறைகளை மக்களும் சாரதிகளும் கவனமாகக் கடைப்பிடிப்பதன் விளைவு தான் இது. இது பற்றி இன்னொரு இடத்தில் அலசியாராய்வோம்.

வெப்பநிலை பொதுவாக 9 இலிருந்து 15 பாகை செல்சியஸ் வரையில் இருந்தாலும் அவ்வப்போது மழையும் பெய்கின்றது. நல்ல தண்ணீர் அனைத்துப் பாவனைக்கும் தாராளமாகக்கிடைக்கின்றது. தண்ணீர்ப் பற்றாக்குறை என்ற சொல்லுக்கே இடமில்லாதவாறு வளமுள்ள நாடு. பொலித்தீன் பாவனை முழுமையான கட்டுப்பாட்டிற்குள் இருக்கின்றது. எந்தப்பொருள் வாங்கினாலும் பை இருக்கின்றதா? எனக் கேட்கின்றார்கள். பையைக் கொண்டுவந்து பொருட்களை வாங்கிக்கொள் என்று அதற்கு அர்த்தம். இல்லையென்றால் ஒரு பைக்கு 20 பென்னி அறவிடுகின்றார்கள். இந்த நடைமுறை அனைத்து இடங்களிலும் இருப்பதை அவதானிக்க முடிகின்றது. இதனை தமிழ்நாட்டின் கோயம்புத்தூரிலும் காண முடிந்தது. பொலித்தீன் மற்றும் சொப்பிங் பைகள் இலவசமாகக் கொடுக்கப்படுவதில்லை என்பதனை இரண்டு இடங்களிலும் அவதானிக்க முடிந்த விடயங்கள். காசு கொடுத்து பைகளை வாங்கும் பழக்கத்தை உருவாக்கினால் குப்பைகள் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடும். தெருவோரம் இவ்வாறான பைகள் பறந்து திரியமாட்டா. இது நல்ல முடிவு. இன்னும் தீர்மானம் மக்களின் உதவியோடு நடைமுறைப்படுத்தப்படும். இவ் விடயத்தை நாமும் கடைப்பிடித்தால், பரிந்துரைத்தால் நமது தேசமும் பொலித்தீன் மற்றும் சொப்பிங் பை விடயத்தை காசு கொடுத்தும் வாங்கிப் பயன்படுத்தும் நடைமுறைக்குள் வந்து





விட்டால் நிச்சயமாக மாற்றம் ஒன்று ஏற்படும். குப்பைகள் தெருவோரம் மற்றும் சந்திகளில் கொட்டிக் கிடக்காது. அவரவர் வீடுகளில் மீள் சுழற்சி செய்து பயன்படுத்த வேண்டிய சேதனக் குப்பைகள் தெருவுக்கு வரவாய்ப்பில்லாது போய்விடும். உரியவர்கள் நடைமுறைப்படுத்துவார்களா?

சாவகச்சேரி நகரசபை எடுத்திருக்கும் துணிச்சலான முடிவை பாராட்டல் தகும். பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக்கின் பாவனையை முழுமையாக தவிர்ப்பதற்காக எடுத்திருக்கும் முயற்சி பல விமர்சனங்களுக்கு மத்தியிலான துணிந்த முயற்சியாகும்.

இதற்கு மக்களின் ஆதரவும் கிடைத்திருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயமுமாகும். மக்கள் மயப்பட்ட எந்தச் செயற்பாடும் வெற்றியளித்திருப்பதனால் இந்த முயற்சி முதன்முறையாகச் செயற்படுத்தப்படும் சிறப்புக்குரியதாகின்றது. ஸ்கொட்லாந்தில் மக்கள் குப்பைகளை அந்தந்த இடத்தில் அதற்குரிய கொள்கலன்களில் பிரித்துப் போடுவதனை அவதானிக்கலாம். குப்பைகள் தேங்கவிடாது அன்றைய தினமே அகற்றப்படுகின்றன. நகரத்தினது சட்டதிட்டங்கள் முழுமையாக கடைப்பிடிக்கப்படுகின்றன. வாகனங்களில் ஹோர்ன் ஒலியின் சத்தத்தை கேட்டதாகவே தோன்றவில்லை. அமைதியாக வாகனங்கள் நகர்ந்துகொண்டிருப்பதனைப் பார்க்கலாம்.

பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீனை முற்றுமுழுதாக தவிர்ப்பதற்கான நடைமுறைகள் முதலில் நகரமட்டத்தில் ஆரம்பித்து பின்னர் மாகாண மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். பாவனையை குறைப்பதாயின் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படல் வேண்டும். அட ஊருக்கு உபதேசம் செய்வதை விட நாமாக முதலில் செய்து காட்டுவோமே என திருநெல்வேலி சந்தைக்கு துணிவாங்கும் போது தந்த துணிப்பையுடன் சென்றேன். மரக்கறிகள் வாங்கும் போது ஒவ்வொன்றுக்கும் சொப்பிங் பையில் தான் தந்தார்கள். சரி வெங்காயம், மிளகாய் என்பனவற்றை தருவதற்கு சொப்பிங் பையை பயன்படுத்தினார்கள். ஆனால் பூசணிக்காயுக்கும் புடோலங்காயுக்கும் இன்னும் கத்தரிக்காயுக்கும் ஏன் சொப்பிங்பை எனது துணிப்பையிலேயே போடுங்கள் என்றேன். மரக்கறி விற்பவர் என்னை ஒரு மாதிரிப் பார்த்தார்.

ஏன் என்ன விடயம் எனக்கேட்டேன். இங்கே சொப்பிங் பையில் மரக்கறி கொடுக்கவில்லையென்றால் அதனை வாங்க வருகிறார்கள் இல்லை என்றார். ஆக விற்பவருக்கு பிரச்சினையாகியிருக்கின்ற விடயமாக மரக்கறி வாங்குபவர்கள் செப்பிங்பையில் தான் தாருங்கள் என்பது தான்.

ஆனால் அந்த பையை இலவசமாக பெறுகின்றார். இலவசமாகக் கிடைத்த பொருளை தேவை முடிந்தபின் மண்ணில் குப்பையாக எறிந்து விடுகின் றார். அவ்வளவுதான். இலவசத்தால் மண்ணில் உக்கமுடியாத குப்பை தேங்குகின்றது. அதையே ஒரு சொப்பிங்பை 2 ரூபாவுக்கு வாங்கித்தான் பயன்படுத்த வேண்டும் எனக் கட்டாயப்படுத்தினால் இதன் பாவனை மட்டுப்படுத்தப்பட்டு விடும். அல்லது துணிப் பையோ அல்லது எந்தப்பையோ கொண்டு வந்து தான் பொருளை வாங்கிச் செல்ல வேண்டும் என ஆக்கிவிட்டால் துணிப்பையின் பாவனை அதிகரித்து அவரவர் பொருளை வாங்க வரும் போது பைகளைக் கொண்டு வந்து பொருளை வாங்கும் நிலை வந்துவிடும். இதனை ஸ்கொட்லாந்து மக்களும் கோயம்புத்தூர் மக்களும் செய்யும் போது நாம் இங்கே வடபகுதியில் ஏன் இதனை செய்யக் கூடாது.

எமது பிரதேசத்திலும் இவ்வாறான நடைமுறையைக் கொண்டு வருவதில் என்ன தடையிருக்கின்றது என தெரியவில்லை. இதற்கான முயற்சிகள் மும்முரமாக எடுக்கப்படவில்லை என்பது போல் தெரிகின்றது. யார் இந்த பூனைக்கு மணியைக்கட்டுவது என்பதில் தான் பிரச்சினைபோலவும் கதை அடிபடுகின்றது.

எது எவ்வாறாயினும் இந்த விடயத்திற்கு நேரடியாகப் பொறுப்பானவர்கள் இதனை நடைமுறைப்படுத்தியே ஆகவேண்டும். விமர்சனங்களை வைத்துக் கொண்டால் நாம் எதனையும் சாதிக்க முடியாது. நல்ல காரியங்களை ஆறப்போடவும் கூடாது.

மக்கள் மயப்பட்ட எந்தக் காரியமும் வீண் போனதில்லை. மாறாக மக்களும் நல்ல விடயங்களுக்கு நிச்சயமாக ஒத்துழைப்புத் தருவார்கள். குப்பையை அகற்றுவதனை அரசியலாக்கக் கூடாது.

அரசியலே குப்பையாக இருக்கும் இக்காலகட்டத்தில் அன்றாடம் சேரும் குப்பைகளை ஒழுங்கு முறையில் அகற்றுவதற்கும் அவற்றை முடிந்தளவிற்கு மீள் சுழற்சி செய்து பயன்படுத்துவதற்கும் நடைமுறைச் சாத்தியமான விடயங்கள் எடுக்கப்படல் வேண்டும்.

முயற்சியும் தோல்வியும் தானே வெற்றியின் முதற்படிகள். வெறுமனே குப்பைகொட்டும் கதைகளை எடுத்துவிடாது நகரக்குப்பைகளை முறையாக அகற்றி நகரைச் சுத்தமாக வைத்திருக்க ஆவன செய்வோம்.

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

286

## சுதந்திரத்தின் பின் இலங்கை அரசின் அரசியல் நடவடிக்கைகளும் தமிழ்த் தேசியத்தின் எழுச்சியும் (கி.பி.1948-கி.பி.1983)

ஆனால் அரசாங்கமானது மேற்படி இடைத்தேர்தலை நடத்தாது மூன்று வருடங்களாக இழுத்தடித்தது. ஈற்றில் பெப்ரவரி 1975 இல் காங்கேசன்துறை இடைத்தேர்தல் நடைபெற்று செல்வநாயகம் தமிழ் மக்களின் அமோக ஆதரவுடன் மீண்டும் பாராளுமன்றம் சென்றார்.

அரசாங்கத்தின் சார்பில் போட்டியிட்ட பொதுவுடைமைக் கட்சி வேட்பாளர் வி. பொன்னம்பலம் தோல்வியைத் தழுவிக் கொண்டார்.

1973 ஆம் ஆண்டு மல்லாகத்தில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் 12 ஆவது தேசிய மகாநாட்டில் தமிழ் பேசும் மக்களின் விடிவுக்கு ஒரு புதிய சிந்தனை தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

கட்சி உயர்பீடம் தமிழருக்கெனத் தனிநாடு கோருவதென எடுத்த முடிவுக்கு இந்த மகாநாட்டில் அங்கீகாரம் வழங்கப்பட்டு உறுதி செய்யப்பட்டது. அத்தீர்மானம் பின்வருமாறு அமைந்தது.



டட்லி சேனநாயக்க

இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்கள் தமது மொழி, கலாசாரம், பிரதேசம் என்பவற்றுடன் தாம் ஒரு தனியான தேசமாகப் பிரிந்து வாழ வேண்டும் என்ற தீவிரமான விருப்பையும் கொண்டிருப்பதனால் அவர்கள் எல்லா வகையிலும் ஒரு தனியான தேசமாக இருப்பதற்கு முழுமையான தகுதியைக் கொண்டுள்ளனர்.

அவர்களுக்கு ஒரேயொரு வழிதான் உண்டு... சர்வ தேசத்தினால் அங்கீகரிக்கப்பட்டதான ஒவ்வொரு தேசத்திற்கும் உள்ள சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அவர்கள் தமது சட்டபூர்வமான சொந்தத் தாயகத்தில் சுய ஆட்சியை நிறுவுவதே அவ்வழியாகும்.

இதன்பின்னர் எப்போதெல்லாம் சந்தர்ப்பம் கிடைத்ததோ அப்போதெல்லாம் கட்சியினது புதிய வழி ஒவ்வொரு மேடையிலும் முழங்கப்பட்டது. ஆயினும் தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரையில் அது சமரசத்திற்கான தனது கதவை மூடிக்கொள்ளவில்லை.

ஆனால் 1975 இல் தமிழ் இளைஞர் குழுவொன்று முன்னாள் யாழ்ப்பாண நகரபிதாவும் யாழ்ப்பாணத் தொகுதியின் முன்னாள் பாராளுமன்றப் பிரதிநிதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாண அமைப்பாளருமான அல்பிரட் துரையப்பாவைப் படுகொலை செய்தது.

மேலும் 1974 இல் நான்காவது அனைத்துலக தமிழாராய்ச்சி மகாநாட்டின் இறுதிநாளன்று நடந்த சம்பவங்கள் தமிழ் இளைஞரின் ஆத்திரத்தை மேலும் தீவிரமடையச் செய்திருந்தன. அவர்கள் தொடர்ந்தும் பொலிஸ் அதிகாரிகளையும் புலனாய் வாளர்களையும் தாக்கி கொலையும் செய்தனர்.

அத்துடன் அவர்கள் தமிழர் போராட்டங்களை விரிவுபடுத்தும்படியும் . தமிழ் அரசியல் தலைவர்களுக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுத்தனர். 1972 இலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட தரப்படுத்தலினால் ஆயிரக்கணக்கான தமிழ் இளை ஞர் பாதிக்கப்பட்டனர்.

அவர்களுக்குப் பல்கலைக் கழக அனுமதி மறுக்கப்பட்டது. இதன்விளைவாக வேலையில்லாத் திண்டாட்டம் அவர்களை வாட்டியது.

பெரும்பான்மை சிங்கள அரசின் அடக்குமுறையும் பொருளாதாரக் கட்டுப்பாட்டுக் கொள்கையும் பல்வேறுபட்ட சமூக, பொருளாதார, அரசியல் நெருக்கடிகளுக்குள் அவர்களைப் பலாத்காரமாகத் தள்ளின.

ஏற்கனவே குறிப்பிட்டது போன்று 1973 இல் தமிழ் அரசியல் தலைவர்கள், சிங்களப் பெரும்பான்மை அரசுக்குச் சமரசத்திற்கான சந்தர்ப்பத்தை வழங்கியபோதும் அரசு அதையிட்டு எவ்வித அக்கறையையும் காட்டவில்லை.

இதன் விளைவாக தமிழ் அரசியல் தலைவர்கள் அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளையும் உள்ளடக்கி தமிழர் ஐக்கிய முன்னணி என்ற பெயரை மாற்றி அதற்குப் பதிலாக தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி என்ற பெயரின் கீழ் ஒன்றிணைந்தனர்.

சிங்களப் பெரும்பான்மை அரசின் பெரும்பான்மைப்பலம் என்ற அடிப்படையிலான இனவாதப்போக்கு சர்வாதிகாரம் கொண்டதாக மேலும் மேலும் அதிகரித்துச் செல்வதை தமிழ் இளைஞர்களால் ஜீரணிக்கமுடியாது அவர்கள் தொடர்ந்தும் தமிழ் அரசியல் தலைவர்களுக்கு அழுத்தங்களைக் கொடுத்தனர்.

இதன்விளைவாகத் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி செல்வநாயகம் தலைமையில் 14 மே 1976 இல் தமது முதல் மகாநாட்டைக் கூட்டியது.

இம்மகாநாட்டில் இந்நூலாசிரியருக்கும் தமிழ் மாணவர் பேரவை சார்பில் கலந்து கொள்கின்ற வாய்ப்புக் கிடைத்தது. இந்த மகாநாடு பின்வரும் அழைப்பை விடுத்தது.

பொதுவாகத் தமிழ்த்தேசமும் குறிப்பாக தமிழ் இளைஞரும் தம்மை இந்தப் புனிதப் போராட்டத்தில் இணைத்து சுதந்திர சமதர்ம தமிழ் ஈழம் என்ற இலட்சியத்தை அடையும்வரை சளைக்காது போராட முன்வர வேண்டும்.

தமது தேசத்துக்காக போராட்டத்தில் இறங்குவதற்கு அணி திரண்டிருந்த இளைஞர் இத்தீர்மானத்தின் ஒவ்வொரு சொல்லையும் அப்படியே மனதில் வரித்துக் கொண்டனர். பாராளுமன்ற முறைமையிலும் சிவில் அரசியல்வாதிகளிலும் அவர்களுக்கு நம்பிக்கையற்றுப் போய் விட்டிருந்தது.

ஆயுதப் போராட்டமே ஒரே வழியென்று நம்பிய அவர்களை பணிந்து போகும் ஒரு மக்களாக வாழ்வதைவிட செயற்படும்போதே சாவது மேல் என்ற எண்ணமே உந்து சக்தியாக ஊக்குவித்தது.

செல்வநாயகம் இறப்பதற்குச் சில மாதங்களுக்கு முன்னர் தேசிய அரச பேரவையில் நிகழ்த்திய உரை அவர் தனித் தமிழ் நாடு அமைப்பதனை முழுமையாக ஆதரித்தார் என்பதனை தெட்டத் தெளிவாகக் காட்டுகின்றது.

19, நவம்பர் 1976 ஆம் ஆண்டு ஒரு மசோதாவின் மீதான இரண்டாவது விவாதத்தின் போது ஐக்கிய இலங்கை என்ற கோட்பாட்டில் தன்னால் நம்பிக்கை கொள்ள முடியாதிருப்பதை நெஞ்சைத் தொடும் வகையில் அவர் ஒப்புக் கொண்டிருந்தார்.

தமிழ் பேசும் மக்களின் இந்த உரிமைகளை மீட்பதையே பிரதான இலட்சியமாகக் கொண்டிருந்த அவரது சமஷ்டி இயக்கம் இறுதியில் தோற்றுவிட்டதை அவர் உணர்ந்தார் போலத் தோன்றுகிறது.

(தொடரும்)

# பாரவூர்தி குடைசாய்ந்து விபத்து





(ஹற்றன்)

ஹற்றன் - கினிகத்தேன, கலுகொல்ல பகுதியிலுள்ள பிரதான வீதியில் பாரவூர்தி ஒன்று குடை சாய்ந்ததில் போக் குவரத்து பாதிப்படைந்தது.

கொழும்பு துறைமுகத்திலிருந்து போட்லேன்ட் மின்சார நிலையத்திற்கு பொருட்களை ஏற்றிச்சென்ற பாரவூர்தியே நேற்றுக் காலை இவ்வாறு சாய்ந்தது.

குறித்த வாகனத்தில் 25 தொன் நிறையுடைய இரும்பு மற்றும் உபகரணங்கள் ஏற்றிச் சென்றதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்தது.

இதன் காரணமாக பொல்பிட்டிய, மினுவாந்தென, அங்ராபிட்டிய, லக்ஸ்பான நோட்டன் பிரீஜ் ஊடாக மஸ்கெலியா ஆகிய பகுதிகளுக்கான போக்குவரத்து சுமார் நான்கு மணித்தியாலங்கள் பாதிக்கப்பட்டன.

இந்நிலையில் பொலிஸார் பாரவூர்தியை அப்புறப்படுத்திய பிறகு போக்குவரத்து வழமைக்குத் திரும்பியது. (இ-7)

## 5 மணித்தியாலங்கள் சபையில் இருக்க வேண்டும்

# பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுக்கு தயாசிறி நிபந்தனை

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்கள் சபைக்கு வந்து அமர்வதற்காக வழங்கப்படுகின்ற கொடுப்பனவை நிபந்தனைக்குட்படுத்த வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றம் பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தலைமையில் நேற்றுக் கூடியது. பிரதான நடவடிக்கைகள் இடம்பெற்ற பின்னர் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை கருத்து முன்வைத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் சபை அமர்வில் கலந்துகொள்வதற்காக ஒருநாளைக்கு 2,500 ரூபா வழங்கப்படுகின்றது. இந்தக் கொடுப்பனவு வழங்கப்படுவதை நிபந்தனையுடன் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என பிரேரணை ஒன்றை முன்வைக்கின்றேன்.

அத்துடன் இந்தக் கொடுப்பனவை பாராளுமன்ற உறுப்பினர்கள் பெற்றுக்கொள்ள வேண்டுமாக இருந்தால் சுமார் 5 மணித்தியாலங்களாவது சபையில் இருக்கவேண்டும் என்ற தீர்மானம் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (இ-7)

# பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் அதிகாரங்கள் நீக்கம் அமைச்சர் ரவி விளக்கம்

(கொழும்பு)

பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவுக்கும் இலங்கை மின்சார சபைக்குமிடையில் இடம்பெறும் பனிப்போரால் மின்சார சபை பெரும் நட்டத்தை எதிர்கொள்ள நேர்ந்துள்ளதாகவும் இதன் காரணமாகவே மின்சாரத்தைக் கொள்வனவு செய்ய அனுமதி வழங்கும் அதிகாரத்தையும் அத்துடன் மின்சார கட்டணத்தை தீர்மானிக்கும் அதிகாரத்தையும் அந்த ஆணைக் குழுவில் இருந்து நீக்கி அமைச்சுக்கு பெற்றுக்கொள்ள தீர்மானித்ததாக அமைச்சர் ரவி கருணாநாயக்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க 27இன் கீழ் 2இல் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், பொது பயன்பாட்டு ஆணைக்குழு தேவையில்லாத விதத்தில் மின்சார சபையின் செயற்பாடுகளில் தலையிட்டு வருகிறது.

இதனால் ஆணைக்குழுவுக்கும் மின்சார சபைக்கும் இடையில் நிலவும் பனிப்போரை நிவர்த்தி செய்வதற்கே நாம் முயற்சிக்கின்றோம்.

அதேவேளை ஒரு அலகு மின்சாரத்தை 17 அல்லது 18 ரூபாவுக்குக் கொள்வனவு செய்ய எதிர்பார்க்கும்போது உற்பத்திச் செலவு 72ரூபாவாக உள்ளது. இதனை ஓரளவாவது சரி செய்வது அவசியம் என்ற நோக்கிலேயே நாம் மேற்படி தீர்மானத்தை எடுத்துள்ளோம்.

சபையில் இது தொடர்பில் சில நிமிடங்கள் சர்ச்சை நிலவியதுடன் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சியினர் பலரும் தமது கருத்துக்களை முன்வைத்தனர். எதிர்க்கட்சியானது பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவுக்கு உள்ள அதிகாரத்தை அமைச்சரோ அல்லது அமைச்சரவைக்குப் பெற்றுக் கொள்ளும்போது மின்சாரத்துறையில் மேலும் மோசடிகள் இடம்பெற அது வழிவகுக்கும் என்றும் தொடர்ந்தும் தற்போதுள்ள அதிகாரம் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிற்கு இருக்க வேண்டியது அவசியம் என்றும் தெரிவித்தனர்.

அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. தமது கேள்வியின் போது மின்சாரசபை மின்சாரத்தைக் கொள்வனவு செய்யும்போது அதற்கான அனுமதியைப் பெற்றுக் கொடுக்கும் அதிகாரம் பொதுமக்கள் பயன்பாட்டு ஆணைக்குழுவுக்கு உள்ளதாகவும் அதேவேளை மின் கட்டணத்தைத் தீர்மானிக்கும் அதிகாரமும் அந்த ஆணைக்குழுவுக்கு உள்ளதாகவும் அந்த அதிகாரத்தை குறித்த ஆணைக்குழுவிடம் இருந்து நீக்கி அதனை அமைச்சர் தக்கவைத்துக் கொள்வதற்கு முயற்சிக்கிறார் என்றும் இதனால் பெரும் நெருக்கடி நிலையை எதிர்காலத்தில் எதிர்நோக்க நேரிடும் என்றும் எச்சரித்தார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1762

### சபேசன்

சிலர் ஆயிரக்கணக்கில காசு கொடுத்து ஹெயார் ஸ்டைல் வைக்கிறாங்க...ஆனா எனக்கு தூங்கி காலைல எழுந்திருக்கும் போது தினமும் ஒரு புது ஸ்டைல் வருது. நான்தான் அதை வெளியில காட்டிக்கிறதில்லை



### வனிதா

எல்லா நேரத்திலும் நமக்கு பிடிச்சவங்க ஒரே மாதிரி இருக்கமாட்டாங்க... நமக்குத்தான் எவ்வளவு பட்டாலும் புரியிறது இல்லை



### சுமதி

அடைகாத்த அன்னையை ஒருபோதும் அடைத்து விடாதீர்கள் அநாதை இல்லங்களில்



### வர்ஷா

மணவாழ்க்கை வெற்றிபெற இருவர் வேண்டும் தோல்வியுற இருவரில் ஒருவர் போதும்..



### சாவித்திரி

பதில் சொல்ல முடியாத கேள்வி கேட்டா அது பொண்டாட்டி... பதிலே இல்லாத கேள்வி கேட்டா அது குழந்தை



### கண்மணி

துரோகங்கள் நமக்கு கற்றுக்கொடுப்பவை ஒன்றுதான் சற்றே சுயநலமாய் இருந்திருக்கலாம் என்று



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

மன்னாரில் நல்லிணக்க செயற்பாடுகளினூடாக

# இந்து மக்களுக்கு எந்த நன்மையும் ஏற்படவில்லை

## திருக்கேதீஸ்வர நுழைவாயில் மீண்டும் அமைக்கப்படும் வரை மத நல்லிணக்க நிகழ்வுகளை புறக்கணிக்கிறோம்

### மன்னார் மாவட்ட இந்துக்குருமார் பேரவை அறிவிப்பு

(மன்னார்)

நல்லிணக்க செயற்பாடுகளினூடாக இந்து மக்களுக்கு மன்னாரில் எந்தவிதமான நன்மையும் ஏற்படவில்லை என்பது ஒரு வெளிப்படையான உண்மை என தெரிவித்த மன்னார் மாவட்ட இந்து குருமார் பேரவையின் தலைவர் சிவசிறி மஹா தர்மகுமார குருக்கள்,

ஒரு பிரச்சினையைப் பேசித் தீர்ப்பதன் மூலம் இலகுவாகத் தீர்த்துக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது. இந்து சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மன்னாரிலே பல காலமாக விட்டுக் கொடுப்புக்களுடனும் பல்வேறு அர்ப்பணிப்புடனும் வாழ்ந்து வருகின்றோம் எனவும் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட இந்துக் குருமார் பேரவையின் ஊடக சந்திப்பு நேற்று வெள்ளிக் கிழமை காலை மன்னாரில் உள்ள மன்னார் மாவட்ட இந்துக் குருமார் பேரவையில் இடம் பெற்றது. இதன்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தினுடைய தோரண நுழைவாயில் அமைக்க மன்னார் பிரதேச சபையினால் அனுமதி வழங்கப்பட்ட பின் மீண்டும் அனுமதி தற்காலிகமாக இரத்துச் செய்யப்பட்டமை தொடர்பாக நாம் சில கருத்துக்களை முன்வைக்கின்றோம்.

திருக்கேதீஸ்வர ஆலயத்தினுடைய அனுமதியானது பல்வேறு கால கட்ட இழுத்தடிப்புக்களுக்கு மத்தியில் எமக்கு "தோரண நுழைவாயில்" அமைக்க மன்னார் பிரதேச சபையினால் உத்தியோகபூர்வமான அனுமதிக் கடிதம் வழங்கப்பட்டது.

கடிதம் வழங்கப்பட்டு ஒரு சில நாட்களில் குறித்த அனுமதி மீண்டும் இரத்துச் செய்யப்படுவதாக மன்னார் பிரதேச சபையினுடைய தலைவரின் ஒப்பத்துடன் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

குறித்த செயற்பாடு இந்து மக்கள் மத்தியில் ஏமாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. குறித்த அனுமதியை உடன் இரத்துச் செய்யக்கோரி பிரதேச சபையின் தவிசாளருக்கு பல்வேறு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளதாக நாங்கள் அறிகின்றோம்.

நாங்கள் சமாதானப் பேச்சுக்களுக்காக பல தடவைகள் பலருடைய முயற்சிகளுக்கு அப்பால் நாங்கள் ஒரு இணக்கப்பாட்டிற்கு ஒரு விடயத்தை பேசித் தீர்த்துக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையோடு நல்லெண்ண சமிக்ஞையைக் காட்டியிருந்தோம்.

அவர்களுடைய நேரங்களுக்கு அமைய எங்களைத் தயார் செய்திருந்தபோதும் கடைசி நேரத்தில் கைகூடாமல் போனது துரதிர்ஷ்டவசமானது.

சமாதானம், சமாதானம் என்று நீண்ட நாட்களாக நாங்கள் மன்னார் மண்ணில் இருந்து கொண்டு பல்வேறுபட்ட தரப்புக்கள் ஊடாகப் பேசிக் கொண்டிருக்கின்றோம்.



ஆனால் நல்லிணக்க செயற்பாடுகளினூடாக இந்து மக்களுக்கு மன்னாரிலே எந்தவிதமான நல்லிணக்கமும் ஏற்படவில்லை என்பது ஒரு வெளிப்படையான உண்மை.

திருக்கேதீஸ்வர ஆலயத்தினுடைய தோரண நுழைவாயில் உடைப்பு சம்பந்தமாக ஒரு இணக்கப்பாட்டின் அடிப்படையில் மன்னார் மாவட்ட இந்துக் குருமார் பேரவை சர்வமத பேரவையில் இருந்தும் சர்வமத செயற்பாடுகளில் இருந்தும் வெளியேறுவதாக அறிவித்திருந்தோம்.

ஆனால் நாட்டிலே ஏற்பட்ட திடீர் அனர்த்த செயற்பாட்டின் காரணமாக சில சமூகங்களுக்காக குரல் கொடுக்க வேண்டிய நிலையிலே நாங்கள் சில சந்தர்ப்பங்களிலே இணைந்திருந்தோம்.

ஆனால் எங்களுடைய பிரச்சினைகளுக்கு யாரும் முன் வருவதற்குத் தயார் இல்லை. ஏன் சர்வமதப் பேரவை கூட இந்த விடயத்தில் அக்கறையின்றி செயற்படுகின்றமையினை நாங்கள் உணர்கின்றோம்.

மன்னார் மாவட்டத்திலே தொடர்ச்சியாக இந்துக்கள் நசுக்கப்பட்டு வருகின்றனர். இந்துக்கள் அடக்கப்படுகின்றமைக்கு கத்தோலிக்கத்தில் இருக்கின்ற அனைவரையும் நாங்கள் குறை கூறவில்லை.

நிறைய கத்தோலிக்க அன்பர்கள் இந்த திருக்கேதீஸ்வர ஆலயத்தினுடைய தோரண நுழைவாயிலை மீண்டும் அமைக்க வேண்டும் என்ற ஆதரவையும் கருத்துக்களையும் எமக்குக் கூறி வருகின்றனர்.

ஆனால் ஒரு சில அன்பர்களும் ஒரு சமூகம் சார்ந்த மத வாதத்தைத் தூண்டக் கூடிய வர்களும் இணைந்து இப்படியான செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற போது ஆயர் இல்லம் கூட இந்த விடயத்தில் எமக்கு ஒரு முழுமையான நல்லிணக்க சமிக்ஞையை இதுவரை காட்டவில்லை.

நாங்கள் அவர்களுடன் பேச பல முறை தயார் என அறிவித்த போதும் இவ்விடயம் தொடர்பில் அவர்கள் சமரசம், இணக்கப்பாட்டிற்கு வரவில்லை.

ஒரு பிரச்சினையைப் பேசி தீர்ப்பதன் மூலம் இலகுவாக தீர்த்துக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது.

இந்து சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மன்னாரிலே பல காலமாக விட்டுக் கொடுப்புக்களுடனும் பல்வேறு அர்ப்பணிப்புடனும் வாழ்ந்து வருகின்றனர்.

நாங்கள் அமைதியாக இருக்கின்றோம் என்பதற்காக ஒட்டு மொத்தம் பயந்தவர்களாக இல்லை. எங்களுடைய வாழ்வில் நினைக்கின்றோம் "தர்மத்தின் வாழ்வுதனை சூது கௌவும் தர்மம் மறுபடியும் வெல்லும்" என்கின்ற அசைக்க முடியாத ஒரு நம்பிக்கை எமக்கு இருக்கின்றது.

எனவே திருக்கேதீஸ்வர ஆலயத்தினுடைய தோரண நுழைவாயில் மீண்டும் அமைக்கப்படும் வரை மதம் சார்ந்த கத்தோலிக்க அமைப்புக்கள் சார்பாக அவர்களினால் ஏற்பாடு செய்யப்படுகின்ற சகல நிகழ்வுகளையும் நாங்கள் இன்று முதல் புறக்கணிப்பதாக தீர்மானித்திருக்கின்றோம்.


சமாதானம், சக வாழ்வைப் பற்றி கதைக்கின்றார்கள். ஆனால் திருக்கேதீஸ்வர ஆலயத்தினுடைய தோரண நுழைவாயில் தொடர்பாக கதைப்பதில்லை. ஆக்கபூர்வமான முடிவுகளையும் எடுப்பதில்லை.

சர்வமதப் பேரவையில் இருந்து வெளியேறி நீண்ட மாதங்களாகின்றன. ஆனால் இதுவரை எந்தவித சர்வமதப் பேரவையைச் சேர்ந்தவர்களும் உத்தியோகபூர்வமாக இந்துக் குருமார்களைச் சந்தித்து சர்வ மதப் பேரவையில் மீண்டும் இணைந்து கொள்ள வேண்டும் என்று எவ்வித கோரிக்கைகளையும் அவர்கள் முன்வைக்கவில்லை.

இந்தக் காரணத்தினால் நாங்கள் அரச, அரச சார்பற்ற மதம் சாராத நிறுவனங்கள் தவிர்ந்த மன்னார் மாவட்டத்தில் இருக்கின்ற சகல சர்வமதம் சார்ந்த சகல மத நல்லிணக்கம் சார்ந்த நிகழ்வுகளில் கலந்து கொள்ளாமல் புறக்கணிக்கவுள்ளோம்.

திருக்கேதீஸ்வர ஆலயத்தினுடைய தோரண நுழைவாயில் அமைக்க மீண்டும் அனுமதி மறுக்கப்பட்ட சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இதற்கு ஓர் தீர்க்கமான முடிவு எட்டப்பட வேண்டும். நாங்கள் விட்டுக்கொடுப்போடும் ஒரு சகிப்புத் தன்மையோடும் உண்மையாக மனதில் இருந்து வார்த்தைகள் வர வேண்டுமே தவிர பொய்யாகவும் வெளி உலகிற்கு காட்டுவதற்காகவே நாங்கள் வெறுமனமே நல்லிணக்கத்தோடு இருக்கின்றோம் என்பதனை நாங்கள் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (9-285)



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்திடம் முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டிசுட்டான் பகுதியைச் சேர்ந்த வித்தியாபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் விடுத்த வேண்டுகோளுக்கமைய அப்பகுதியைச் சேர்ந்த 10 குடும்பங்களின் நீர்த்தேவையைப் பூர்த்தி செய்வதற்காக குறித்த சங்கத்தின் உயர்த்தும் கரங்கள் செயற்றிட்டத்தின் கீழ், 225,000 ரூபா செலவில் முறையான குடிநீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

(படம்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

# புதுக்குடியிருப்பு பிரதேசத்திலுள்ள 475 குடும்பங்களுக்கு சமுர்த்தி வழங்கும் நிகழ்வு

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த எட்டாம் திகதி ஜனாதிபதியின் நாட்டுக்காக ஒன்றிணைவோம் வேலைத்திட்டத்தின் ஊடாக முல்லைத்தீவு மாவட்டத்தில் 13 ஆயிரத்து 643 குடும்பங்களுக்கான சமுர்த்தி நிவாரணம் வழங்கிவைக்கப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஆறு பிரதேச செயலகங்களிலும் சமுர்த்திப் பத்திரம் வழங்கும் நிகழ்வுகள் மாவட்ட சமுர்த்தி திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு உட்பட்ட 475 குடும்பங்களுக்கான சமுர்த்திப் பத்திரம் வழங்கும் நிகழ்வு புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன், முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீனின் பிரதிநிதியாக மாந்தை கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தயாநந்தன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசாவின் இணைப்பாளர் அகிலன், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச சபை உப தவிசாளர் க.ஜெனமேஜயந், பிரதேச சபை உறுப்பினர்கள், அரச உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (9-281)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 80 | 60 | 70 | 100 |
| உருளைக்கிழங்கு | 140 | 160 | 110 | 125 | 140 |
| பச்சைமிளகாய் | 360 | 340 | 400 | 350 | 400 |
| தக்காளி | 80 | 100 | 60 | 60 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 170 | 160 | 140 | 100 | 100 |
| கோவா | 100 | 80 | 70 | 180 | 80 |
| கரட் | 140 | 160 | 120 | 180 | 200 |
| பூசணி | 120 | 140 | 100 | 110 | 120 |
| புடோல் | 80 | 70 | 80 | 80 | 100 |
| வாழைக்காய் | 80 | 100 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 180 | 180 | 160 | 160 | 200 |
| பெரிய வெங்காயம் | 120 | 120 | 110 | 95 | 120 |
| பாகற்காய் | 100 | 200 | 120 | 180 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 50 | 80 | 70 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 60 | 60 | 80 |
| பயற்றங்காய் | 140 | 200 | 60 | 130 | 120 |
| லீக்ஸ் | 150 | 90 | 120 | 70 | 100 |
| பீற்றூட் | 100 | 70 | 70 | 50 | 80 |
| கறிமிளகாய் | 200 | 180 | 110 | 120 | 240 |
| முருங்கைக்காய் | 250 | 250 | 140 | 150 | 240 |
| போஞ்சி | 200 | 160 | 120 | 110 | 140 |
| கத்தரிப் புள்ளா | 80 | 60 | 60 | 60 | 100 |
| கீரை-1பிடி | 50 | 30 | 40 | 20 | 30 |
| தேசிக்காய் | 250 | 300 | 200 | 250 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30 | 35 | 30 | 20-40 |
| இராசவள்ளி | 200 | 200 | 150 | 110 | 140 |
| வாழைப்பூ | 200 | 200 | — | 150 | 240 |
| முள்ளங்கி | 80 | 80 | 60 | 40 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 30 | 20 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 100 | — | 100 | 80 |




# கரும்பாயிரத்தின் கவலை



கரும்பாயிரத்துக்கு ஜோசியத்தில் தீவிர நம்பிக்கை உண்டு. அதனால் தன் ஜாதகத்தை ஜோசியம் தெரிந்தவர்களிடம் தவறாமல் காட்டுவான். தன்னுடைய எதிர்காலத்தைப் பற்றி அவர்கள் சொல்வதை கவனமாகக் கேட்டு குறித்துக் கொள்வான். அவர்கள் சொல்லியபடி தான் நடக்கும் என்ற அசைக்க முடியாத எண்ணம் அவன் மனதில் வந்துவிட்டது. பிரபல ஜோசியர் ஒருவர் அவன் ஊருக்கு ஒரு முறை வந்திருந்தார். அந்தச் செய்தியை கேள்விப்பட்டவுடன் தன் ஜாதகத்தை எடுத்துக் கொண்டு அவரிடம் ஓடினான் கரும்பாயிரம். அவனிடமிருந்து இருநூறு ரூபாய் வாங்கிக் கொண்டு அவன் எதிர்காலத்தை பற்றிய சில முக்கியமான தகவல்களைக் கூறினார் அந்த ஜோசியர்.

எதிர்கால பலன்களை ஜோசியர் சொல்ல கேட்ட கரும்பாயிரம் இடிந்து போய் உட்கார்ந்து விட்டான். அடுத்த இரண்டு வருடங்களுக்கு அவனுக்கு பயங்கரமான கஷ்ட காலம் தான். அதற்குப் பரிகாரம் ஏதாவது உண்டா என்று அவரிடம் கந்தசாமி கேட்ட போது, "நீ கஷ்டப்பட்டுத் தான் ஆக வேண்டும். வேறு வழியில்லை" என்று கைவிரித்து விட்டார் ஜோசியர். அதற்குப் பின் எதுவும் செய்யத் தோன்றாமல் சோர்ந்து போனான். வாடிப் போன முகத்துடன் நீண்ட நேரம் சென்று வந்த கரும்பாயிரத்தை, அவன் மனைவி கண்ணம்மா சிரித்த முகத்துடன் வரவேற்றாள். "கண்ணம்மா! இனிமேல் நமக்கு கஷ்டகாலம் தான். உன் முகத்தில் இந்த சிரிப்பு இனிமேல் இருக்குமா? என்பது சந்தேகம் தான்!" என்று விரக்தியுடன் சொல்லிவிட்டு, வீட்டின் ஒரு மூலையில் போய் உட்கார்ந்து கொண்டான்.

"என்னாங்க! அந்த ஜோசியர் ஏதாவது சொல்லிவிட்டாரா? உங்களைப் பிடிச்சிருக்கும் இந்த ஜோசிய பைத்தியம் என்றைக்குத் தான் போகுமோ? அப்படியே கப்பல் கவிழ்ந்த மாதிரி கன்னத்தில் கை வைச்சுட்டு உட்காராதீங்க. நாளைக்கு வேலைக்கு போகணும். படுத்து உறங்கினா கவலையெல்லாம் தன்னால பறந்து போய்விடும்" என்று கணவனுக்கு ஆறுதல் சொன்னாள்.

"கண்ணம்மா! ஒருத்தனுடைய ஜாதகப்படி தான் எல்லாம் நடக்கும். அதில ஒருத்தன் கஷ்டப் படணும்னு எழுதியிருந்தா அவன் கஷ்டப்பட்டுதான் ஆக வேண்டும். தலைவிதியை யாராலும் மாற்ற முடியாது" என்று ஆணித்தரமாக கூறினான் கரும்பாயிரம்.

கணவனின் மனதை என்ன சொன்னாலும் மாற்ற முடியாது என்று கண்ணம்மாவுக்கு தெரியும். "சரி அதுக்கு என்ன இப்போ? கஷ்டம் வந்தா கஷ்டப்பட்டுட்டு போறோம். அதுக்காக இப்பவே கண்ணீர் சிந்தணுமா? அடுத்தாப்புல செய்ய வேண்டிய வேலையை பாருங்கோ" என்று விடயத்தை அதோடு முடித்து வைத்தாள். இருந்தாலும் கண்ணம்மாவின் மனதில் கவலை வந்துவிட்டது. பொழுது விடிந்தது. கந்தசாமிக்கு ஜோசியர் சொன்னதே மனதில் ஒலித்துக் கொண்டிருந்தது. "எப்படி கஷ்டப்பட போகிறோமோ தெரியலையோ!" என்று நினைத்தபடி சோர்வுடன் படுக்கையை விட்டு எழுந்தான்.

"என்னாங்க! அந்த ஜோசியர் எங்க இருக்காரு? அவருடைய விலாசத்தை சொல்லுங்க. என்னோட ஜாதகத்தை அவரிடம் சென்று காட்டி, பலன் கேட்டு வருகிறேன்" என்று கேட்டாள் கண்ணம்மா. "வேண்டாம் கண்ணம்மா! எனக்கு கஷ்டம்னா உனக்கு மட்டும் நல்லது நடக்குமா? ஜோசியருக்கு வேறு செலவு செய்ய வேண்டாம்" என்று அலுத்துக் கொண்டான் கரும்பாயிரம்.

"சரி வேண்டாம் விடுங்க. எனக்குத் தெரிந்த இன்னொரு ஜோசியரிடம் காசு இல்லாமல் நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்க குளித்து, சாப்பிட்டு விட்டு வேலைக்கு கிளம்புங்க" என்று வேலையை கவனிக்கச் சென்றாள் கண்ணம்மா. வேலை முடித்து மாலை ஆறு மணிக்கு வந்தான் கரும்பாயிரம். அவன் களைப்புத் தீர, சூடாக டீ கொடுத்தாள் கண்ணம்மா. கரும்பாயிரம் முகத்தில் வருத்தம் நிறைந்து இருந்தது.

"நான் இன்றைக்கு அந்த ஜோசியரிடம் போயிட்டு வந்துட்டேன். என் ஜாதகத்திலே என்ன இருக்குத்தெரியுமா? நான் இன்னும் இரண்டு வருடத்தில் புது வீடு கட்டி, அதில் குடியேற வேண்டுமாம்" என்றாள் கண்ணம்மா. "உளறாதே கண்ணம்மா! ஏற்கனவே எனக்கு கஷ்டகாலம் ஆரம்பித்துவிட்டது. கையில் வீடு கட்டும் அளவுக்கு பணம் இல்லை. வசதி படைச்சவங்க மட்டும்தான் வீடு கட்ட முடியும். அதெல்லாம் நமக்கு கனவுதான்" என்று அக்கறை இல்லாமல் சொன்னான் கந்தசாமி.

"இதை பாருங்க! எல்லாம் விதிப்படி நடந்துதான் தீரும். நமக்கு சொந்தமாக அரை கிரவுண்டு நிலம் இருக்கு இல்லையா? நல்ல நாளாகப் பார்த்து வீடு கட்டுற வேலையை ஆரம்பிக்க வேண்டும். இல்லேன்னா எனக்கு கெட்ட கோபம் வரும்" என்று அழ ஆரம்பித்தாள் கண்ணம்மா.

"ஜோசியர் சொன்னது சரியாகத்தான் இருக்கு. நீ பிடிவாதக்காரி ஆச்சே! நீ நினைத்ததை செய்து முடிக்கலைன்னா என்னை நிம்மதியா இருக்க விடமாட்டாயே! எனக்கு கஷ்டகாலம் ஆரம்பித்து விட்டது. வீடு கட்டுறதுன்னா லேசான விடயமா? சரி பார்க்கலாம்" என்று மனைவியை சமாதானப்படுத்தினான்.

கண்ணம்மா அதோடு விட்டு விடவில்லை. கரும்பாயிரத்தை சும்மா இருக்க விடாமல் அடுத்தடுத்து செய்ய வேண்டியதை செய்ய வைத்தாள். வீடு கட்டும் வேலை ஆரம்பமாகியது. கரும்பாயிரம் வேலை செய்யும் இடத்திலும் வங்கியிலும் கடன் வாங்கி கட்டட வேலைகளை பாதியில் நின்று விடாமல் பார்த்து கொண்டான். அதனால், அவனுக்கு ஏகப்பட்ட அலைச்சல், கவலை எல்லாம் ஏற்பட்டன. எப்படியாவது வீடு கட்டி முடித்துவிட வேண்டும் என்று இரவு-பகல் பாராமல் கடுமையாக உழைத்தான் கரும்பாயிரம்.

சரியாக இரண்டு வருடம் சென்றது. கரும்பாயிரம் புதிய வீட்டை கட்டி முடித்திருந்தான். அந்த வீட்டின் ஒரு பகுதியை வாடகைக்கு விட்டான். இன்னொரு பகுதியை வாடகைக்கு விட்டான். இன்னொரு பகுதியில் தன் குடும்பத்துடன் குடியேறினான். பிறகு ஒரு வழியாக நிம்மதி பெருமூச்சுவிட்டான்.

"கண்ணம்மா! ஜோசியர் சொன்னது எவ்வளவு சரியாக இருந்தது பார்த்தியா? இந்த ரெண்டு வருடமும் சாப்பாடு, தூக்கம் இல்லாமல் எப்படியோ கஷ்டப்பட்டு இந்த வீடு கட்டிவிட்டேன். இனிமேல் கவலைப்பட வேண்டாம்" என்று சொன்ன கணவனைப் பார்த்து சிரித்தாள் கண்ணம்மா.

"ஜோசியர் சொன்னது ஒன்றும் பலிக்கவில்லை. எல்லாம் நான் போட்ட திட்டம்தான்! நான் என் ஜாதகத்தை எந்த ஜோசியரிடமும் எடுத்துச் செல்லவில்லை. என் ஜாதகப்படி இரண்டு வருடத்தில் வீடு கட்ட வேண்டும் என்று உங்களிடம் பொய் சொன்னேன். உங்கள் கவனத்தை நல்ல வழியில் திருப்ப விரும்பினேன். ஜோசியர் சொன்னதையே நினைத்துக் கொண்டு நீங்கள் சோர்வடையக் கூடாது என்பதற்காக அப்படி பொய் சொன்னேன். இப்போது சொல்லுங்கள், நீங்கள் உண்மையிலேயே கஷ்டத்தை அனுபவித்தீர்களா?" என்று கேட்டாள் கண்ணம்மா.

"ஆமாம்! வீடு கட்டுவதற்கு எவ்வளவு கஷ்டப்பட்டேன் தெரியுமா?" என்று விட்டுக் கொடுக்காமல் சொன்னான் கரும்பாயிரம். "நிச்சயமாக இல்லை. எப்போ வீடு கட்டினாலும் நீங்கள் இதே அளவு சிரமப்பட வேண்டும்தானே? மற்றப்படி உங்களுக்கு வேறெந்த கஷ்டமும் இல்லையே? நீங்கள் பட்ட கஷ்டம் இன்று வீடு ஆகிவிட்டது. எந்த நஷ்டமும் வரவில்லையே! உண்மையில் கஷ்டம் என்றால், நாம் இருந்த நிலையை விட மோசமாகப் போயிருக்க வேண்டும். இன்று நாம் முன்னை விட நன்றாக, வசதியாக இருக்கிறோம். சரிதானே!" என்று கணவனுக்கு விபரமாக விளக்கினாள் கண்ணம்மா.

அப்போதுதான் கரும்பாயிரத்துக்கு மனைவியின் புத்திசாலித்தனம் புரிந்தது. "விதியை மதியால் வென்று விடலாம்" என்பதை நிரூபித்துவிட்டாள் என் மனைவி. நான் ஜோசியர் சொன்னதையே நினைத்துக் கொண்டிருந்தால் மனதாலும் உடலாலும் உற்சாகம் இழந்திருப்பேன். நிச்சயம் கஷ்டப்பட்டிருப்பேன். உடலால் உழைப்பிற்கு பலன் நிச்சயம் உண்டு. எனக்கு இப்போது ஒரு சொந்த வீடு கிடைத்துவிட்டது. நன்றி கண்ணம்மா" என்று பெருமிதம் கொண்டான் கரும்பாயிரம்.

## பொது அறிவுத்துணுக்குகள்

- அட்லான்டிக் பகுதியில் ஆண்டிற்கு ஒரு முறைதான் சூரியன் உதயமாகிறது.
- மகாத்மா காந்தி இந்தியாவில் மட்டுமல்ல தென்னாபிரிக்காவிலும் சிறைத் தண்டனை அனுபவித்துள்ளார்.
- முதன் முதலில் கேள்விக் குறியைப் பயன்படுத்திய மொழி இலத்தீன் மொழிதான்.
- கைரேகையை வைத்து குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் முறையைக் கண்டறிந்தவர் எட்வர்ட் ஹென்றி.
- மீன் தன் வாழ்நாள் இறுதி வரை வளர்ச்சி அடைந்து கொண்டே இருக்கும்.

## விடுகதைகளும் விடைகளும்

- போதையின்றி தள்ளாடினாலும் புறப்படும் ஊர் போய் சேருவான். அது என்ன?

  **கப்பல்**

- ஒரே நேரத்தில் மூடித் திறக்கும் கதவுகள், ஓராயிரம் முறை இயங்கினாலும் ஓசை வராத கதவுகள். அது என்ன?

  **இமைகள்**

- ஆயிரம்பேர் திரண்டாலும், அணு அளவு கூட தூசி கிளம்பாது. அது என்ன?

  **எறும்புக்கூட்டம்**

- குளிருக்கு கல்லாவான், அனலுக்கு தண்ணீராவான். அது என்ன?

  **பனிக்கட்டி**

- கிட்ட இருக்கும் பட்டணம் எட்டி பார்க்க முடியாது. அது என்ன?

  **நமது முதுகு**

வாய்ப்புக்காக காத்திருக்காதே உனக்கான வாய்ப்பை நீயே ஏற்படுத்திக்கொள்

~ டாக்டர் அப்துல்கலாம்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# தமிழர்கள் கனவான்கள் என்பதை விற்றுவிடாதீர்கள்

தமிழ் மக்களுக்கு எதிரான சிங்கள இனத்தின் பகை என்பது தமிழர்களின் கல்வி அறிவியல் எழுச்சியாலும் நேர்மையான நிர்வாகத் திறனாலும் ஏற்பட்டதாகும்.

அதாவது ஒரு காலத்தில் இலங்கையின் அரசாட்சி நிர்வாகத்திலும் உயர் பதவிகளிலும் தமிழர்களே கோலோச்சினர்.

இதுதவிர, வடபுலத்துத் தமிழ் மாணவர்கள் கல்வியில் உச்சமடைந்திருந்தனர்.

இலங்கையின் மூளை என்று போற்றுமளவுக்கு யாழ்ப்பாணம் மிளிர்ந்திருந்தது.

இதன்காரணமாக சிங்கள ஆட்சியாளர்களும் சிங்கள அரசியல்வாதிகளும் இயல்பாகத் தமிழர்கள் மீது பொறாமை கொண்டனர்.

பெரும்பான்மை இனமாகத் தாங்கள் இருந்த போதிலும் சிறுபான்மைத் தமிழ் மக்களே அரச நிர்வாகங்களில் கோலோச்சுகின்றனர் என்பதும் திறமை அடிப்படையில் தமிழ் மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுக் கொள்கின்றனர் என்பதாலும் பகை கொண்ட சிங்களத் தரப்பு, கல்வியில் தரப்படுத்தல் மற்றும் வேலைவாய்ப்புகளில் தமிழ் மக்களை ஓரங்கட்டுதல் என தமிழ் இனத்துக்கு எதிரான சதிவேலைகளை முன்னெடுத்தது.

இதுதவிர, காலத்துக்குக் காலம் இனக்கலவரங்களை ஏற்படுத்தி தமிழ் மக்களைக் கொன்றொழிப்பதும் தமிழர்களின் பொருளாதாரத்தைச் சூறையாடுவதும் வழமையாயிற்று.

எனினும் தந்தை செல்வநாயகம், தளபதி அமிர்தலிங்கம் போன்றவர்களின் அறிவாற்றலுக்கும் நேர்மைக்கும் அவர்களின் தமிழ் இனப் பற்றுக்கும் முன்னால், சிங்களப் பேரினவாதம் மண்டியிடவேண்டியதாயிற்று.

ஆம், தந்தை செல்வநாயகம் பாராளுமன்றுக்குள் நுழையும்போது ஆசனத்தில் இருக்கக் கூடிய சிங்களத் தலைவர்கள் எழுந்து நின்று அவருக்கு மதிப்பளித்த வரலாறுகள் தமிழ் இனத்தின் கனவான்தனத்துக்குத் தக்க சான்றாகும்.

எனினும் தமிழ் மக்களுக்கு ஒரு கதையும் அரசாங்கத்துக்கு இன்னொரு கதையும் கூறிக்கொண்டு, அரசியல் பிழைப்பு நடத்துகின்ற இன்றைய தமிழ் அரசியல் தலைமை தொடர்பில் சிங்கள ஆட்சியாளர்களும் சிங்கள அரசியல்வாதிகளும் மதிப்பிடுவர் என்பது ஏற்புடைய உண்மை.

இருந்தும் தமிழ் இனத்தின் கனவான்தனத்துக்கு இன்னமும் இழுக்கு ஏற்படவில்லை என்பதால், அந்தவொரு மதிப்பையேனும் நம் தமிழ் அரசியல்வாதிகள் காப்பாற்ற வேண்டும்.

ஆக, எதிர்க்கட்சித் தலைவராக இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்காகத் தனக்குக் கிடைத்த வாசஸ்தலத்தையும் வாகனங்களையும் உடனடியாக மீள ஒப்படைக்க வேண்டும்.

தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது; தனக்குரிய வாசஸ்தலத்தையும் இரண்டு வாகனங்களையும் இரா.சம்பந்தர் தன்னுடன் வைத்திருக்கிறார் என்று கூறுகிறார் எனில்,

அது தமிழினத்தின் நேர்மைக்கு இழுக்கைத் தரும் என்பதுடன் இரா.சம்பந்தர் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை விரும்பியதே இதற்காகத்தான் என்ற கணிப்பீடு தானாக ஏற்பட்டுவிடும்.

ஆகவே, தமிழினத்தின் உரிமையை விற்றுப் பிழைத்தது போல தமிழினத்தின் கனவான்தனத்தையும் விற்று விடாமல், உரியவற்றை உடனடியாக ஒப்படைப்பதே உத்தம காரியமாகும்.

## ரயில் சேவைக்கு ஓய்வூதியர்களை நியமிக்கத் தீர்மானம்-அர்ஜுன

(கொழும்பு)

ரயில் ஊழியர்களின் பிரச்சினையை இரண்டு வாரங்களில் தீர்ப்பதாக போக்குவரத்து, சிவில் விமான சேவைகள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஊழியர்கள் சேவைக்கு வராவிட்டால் ஓய்வூதியர்களை நியமித்து சேவையைத் தொடர நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்த அவர், அவ்வாறு இல்லாவிட்டால் வெளிநாடுகளில் இருந்து கொண்டு வந்தேனும் ரயில் சேவைகள் இடம்பெற நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துள்ளார்.

மேலும், மக்களுக்கு அசௌகரியம் ஏற்படும் வகையில் ஊழியர்கள் செயற்பட்டால் அவர்களுக்கெதிராக கடும் தீர்மானம் எடுக்க நேரிடும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) ரயில்வே ஊழியர்களின் போராட்டம் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (ம-3)

## புனித இராஜப்பரில் நற்கருணை விழா

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவன் புனித இராஜப்பர் ஆலய வருடாந்த பெருவிழா கடந்த 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பித்து தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அந்த வகையில் இன்று சனிக்கிழமை நற்கருணை விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு புனித பிரான்சிஸ் சவேரியார் பெரியகுருமட அதிபர் T.J.கிருபாகரன் தலைமையில் பெருவிழா திருப்பலியும் இடம்பெறவுள்ளது.(3)

## காட்டுத்துறை பிள்ளையார் தேர்த்திருவிழா இன்று

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை காட்டுத்துறை அருள்மிகு சிறி அம்பலவாணா விக்கினேஸ்வரப் பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா இன்று சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கும் தீர்த்தத் திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கும் நடைபெறவுள்ளன என்று ஆலய அறங்காவலர்கள் அறிவித்துள்ளனர். (ம)

## மன்னார் புதைகுழி ஆய்வுப் பணிக்காக தடயப் பொருட்கள் சேகரிப்பு

(மன்னார்)

மன்னார் சதோசா மனித புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட மனித எச்சங்களின் காலப்பகுதியை அறிவதற்காக கடந்த மார்ச் மாதம் 22 திகதி இடம் பெற்ற கூட்டத்தில் களனி பல்கலைக்கழக பேராசிரியர் ராஜ் சோம தேவிடம் அறிக்கை ஒன்று கோரப்பட்டிருந்த நிலையில் குறித்த அறிக்கையினை தயார் செய்வதற்கான ஆய்வுப் பொருட்கள் மற்றும் மண் போன்றவை தெரிவு செய்யும் நடவடிக்கை நேற்றும் நேற்று முன்தினமும் இடம் பெற்றது.

பேராசிரியர் ராஜ் சோம தேவ் மன்னார் நீதவான் நீதிமன்றில் கொண்டுவந்த நகர்தல் பிரேரணையின் கீழ் ஆய்வுப் பணிகளுக்கு தேவையான தடயப் பொருட்கள் நேற்று முன்தினம் காலை தொடக்கம் மன்னார் நீதவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் தெரிவு செய்யப்பட்டது.

மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த அனைத்து மனித எச்சங்கள் இருந்த 20 பெட்டிகளுக்கு மேல் உடைக்கப்பட்டு அதில் இருந்து மனித எச்ச மாதிரிகளும் அதே நேரத்தில் தடயப் பொருட்களான மோதிரம் சுங்கான் மற்றும் மணல் மாதிரிகள் சேகரிக்கப்பட்டுள்ளது

குறித்த மாதிரிகள் மன்னார் பொலிஸாரால் களனி பல்கலைக்கழகத்தில் ஒப்படைக்கப்படவுள்ளதுடன் ஒரு மாத காலப்பகுதியில் அறிக்கை முடிவுகளுடன் ஏனைய மாதிரிகளுக்கான ஆய்வு முடிவுகளையும் உள்ளடக்கி மன்னார் மனித புதைகுழி தொடர்பான இறுதி தீர்மானம் எடுக்கப்படவுள்ளது. (9-285)

## அரியாலை திருமகளின் கலைப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தின் 67 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தப்படும் முன்னோடி கலைப் போட்டிகள் எதிர்வரும் யூலை மாதம் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு தமிழ் மொழி மூலமான பேச்சுப் போட்டியும் எதிர் வரும் யூலை மாதம் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு ஆங்கில மொழி மூலமான பேச்சுப் போட்டியும் இடம்பெறவுள்ளது.

தமிழ்மொழி மூலமான பொது அறிவுப் பரீட்சை 13 வயதின் கீழ் மற்றும் 13 வயதின் மேல் ஆகிய பிரிவுகளாக எதிர்வரும் யூலை 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளதோடு சகல பிரிவுகளுக்குமான தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலமான கட்டுரைப்போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

புழுகுப்போட்டி எதிர்வரும் யூலைமாதம் 7 ஆம் திகதி பொதுப்பிரிவாக இடம்பெறவுள்ளதோடு அன்றைய தினம் 5 வயதின் கீழ் பாப்பா மலர் போட்டியும் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

போட்டிகள் தொடர்பான மேலதிக தகவல்களை க.நிசாந்தன் (0766829413) மற்றும் கிஷ்யந்தன் (0703241696) என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும்.(3)

## 38 வருடங்களின் பின்னர் உயர்தரப் பரீட்சை எழுதும் ரஞ்சன்

(கொழும்பு)

அடுத்த வருடம் நடைபெறவுள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தோற்றவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

முதலாவதாக 1981ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சை எழுதிய ரஞ்சன், அடுத்த வருடம் மீண்டும் உயர்தர பரீட்சை எழுதவுள்ளார்.

அதற்கமைய 38 வருடங்களின் பின்னர் அவர் உயர்தரப் பரீட்சை எழுதுகின்றார். அவர் தனிப்பட்ட ஆசிரியர் ஒருவரை வீட்டிற்கு அழைத்து வந்து அரசியல் பாடம் கற்பதாக தெரிய வந்துள்ளது.

பொதுவாக மாணவர்கள ஆசிரியர்களை "சேர்" என அழைப்பார்கள் எனினும், இளம் ஆசிரியர் தனது அரசியல் மாணவரை சேர் என அழைத்து கற்பித்து வருகிறார்.

அமைச்சிற்கு காலை நேரத்திலும், பிற்பகலில் நாடாளுமன்றத்திற்கும் செல்லும் ரஞ்சன் இரவில் வகுப்பிற்கு செல்வதாக தெரியவருகிறது. (இ-7)

## தொழில்முனைவோர் திருவிழா

(யாழ்ப்பாணம்)

சி.சி.எச் நிறுவனத்தால் முன்னெடுக்கப்படும் புத்தாக்கமான தொழில் முயற்சியாண்மைக்கு அங்கீகாரம் வழங்கும் தொழில் முனைவோர் திருவிழா இன்று காலை 9.30 மணியளவில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறும்.

இதில் தொழில் முனைவோர் கண்காட்சி, பயிற்சிப் பட்டறை, நூல்வெளியீடு, தொழில்துறை வழிகாட்டல் கூட்டம், தொழில் முனைவோர் நிதி முகாமை வழிகாட்டல் என்பன இடம்பெறும். (5-9)

## பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் நாளும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வேம்படி மகளிர் கலலூரியின் பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் நாளும் இன்று சனிக்கிழமை காலை 9 மணியளவில் பாடசாலை பிரதான மண்டபத்தில் பதில் அதிபர் செல்வி சுமதி கந்தசாமி தலைமையில் நடைபெறும். இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் பிரதேச செயலர் சாம்பசிவம் சுதர்சன் கலந்து கொள்வார். (இ)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- பிறருக்காகச் செய்யும் சிறு முயற்சியிலும் கூட உள்ளத்தில் அளப்பரிய சக்தி உண்டாகி விடும்.
- தற்பெருமையை வளர்த்துக் கொள்ள வேண்டாம். போட்டி, பொறாமை எண்ணம் சிறிதும் இருப்பது கூடாது.
- ஒற்றுமையுடன் சேர்ந்து வாழ்வதே வலிமை. உலகிற்கு நன்மை செய்வதே நமது நோக்கம்.
- அமைதி, ஆர்வம், ஒழுக்கம் இந்த மூன்று அம்சங்களும் பணியில் இருப்பது அவசியம்.
- நம்பிக்கை, நேர்மை, பக்தி இந்த மூன்றும் இருந்து விட்டால் முன்னேற்றம் வந்து கொண்டேயிருக்கும்.

# விஜியரட்ணம் வெற்றிக்கிண்ண இறுதியாட்டம் சென்றலைட்ஸ் - கே.சி.சி.சி அணிகள் மோதல்



விஜியரட்ணம் கிண்ணத்திற்காக ஓமைஸ் பெயின்ட் நிறுவனத்தார் நடத்தும் யாழ்.நகரில் துடுப்பாட்ட வரலாற்றில் முதன் முறையாக புற்தரையில் நடத்தும் இருபதுக்கு இருபது சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் பிற்பகல் ஒரு மணிக்கு சென்றலைட்ஸ்அணியை எதிர்த்து கே.சி.சி.சி. அணி எதிர்கொள்ளும். இத் தொடரில் சென்றரைலட்ஸ் அணி தகுதி காண் போட்டிகளில் கிறாஸ்கொட்டாஸ்அணியை 4 இலக்குகளாலும் AB அணியை 12 ஓட்டங்களாலும் T.C.C. அணியை 4 இலக்கு களாலும் பிளேஓப் (PLAY OFF) நிகழ்வில் தகுதி சுற்று முதலா வதில் சென்றலைட்ஸ் அணி கே.சி.சி.சி. அணியிடம் 34 ஓட்டங்களால் தோல்வியும் தகுதி சுற்று இரண்டாவதில் பற்றீசியன் அணியை 19 ஓட்டங்களாலும் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

கே.சி.சி.சி. அணி, தகுதி காண் போட்டிகளில் பற்றீசியன்ஸ் அணியை 30 ஓட்டங்களாலும் யாழ்.சென்றல் அணியை 8 இலக்குகளாலும் ஜொலிஸ்ரார் அணியை 13 ஓட்டங்களாலும் வெற்றி பெற்று (PLAY OFF) பிளேஓவ் நிகழ்வில் தகுதி சுற்று முதலாவதில் சென்றலைட்ஸ் அணியை 34 ஓட்டங்களாலும் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. திறமைகளுக்கு பணப்பரிசில்கள் பரிசாக வழங்கப்படும். (க)

# பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் கொக்குவில் இந்து அடுத்த சுற்றில்



இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நடத்தும் 17 வயதிற்குட்பட்ட ஆண்களிற்கான கிரிக்கெட் தொடரில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்று 2ஆம் சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

கடந்த புதன்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து சுழிபுரம் விக்டோரியா கல்லூரி அணி மோதியது.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் விக்டோரியா அணி 28.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 113 ஓட்டங்களைப் பெற்றது. அவ்வணி சார்பில் லம்போதரன் 44, சிவானுஜன் 25 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சார்பில் கஜானன் 4, கௌதமன், டினேஸ் ஆகியோர் 2 விக்கெட்டுகளையும் ஜெரூசன், ஜனோஜ் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

114 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 19.3 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 116 ஓட்டங்களைப் பெற்று 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று 2ஆம் சுற்றுக்கு தகுதி பெற்றது. அவ்வணி சார்பில் பிரவீன் 56, துவாரகன் 23, ஜெரூசன் ஆட்டம் இழக்காமல் 13 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் சுழிபுரம் விக்டோரியா கல்லூரி அணி சார்பில் சஞ்சுஜன் 2, பத்மப்பிரிஜன் ஒரு விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்கள். (த-ரூ)

## அரியாலை சரஸ்வதி ச.ச.நிலையத்தின் மாபெரும் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

அரியாலை சரஸ்வதி சன சமூக நிலையத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்படும் வட மாகாண ரீதியிலான மாபெரும் கரப்பந்தாட்ட (ஓவர் கேம்) சுற்றுப்போட்டி.

அணிக்கு நான்கு பேர் கொண்ட இச் சுற்றுப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் அணிகள் கவிந்தன்-077 309 5745 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம் என விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (க)

# டோனிக்குத் தெரிந்த ரகசியம்-கோலி

இந்திய அணிக்கு என்ன தேவை என்பது டோனிக்கு மட்டும்தான் சரியாக தெரியும் என அணித்தலைவர் கோலி தெரிவித்துள்ளார்.

உலகக்கோப்பை தொடரில் நேற்று முன்தினம் நடந்த லீக் ஆட்டத்தில் இந்தியா-மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் மோதின. இதில் இந்திய அணி அபார வெற்றி பெற்றது.

இந்நிலையில் வெற்றி குறித்து விராட் கோலி கூறுகையில், 'அணிக்கு என்ன தேவை என்பது டோனிக்கு தெரியும். அதன்படி தான் நடுவரிசையில் ஆடி வருகிறார். சில நேரங்களில் ஆடாமல் இருக்கலாம்.

இது எல்லோருக்கும் நடக்கக்கூடிய ஒன்று தான். ஆனால், டோனி விளையாடவில்லை என்றால் மட்டும் எல்லோரும் விமர்சிக்க ஆரம்பித்து விடுவார்கள். இந்தப் போட்டியில் அவர் சிறப்பாகவே செயற்பட்டார்.

கடைசி நேரத்தில் எப்படி ஆட வேண்டும்? அணிக்கு என்ன தேவை? என்கிற தத்துவம் அவருக்கு மட்டும் தான் சரியாக தெரியும்.

அவரது அனுபவம் 10ல் 8 முறை மிகச் சரியாகவே அமையும்.



இந்திய அணியில் சிறப்பாக விளையாட பலர் இருக்கிறார்கள். என டோனியைப் புகழ்ந்து தள்ளியுள்ளார் கோலி. (க)

## ஒக்டோபர் அரசியல் சதிப்புரட்சி...

பெற்றது. இதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டுஉரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அரசமைப்பின் 19ஆவது திருத்தம் ஜனநாயகத்துக்கு கிடைத்த பாரிய வெற்றி. அதை நான் செய்து முடித்தேன் என்று பெருமை பாராட்டிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இப்போது அது ஓர் அரசியல் சூழ்ச்சி, தனக்குத் தெரியாமல் செய்துவிட்டார்கள் என்றெல்லாம் கருத்து வெளியிட்டு வருகின்றார். அதிலே என்னுடைய பெயரையும் அவர் தூக்கிக்காட்டியுள்ளார். அதைத் தயாரித்ததில் நானும் ஒருவன் என்று அவர் சொல்லியிருக்கின்றார்.

கடந்த ஒக்டோபர் மாதத்தில் திடீரென்று குத்துக்கரணம் அடித்து தன்னுடைய பழைய உறுப்பினர்களுடன் சேர்ந்து அரசமைப்புக்கு முரணாகச் செயற்பட்டார் ஜனாதிபதி. அதனை நீதிமன்றத்தின் ஊடாக நாம் முறியடித்துவிட்டோம். அதனாலே எங்கள் மீது அவருக்கு இன்னமும் கோபம் இருக்கின்றது. இந்த 19ஆவது திருத்தத்தின் மூலமாகத்தான் ஒக்டோபர் அரசியல் சதிப் புரட்சி முறியடிக்கப்பட்டது அதனால்தான் ஜனாதிபதிக்கு 19ஆவது திருத்தத்தின் மீதும் கோபம். எங்கள் மீதும் கோபம் எனச் சுட்டிக் காட்டினார். (ம-60)

## வாள்கள், ஆயுதங்கள் நேற்...

தலில் துப்பாக்கி ரவைகள், 49 சீனத் தயாரிப்பு வாள்கள், 5 நாட்டு வாள்கள், ஜேலக்நைற் குச்சிகள் மற்றும் டெட்டனேட்டர்கள் என்பன கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

தேசிய தௌபீக் ஜமாத்தின் தலைவர் சஹ்ரானின் சகாவான சவுதியில் கைதுசெய்யப்பட்டமில்ஹான் என்பவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் ஒல்லிக்குளம் பகுதியில் தேடுதல் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

அந்தவகையில், நேற்று முன்தினம் இடம்பெற்ற தேடுதலின் போது 300 ஜெலிக்நைட் குச்சிகள், 1000 டெட்டனேட்டர்கள் கண்டெடுக்கப்பட்டிருந்தன.

கொழும்பில் இருந்து மில்ஹான் மற்றும் சஹ்ரானின் சாரதியான கபூர் எனப்படும் மொஹமட் சரீப் ஆதம்லெப்பை ஆகியோரை, கடும் பாதுகாப்புக்கு மத்தியில் அங்கு அழைத்துச்சென்ற பொலிஸார், அவர்களின் தகவலுக்கமைய குறித்த வெடிபொருட்களை கண்டெடுத்தனர்.

கடந்த மாதம் ஒல்லிக்குளத்தில் சஹ்ரான் பயன்படுத்திய பிரதான முகாம் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் இந்த வெடிபொருட்களும் அப்பகுதியில் கைப்பற்றப்பட்டுள்ளன.

தேசிய தௌபீக் ஜமாத்தின் ஆயுதப் பிரிவுக்கான தலைவராக மில்ஹான் செயற்பட்டுள்ளதுடன்; வவுணதீவு பொலிஸார் இருவரின் கொலையும் இவரின் தலைமையில் நடைபெற்றுள்ளதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை முகாம் பகுதியில் விசேட அதிரடிப் படையினர் மற்றும் சி.ஐ.டி.யினர் தொடர்ந்தும் தேடுதல் நடத்தி வரு கின்றதுடன் அப்பகுதியில் ஊடக வியலாளர்கள் சென்று புகைப்படம் எடுக்க சி.ஐ.டி.யினர் தடைவிதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## போதையை ஒழிக்கமுடியாது...

கட்டுப்படுத்த முடியாது என மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் கடுமையான தண்டனைகளை நிறைவேற்றும் நாடுகளில் கூட குற்றங்கள் குறைந்ததாக இல்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பாராளுமன்றத்தில்நேற்று வெள்ளிக்கிழமை ரயில்வே ஊழியர்களின் போராட்டம் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு மரண தண்டனையை நிறைவேற்ற ஜனாதிபதி இணக்கம் தெரிவித்திருக்கின்றார். மரண தண்டனை வழங்குவதற்கு நாங்கள் ஒருபோதும் இணக்கம் தெரிவிக்க மாட்டோம்.

1976இற்குப் பின்னர் இலங்கையில் மரண தண்டனை நிறைவேற்றப்படவில்லை. இதுபோன்ற தண்டனைகள் ஷரி ஆ சட்டத்தின் பிரகாரம் அரபு நாடுகளில் வழங்கப்படுகின்றன, ஆனால் அந்த நாடுகளில் குற்றங்கள் குறைந்ததாக இல்லை. அதனால் மரண தண்டனையை நிறைவேற்றி ஜனாதிபதியும் ஷரி ஆ சட்டத்தையே அமுல்படுத்த முயற்சிக்கின்றார்.

இவ்வாறான சட்டங்களை நிறைவேற்றும் உலகில் எந்த நாட்டிலும் குற்றங்கள் குறைந்ததில்லை. அதனால் மரண தண்டனை நிறைவேற்றுவதால் எமது நாட்டில் போதைப்பொருள் விற்பனை குறைவடையும் என்று ஒருபோதும் எதிர்பார்க்க முடியாது. (ம-3)

## எந்த நேரத்திலும்...

விசாரணைகளை மேற்கொள்ள சட்டமா அதிபர் திணைக்களம் பதில் பொலிஸ் மா அதிபருக்கு அனுமதி வழங்கியுள்ளது. இந்நிலையில் அவர்கள் இருவரும் எந்நேரமும் கைது செய்யப் படலாமென உயர்மட்ட பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம-3)

## கல்முனைக்காக கதிர்காமத்...

வாரம் உண்ணாவிரதத்தில் கலந்துகொண்டவர்களில்ஒருவரான பாண்டிருப்பு அனைத்து ஆலயங்களின் தலைவர் கி.லிங்கேஸ்வரன் தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை வடக்கு பிரதேச செயலகம் முன்பாக யாத்திரை ஆரம்பிக்கப்பட்டது.

மனிதனால் தீர்த்துவைக்க முடியாத விடயத்தை கடவுள் தீர்த்து வைக்க வேண்டும்' என்ற கருத்தை வலியுறுத்தி இந்த பாதை யாத்திரை முன்னெடுக்கப்படுவதாக யாத்திரிகர்கள் தெரிவித்தனர்.

இதன்போது கிழக்கில் கேள்விக்குறியாகியுள்ள தமிழர்களின் இருப்பை பாதுகாக்க வலியுறுத்தி பாராளுமன்ற உறுப்பினர் ச.வியாழேந்திரன் யாத்திரிகர்களை வழியனுப்பும் நிகழ்வில் கலந்துகொண்டார். (ம-3)

## நாட்டில் மரணதண்டனை...

நேற்று இந்த உறுதியை அளித்துள்ளது.

மரண தண்டனையை அமுல்படுத்துவதை நிறுத்துவதற்காக இடைக்கால தடை உத்தரவு ஒன்றை பிறப்பிக்குமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஊடகவியலாளர் மலிந்த செனவிரத்ன இந்த மனுவை தாக்கல்செய்திருந்தார். மரணதண்டனைக்கு இடைக்கால தடைவழங்கி சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் மற்றும் வெலிக்கடை சிறைச்சாலை அத்தியட்சகருக்கு உத்தரவிடுமாறு மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சட்ட மா அதிபர், சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் மற்றும் வெலிக்கடை சிறைச்சாலை அத்தியட்சகர் ஆகியோர் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

மரண தண்டனை நிறைவேற்றப்பட்டால் அதனூடாக பாரிய மனித உரிமை மீறல் ஏற்படுவதற்கு வாய்ப்பிருப்பதாக மனுதாரர் கூறியுள்ளார்.

இதன்காரணமாக மரண தண்டனையை அமுல்படுத்துவதை நிறுத்துவதற்காக இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மனு தொடர்பாக விளக்கமளிக்கையிலேயே, சிறைச்சாலைகள் ஆணையாளர் ஒரு வாரத்திற்குள் மரணதண்டனை நிறைவேறாது என்ற உறுதிமொழியை வழங்கினார். (ம-3)

## மைத்திரி, மகிந்த சுயநலத்திற்காகவே...

பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

அலரி மாளிகையில் நேற்று வெள்ளிக்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

2015ம் ஆண்டு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு அரசியலமைப்பின் 19வது திருத்தம் பிரதான பங்கு வகித்தது. இத்திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் நாட்டின் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தும் என்று மக்கள் எதிர்பார்த்தார்கள்.

அனைவரினதும் எதிர்பார்ப்பிற்கமைய 19வது திருத்தம் உருவாக்கப்பட்டது. தற்போது ஜனநாயகத்தை பாதுகாக்கும் உயர் நிறுவனங்கள் எவ்விதமான அரசியல் தலையீடுகளும் இன்றி சுயாதீனமாக செயற்படுவது நாம் பெற்றுக் கொண்ட பிரதான வெற்றியாகும்.

அரசியலமைப்பின் 19வது திருத்தத்தை கொண்டு ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தற்போது இத்திருத்தம் நாட்டுக்கு ஒரு சாபக்கேடு என விமர்சனங்களை முன்வைப்பதால் எவ்வித மாற்றங்களும் ஏற்படாது.

இவரது தான்தோன்றித்தனமான செயற்பாடுகளுக்கும், நிறைவேற்று அதிகாரத்தை தவறான முறையில் பயன்படுத்தியமைக்கும் 19வது திருத்தம் தகுந்த பாடத்தை கற்பித்தது.

அரசியலமைப்பிற்கு முரணாக உருவாக்கப்பட்ட 52 நாள் அரசாங்கத்தின் ஊடாக அதிகாரம் கொண்ட நீதித்துறை எந்த அளவிற்கு சுயாதீனமாக செயற்படுகின்றது என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நிறைவேற்று அதிகாரத்திற்கு அரசியலமைப்பின் 19ஆவது திருத்தம் தடைகளை ஏற்படுத்தியுள்ளது என்பது ஏற்றுக் கொள்ள வேண்டும். தான்தோன்றித்தனமாக செயற்படுவது தடைப்பட்டுள்ளது. உத்தேசிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி தேர்தலில் தான் மீண்டும் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடமாட்டேன் என ஆரம்பத்தில் குறிப்பிட்ட சுதந்திர கட்சியின் தலைவர் தற்போது மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் நிலைப்பாட்டில் உள்ளார் என அவர் இதன் போது தெரிவித்தார். (ம-3)


# கண்ணீர் அஞ்சலி

## கந்தசாமி புவனேஸ்வரி



பிறப்பு : 11.03.1952 இறப்பு : 28.06.2019

எமது பாடசாலை ஆசிரியர் கந்தசாமி ஹம்சன் அவர்களின் அன்புத் தாயார்

**கந்தசாமி புவனேஸ்வரி**

அவர்கள் 28.06.2019 நேற்று காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நல்லுறவு மன்றம்
யா/நவாலி மகாவித்தியாலயம்

(9408)


## பயங்கரவாதிகளுடன் எவ்வித தொட...

ஈஸ்டர் தாக்குதல் குறித்து விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட பாராளுமன்ற விசேட தெரிவுக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவுக்குழு முன்னிலையில் இவற்றைக் குறிப்பிட்டார்.

தெரிவுக்குழு அமைக்க வேண்டும் என நான் பாராளுமன்றத்தில் தெரிவித்தேன். நான் மட்டும் அல்ல ஏனைய உறுப்பினர்கள் பலர் தெரிவுக்குழு வேண்டும் என்று கூறினார்கள். பயங்கரவாத செயற்பாடுகளுடன் என்னை தொடர்புபடுத்தி பாரதூரமான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து இஸ்லாமிய பயங்கரவாதத்துடன் என்னை தொடர்புபடுத்தினர்.

ஆகவே என்மீதான குற்றங்களை நான் நிராகரித்து அதனை நிரூபிக்க வேண்டும். ஆகவே நானே தெரிவுக்குழு முன்னிலையில் வரவும் இணக்கம் தெரிவித்தேன். என்மீது குற்றம் சுமத்தி பொலிஸில் சிலர் முறைப்பாடுகளை செய்திருந்தனர். ஆனால் ஐ.எஸ் பயங்கரவாத தாக்குதலுடன் தொடர்புபட்ட சஹ்ரானை நான் வாழ்கையில் எப்போதும் பார்த்ததில்லை. இந்த தாக்குதல் இடம் பெற்று ஊடகங்களில் வெளியிடப்பட்ட புகைப்படத்தின் மூலமாகவே சஹ்ரானை முதலில் பார்த்தேன். இதற்கும் எனக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றார். (ம-3)

## சகல முஸ்லிம்...

யில் முஸ்லிம் மக்களுக்கு எதிரான கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றது. உயிர்த்தஞாயிறு தாக்குதல்களை மேற்கொண்ட குழுவை முஸ்லிம் பயங்கரவாதிகள் என ஒட்டு மொத்தமாக குற்றஞ்சாட்டுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த மிலேச்சத்தனமான தாக்குதல் சம்பவங்கள் பெரும் துயர் மிக்கதாக அமையப்பெற்றிருந்து.

ஒருமித்த கொள்கையொன்றை உருவாக்க வேண்டுமானால் மீண்டும் இன, மத ரீதியான அடிப்படைவாத செயற்பாடுகளுக்கு இடமளிக்கக்கூடாது என்றும் அவர் குறிப்பிட்டார். (ம-3)


**கொவிசெத**
திகதி 2019.06.28
சீட்டிழுப்பு இலக்கம் 2162
A 09 50 52 53

**மஹஜன சம்பத**
திகதி 2019/06/28
சீட்டிழுப்பு இலக்கம் 3948
T 3 3 8 4 2 0

**தன நிதானய**
திகதி 2019-06-28
சீட்டிழுப்பு இலக்கம் 167
U 23 49 56 60

**மெகா பவர்**
திகதி 28/06/2019
சீட்டிழுப்பு இலக்கம் 399
U 15 1 36 57 77

துரித தபால்கள் பொதிகள் சேவை
11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு UK - 600/= Germaney - 700/= France - 700/=
திருமுருகன் கொம்நெற்
321, K.K.S.Road, Jaffna.
கிளை : திருநெல்வேலி, நெல்லியடி. 0777 554 528
(9192)

சாவகச்சேரியில்...
வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை.
UK - 525.00, Germany - 675.00, France - 830.00
நிபந்தனைகள் எதுவும் இல்லை
அருள்
இல.1. NDB வங்கிக் கட்டடம். தபாற்கந்தோர் வீதி. சாவகச்சேரி.
076 443 1576
(C-6615)

CERTIFICATE IN HOTEL AND RESORT MANAGEMENT
July 2019 க்கான புதிய பிரிவு ஆரம்பம்
(C-6789)

G.C.E O/L உடன்
TUTION FEE 30,000/- ONLY
CTHI
CANADIAN TOURISM & HOSPITALITY INSTITUTE
1544, KKS ROAD, KONDAVIL, JAFFNA
0771041923 | 0213146171

பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு
தரம் - 30 வயதிற்கு உட்பட்டவர்கள் - O/L, A/L தகுதியானவர்கள் விரும்பத்தக்கது
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் V2 TRAVELS
(C-6728)
16/1, மருதனார்மடக் கட்டடம், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 0768226243 v2vacancies@gmail.com

காண்டம் பார்த்தல்
உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிக வும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.
தொடர்பு: 076 835 1932, 021 223 2222 (உரும்பிராய்)
(9405)

வீடு விற்பனைக்கு
வட்டு.கிழக்கு வட்டுக்கோட்டை குளிப்பன் வீதியில் 1 3/4 பரப்புடைய வீடு சகல வசதி களுடனும் விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்மானிக்கலாம்.
077 803 7876
(9407)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
(C-6532)
●மானிப்பாய் 0768226240
●யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ●சாவகச்சேரி
●நெல்லியடி ●பருத்தித்துறை ●வல்வெட்டித்துறை
V2 TRAVELS

மலேசிய வேலைவாய்ப்பு
மெஷின் டெக்னீஷியன் 80 பேர் 1130 - 2200RM ரூ.47,460 முதல்
எலெக்ட்ரீஷியன் 80 பேர் ரூ.92,400 வரை
(C-6806)
ஜூலை
உடனடி அனுமதி கடிதம்
0777 324 004, 077 00 38 215, 021 221 9 221
Emerald Isle
221-1/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
email: jaffna@emeraldisle.lk
License No. 2268 www.emeraldisle.lk


## நாட்டை...

தரத்துவத்துடன்வாழக் கூடிய ஒழுக்கப் பண் பாட்டையும் அமை தியையும் கொண்ட ஒரு நாட்டை கட்டி யெழுப்புவதற்கு நாட்டின் அனைத்து பிள்ளைகளுக்கும் சிறந்த கல்வியை பெற்றுக்கொடுப்பது அவசியமாகும்.

நாட்டில் இன ரீதியாக பிரிந்து வேறு பட்டு பிரச்சினை களை ஏற்படுத்திக் கொள்வது எந்தவொரு இனத்திற்கும் நல்ல தல்ல.

நாட்டின் அனை த்து இனங்களும் சகோதரத்துவத்துடனும் ஐக்கியத்துடனும் வாழக்கூடிய அபி விருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கு தான் அர்ப்பணிப்புடன் உள்ளதாக அவர் குறிப்பிட்டார். (ம-3)


Techno World
(வெலிங்டன் சந்தி, லிங்கன் கூல்பார் அருகாமை - யாழ்ப்பாணம்)
A/L 2021
தொழில்நுட்பப் பிரிவு
மாணவர்களுக்கான கல்விச் சுற்றுலா...
கண்டி நுவரெலியா
(ஆராய்ச்சி நிலையம், பண்ணை, Tissue Culture Lab பார்வையிடப்படும்.)
தொடர்புகளுக்கு : 077 017 5346, 077 170 3549

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
➢ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
➢ அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
➢ யாரும் படிக்கலாம். www.ambafrance-lk.org
(9336)
021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

Personal Class
இரசாயனவியல் (A/L) 2019, 2020, 2021, Repeat Batch கடந்த கால Past Papers கற்பிக் கப்படும். சி.அங்கதன் B.Sc (Chem. Spl)
தொடர்பு: 0771901245
(9406)


## மன்னார் மனித...

வாசகர் கணேசராஜா முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது, எதிர்வரும் செப்டம்பர் மாதம் 2 ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்து நீத வான் உத்தரவிட் டுள்ளார். மனித எச் சங்கள் அல்லாத ஏனைய சான்றுப் பொருட்கள் பொலி ஸாரின் உதவியு டன் அகழ்வில் ஈடு பட்டகளனிபல்கலைக் கழக பேராசிரியரி டம் கையளிக்கப்பட வேண்டும் என ஏற் கனவே நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

நீதிமன்ற காவ லில் வைக்கப்பட்ட தடயப்பொருட்கள் எடுக்கப்பட்டு, அவற் றில் இருந்து மனித எச்சங்கள் தவிர்ந்த ஏனையதடயப்பொருட் கள் ஒரு பெட்டிக்குள் அடைக்கப்பட்டன.

தடயப்பொருட்களை பிரிக்கும் நடவடிக் கைக்கு சட்ட உதவி தேவை என நேற் றைய வழக்கு விசா ரணையின் போது சட்ட வைத்திய அதி காரி சமிந்த ராஜ பக்ஷ கோரிக்கை விடுத்தார்.

அதற்கமைய, இந்த நடவடிக்கை யின் போது சட்ட மா அதிபர் திணைக் களத்தின் சார்பில் சட்டத்தரணி ஒரு வரை நியமிக்க உத் தரவிடுமாறு கோரி க்கை விடுக்கப்பட் டுள்ளது. இந்த கோரிக் கையை ஏற்றுக் கொண்ட நீதிபதி வழக்கை ஒத்தி வைத்தார். (ம-3)

# மரண அறிவித்தல்

## கோவிந்தன் கந்தர்

பிறப்பு 16 . 04 . 1937



இறப்பு 27 . 06 . 2019

வரணி இயற்றாலை, வரணியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கோவிந்தன் கந்தர் அவர்கள் (27.06.2019) வியாழக்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோவிந்தன் - சின்னப்பிள்ளை தம்பதி களின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்தம்பி - கண்ணகையின் பாசமிகு மருமகனும், கண்ணகை மற்றும் காலஞ்சென்றவர்களான தெய்வயானை, சின்னத்தம்பியின் அன்புச் சகோதரனும், இலட்சுமியின் அன்புக் கணவரும், கந்தசாமியின் பாசமிகு மைத்துனரும், புஸ்பகலாதேவி (லண்டன்), விக்னேஸ்வரன் (சுவிஸ்), விமலாதேவி (ஆசிரியர் - யா/கல்வியங்காடு HTMS), சசிகலாதேவி (ஆசிரியர், யா/வரணி மத்தியகல்லூரி), விஷ்ணுமூர்த்தி (சுவிஸ்), விஷ்ணுபவான் (லண்டன்), காலஞ்சென்ற விமலேந்திரன், விஷ்ணுகரன் (கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகஸ்தர் கிளிநொச்சி), சதீஸ்வரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுமதி (சுவிஸ்) காலஞ்சென்ற இராசேந்திரம், விக்னேஸ்வரன் (தபால் ஊழியர் தபால் கந்தோர் யாழ்ப்பாணம்), விக்னேஸ்வரன் (தலைமைப்பீட சமுர்த்தி முகாமையாளர் - மருதங்கேணி), கார்த்திகா (சுவிஸ்), ஹம்சிகா (லண்டன்), நிரஞ்சனி (ஆசிரியர் - யா/கரவெட்டி ஸ்ரீ நாரக வித்தியாலயம்), சோபிகா (கனடா), ஆகியோரின் அன்பு மாமனாறும், றூபா, பாதுஷன், விதுசன், விபுல், நிவேதிகா, கபிஷன், உமாவதனன், சஹானா, அனுஷ்கா, டினோ, நிஷானா, டக்சிகா, புருஷோத், சங்கீத், சாஷினி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (30.06.2019) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக ஊற்றல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (C-6799)

வரணி இயற்றாலை. தொலைபேசி இல : 077 361 2740, 076 296 2477 தகவல் : குடும்பத்தினர்


INFORMATION TECHNOLOGY PARK
Jaffna, Srilanka
Under the purview of the Ministry of Digital Infrastrucature & Information Technology
ITP
MPCS Building
127,K.K.S.Road, Jaffna, Srilanka
Office :- 021 222 3641
Fax No :- 021 222 3643
அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது
JUNE BATCH
Dip.in Microsoft Office
Dip.in Desktop publishing
Dip.in information Technology
Dip.in Computer Programming
Online Course
Dip.in PC Application & Office Management
Languages
VB.net PHP C/C++
C# Java
Workshops
Internet & e-mail
Webpage Designing & Development
விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம்
வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம் :- 12.07.2019
வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் :- 14.07.2019
CENTRE FOR INFORMATION TECHNOLOGY
- Executive Officer -
(C-6792)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.06.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.